ரிஜிஸ்டர் நெ. 2041. தனிப்பிரதி விலை ஒரு அணா.

குடி அரசு

வருட சந்தா முன் பணம் — ரூ. 3—0	ஞாயிறுதோறும் வெளிவரும்.	வியாபாரிகள் விளம்பரம் அங் 1 க்கு ரூ. 1.
6-மாத சந்தா ,, — ,, 1—12		கோர்ட் விளம்பரம் அங்குலம் 1 க்கு ரூ. 2.
வெளி நாட்டிற்கு ,, — ,, 5—0		நீடித்த விளம்பரத்துக்கு தனி விகிதம்

மாலை 8. | ஈரோடு, ஆங்கிரஸ-ஸு ஆனி-மீ 20-உ (3—7—1932) | மலர் 10.

பலமுள்ள வீரபுருடனாக

குமரனாக, வாலிபத்தன்மையடைய, ஆண் பெண் மன
மோத்துவாழ, இல்லற இன்பம் அனுபவிக்க, புத்திர
பாக்கியம் பெற வழியில்லையென வருந்துபவர்கள்

தங்கபஸ்பம்.

சாப்பிடுங்கள்.

அபாரதாது புஷ்டியும், பலமும், பசியும், ரத்தவிர்த்தியும் உண்டாகும் இல்வாழ்வில் அதியற்புத சுகந்தரும்.

48-நாள் பஸ்பம் விலை ரூ. 20. 24-நாளைக்கு ரூ. 10.

மாதர்களுக்கு

இதுதான்வேண்டியது

கெர்ப்ப எண்ணெய்

மாதாந்தர காலத்தில் உண்டாகும் வயிற்றுவலியை உடனே நிறுத்தும். சரியாய் பஹிஷ்டையாகும். கெர்ப்பாசயம் சினைப்பை இவற்றிலுள்ள சகல கெடுதல்களும் நீங்கி கெர்ப்பம் உண்டாகும் மிக்க அநுபவமானது.

புட்டி 1-க்கு ரூ. 2.

அந்நிய தேசவாசிகள் மருந்திற்கு ஆர்டர் செய்யும்போது முன்பணம் ரூ. 5 அனுப்பவேண்டும்.

வைத்திய ஆசிரியர் C. மலையப்பசாமி, நித்தியானந்த மெடிக்கல் ஹால், பழனி S. I.

தாது புஷ்டிக்கு

"கெய்ரோடைன்"

சாப்பிடுங்கள்.

இந்தியா கவர்ண்மெண்டில் ரிஜிஸ்தர் செய்தது. நபும்சகர்களுக்கும் அளவு மீறிய தாதுபுஷ்டி தரும். உண்மையான நற்சாட்சிகளடங்கிய பெரிய புத்தகம் இனமாக அனுப்புகிறோம். விலாசம்:

ஆர். எஸ். பதி அன்கோ (ரிஜிஸ்டர்டு) மதுரை.

பண்டிதர். உயர் திரு. சாமி சிதம்பரனார் அவர்களியற்றிய

மாதர் சுதந்திரம் அல்லது

பெண் மக்கள் பெருமை.

என்னும் அரிய நூல் விலை அணா 8. (எட்டு)

கிடைக்குமிடம்:—"குடி அரசு" புத்தகாலயம் ஈரோடு,

இம்பீரியல் பிரஸ், மாயவரம்.

"குடி அரசு"

ஒவ்வொரு வருஷத்திய குடி அரசும் தனித்தனி வால்யம்களாக பைண்ட் செய்யப்பட்டு விற்பனைக்குத் தயாராயிருக்கின்றன. முதல் வருடம் முதல் ஆறும் வருஷம் வரையில் உள்ள ஆறுவால்யங்கள் இப்பொழுது கிடைக்கும் ஏழாம் வால்யம் பயிண்டாகிக்கொண்டிருக்கிறது. வால்யம் ஒன்றுக்கு விலை ரூ. 4—0—0.

"ரிவோல்ட்"

ரிவோல்ட் (ஆங்கிலப்பத்திரிகை) முதல்வால்யம் நேர்த்தியாகப் பயிண்டு செய்து விற்பனைக்குத்தயாராயிருக்கிறது. வால்யம் ஒன்றுக்கு விலை ரூ. 4—0—0.

மானேஜர்
"குடி அரசு"
ஈரோடு.

விற்பனைக்காக நம்மிடம் உள்ள இதர பதிப்புப் புஸ்தகங்கள்.

1. இயற்கைமதம் ... 0—8—0
2. சிதம்பர ரகசியம் ... 0—8—0
3. சுதந்தரப்போர் அல்லது உப்பள முற்றுகை 0—4—0
4. பகுத்தறிவேவிடுதலை அல்லது ஜீவாத்மா இல்லை (சித்திரப்படங்களுடன் 100 பக்கங்களுக்கு மேல் உள்ளது) ... 0—6—0
5. மாதர் சுதந்தரம் or பெண்மக்கள் பெருமை 0—8—0
6. ஆராய்ச்சி அணிகலம் ... 0—12—0
7. சென்னை லோக்கல் போர்டு ஆக்ட் ... 2—0—0
8. மோட்டாக்கார் இயந்திர சாஸ்திரமும் அதன் அனுபோகப்பயிற்சியும் (50 படங்களுடன் 200 பக்கங்கள் அடங்கிய பெரிய புஸ்தகம் ஆர்டருடன் 4 அணு ஸ்டாம்பு அனுப்பவேண்டும்) ... 2—0—0

சுயராஜ்யம் யாருக்கு ... 0—1—0
சாமிகளின் அடிமைகள் ... 0—12—0

குறிப்பு:—புஸ்தகங்களுக்கு ஸ்டாம்பு வைத்து அனுப்புகின்றவர்கள் புஸ்தக கிறயத்துக்கு மேலாக புஸ்தகம் ஒன்றுக்கு ஒன்றரை அணு ஸ்டாம்பு அனுப்பவேண்டும். 8 அணுவுக்குக் குறைந்த ஆர்டருக்கு வி. பி. அனுப்பப்படமாட்டாது. ஆர்டர்களுக்கு பாதித்தொகையாவது முன்பணம் அனுப்பவேண்டும்.

'குடி அரசு' 'ரிவோல்ட்' மாலைகள்.

குடி அரசு மாலைகள் கோர்வையாக முதல்வருஷத்திலிருந்து சென்ற வருஷம்வரை 6 வருஷகாலம் வெளியான மலர்களைத்தனித் தனி வருஷமாக பைண்ட் செய்து புஸ்தகமாக வைக்கப்பட்டிருக்கிறது.

ஒவ்வொரு வருஷமாலை கிரயம் ரூ. 4—0—0
ரிவோல்ட்டு ஒருவருஷமாலை பைண்ட் செய்தது கிரயம் ரூ. 4—0—0

மானேஜர், குடி அரசு புத்தகாலயம்,
ஈரோடு.

சுயமரியாதை இயக்கப் பத்திரிகைகள்.

'தமிழன்'

வாரப்பதிப்பு
உள்நாடு வருடசந்தா 3—0—
வெளிநாடு " 4—0—0
ஆசிரியர்: ஜி, அப்பாதுரையார்,
விலாசம்:—
மானேஜர் "தமிழன்"
ஆண்டர்சன் பேட்டை P. O.
கோலார் தங்கவயல் (S. I.)

முன்னேற்றம்.

வாரப்பதிப்பு.
சிங்கப்பூரிலிருந்து வெளிவருவது
உள்நாடு சந்தா $. 5—0—0
இந்தியாவுக்கு ரூ. 8—0—0
ஆசிரியர்:- கோ. சாரங்கபாணி.
விலாசம்:—
மானேஜர்: "முன்னேற்றம்"
152 சிலிகிரோட், சிங்கப்பூர்.

"சமதர்மம்"

சுயமரியாதை மாதப் பத்திரிகை.
ஆசிரியர்:— ஆர். ராஜகோபாலன்
வருடசந்தா உள்நாடு 1—0—0.
, வெளிநாடு 1—8—0.
மானேஜர்,
சமதர்மம் ஆபீஸ்,
230-30 வது வீதி ரெங்கூன்.

LEPROSY, LEUCODERMA PATCHES SYPHILITIC ERUPTIONS, ECZEMA, etc.

No Matter Hereditary or self-acquired. No risk of injection. Cured absolutely. For particulars please write with detailed descriptions of the disease in English.

Post Box No. 11413,
Calcutta.

Read. *The 'Citizen'* and become a True Citizen.

The only Monthly Magazine in India purely devoted to the civic, Social and economic Interests of the Indians. Annual Subscription Rs. 2—0—0.

For advertisement please apply to:—
The Publisher
The Citizen
86, East Andar Street,
Teppakulam, Trichy.

சத்தியாக்கிரகமா? சண்டித்தனமா?

மேற் கண்ட 6—9—31 ந் தேதி "குடி அரசு"ல் வெளியான "சத்தியாக்கிரகமா சண்டித்தனமா" என்ற தலையங்கத்தை புத்தக ரூபமாக வெளியிட்டிருக்கிறோம். இதை விநியோகிக்க விருப்பமுள்ள சுயமரியாதை அன்பர்கள் முன் பணமனுப்பிப் பெற்றுக்கொள்ள வேண்டுகிறோம். 100 புஸ்தகம் விலை ரூ. 0—12—0.

1 ரூ. ஸ்டாம்பு அனுப்பினால் 100 புஸ்தகம் புக் போஸ்டில் அனுப்பப்படும். மானேஜர்,
குடி அரசு, ஈரோடு.

கோஷாயி பாதுஷா மாத்திரை.

விபசாரத்தினால் ஜெனித்த சர்வரோக சங்காரணி.

Dr. T. K. V. Chalam.

ஆண், பெண் உபயோகிக்க அனுபவத்தில் மேன்மை பொருந்தியது.

கிரந்தி, கள்ளிப்பூகிரந்தி, நொணக்காய்கிரந்தி, அரிகிரந்தி, சொரிகிரந்தி, பெருங்கிரந்தி, யானைக்கிரந்தி, ஆமைக்கிரந்தி, அக்கரகிரந்தி, என்னும் 18 வித கிரந்திகள், முளிச்சூலை, முழங்கால் சூலை, கை, கால் பிடிப்புகள், வெள்ளை, வெட்டை, அரையாப்பு, மர்மஸ்தான இரணங்கள்; காது, கண், மூக்கு, புருவம், இவைகளை அரித்துக்கொண்டு போகும் இரணங்கள், புரையோடிய இரணங்கள், கொருக்கு முதலிய நோய்கள் ஜெனித்து தினத்திற்கு தினம் இரத்தத்தை முரித்து முகவசீகரத்தை தேய்வு பிறைபோல் குறைத்து வருவது. விசாரலீலையில் ஈடுபட்ட பக்தர்களுக்கும், அணடிய நேயர்களுக்கும் அனுபவசித்தி.

மேற்கண்ட வியாதிகளுடன் தேசித்துவரும் சகோதர சகோதரிகள் 7-நாள் 14-நேரம் கோஷாயி பாதுஷா மாத்திரையை சாப்பிட்டால் மேற்கூறிய ரோகங்கள் விலகி பூரண குணம் பெறக் கூடிய கோஷாயி பாதுஷா மாத்திரை 14 கொண்ட சீசா 1-க்கு ரூ. 3—0—0. உபயோகிக்கும் விதம் மருந்துடன். வி. பி. பாக்கிங் சார்ஜ் வேறு. சிலோன் முதலிய மலாய் வாசிகள் ஆர்டருடன் ரூபாய் 1—12—0 சேர்த்து முன்பணம் அனுப்பி வைக்கவும். அப்படி அனுப்பிவைக்காத ஆர்டர்களை அங்கீகரியா.

மேகரோக சந்ததியார்களுக்கு ஜெனித்த மேகம் 21, குஷ்டம் 13-க்கும் சோஷாயி மேக எண்ணையை உபயோகியுங்கள்.

உதவி டாக்டர் T K V Chalam.

டாக்டர் B. A. எதிராஜ்,
[கால்ராபைரி]
கோஷாயி வைத்தியசாலை,
தென்னூர், திருச்சி.

இருக்க இடமின்றி ஏழைகள் தவிக்க மாடமாளிகைகளும், கூடகோபுரங்களும் சாமிகளுக்கு ஏன்?

மன்னார் குடியில் கூடிய தஞ்சை ஜில்லா இரண்டாவது சுயமரியாதை மகாநாட்டின் திறப்பாளர் தோழர் முத்துசாமிவல்லத்தரசு பி. ஏ. பி. எல். அவர்கள் செய்த சொற்பொழிவு.

சுயமரியாதைச்

கோதரிகளே! சகோதரர்களே!!

இயற்கை வளமும், செயற்கை நலமும் செறி து செழுமையும் கொழுமையும் விந்து பேரழகு வாய்ந்த மன்னார்குடி என்னும் மாபெரும் பதியிலே ஒன்று குழுமியுள்ள தஞ்சை ஜில்லா இரண்டாவது சுயமரியாதை மகாநாட்டைத் திறந்துவைக்கும் பேற்றை எனக்கு வழங்கிய வரவேற்புக் கழகத்தார்கட்கும், ஏனைய அன்பர்கட்கும் நன்றியறிதலான வணக்கத்தைச் செலுத்துகிறேன். இப்பெரும் பொறுப்பு வாய்ந்த கடமையை நன்கு முடிவு செய்யப்போதிய ஆற்றலும் அனுபவமும் எனக்கு வாய்த்திலவென்று நான் சிலபோது எண்ணியும், அன்பர்களின் ஆதரவின் வளர்ச்சியாலும், மன்னார்குடியின் மக்கள் ஆவல் பெருக்கத்தினாலும், உங்களிடையில் என்பணியை ஈடேற்றும் ஆற்றலுடன் சுயமரியாதையில் ஈடுபட்டுள்ள நன்மக்கள் பலரைக் கண்டின்புறும்பேறு பெற்றதைக் குறித்து பெருமகிழ் வெய்துகிறேன்.

தொன்று தொட்டு திராவிட மக்கள் வறுமையாலும், சிறுமையாலும் சிதைக்கப்பட்டு இதுகாறும் ஒருவித விமோசனமின்றி துன்பப்படும் நிலைமைக்கு கர்த்தா யாவர் யென வினவுவது அவசியமானது. பூமியின் செழிப்பம் இல்லாததினாலோ, மக்களின் சங்கியை சிறுத்து விட்டதனாலோ, நாட்டின் விஸ்தீரணக் குறைவினாலோ, அல்லது குடிகளின் ஆற்றல் இகழ்ச்சியுடையதனாலோ ஒருநாட்டிற்கும், அதன் மக்களுக்கும் வறுமையும் தாழ்மையும் ஏற்படுகிறதென்பதைக்காண்கிறோம். மேற்சொன்ன காரணங்களில் நம் நாட்டிற்காவது மக்களுக்காவது ஒன்று கூடக்கிடையாது. நாகரீகமும், அனுதாபமும் வாய்ந்த அரசாங்கத்தின் பூரணக்கருணையும், அபரிமிதமான கலாசாலைகள் தற்கால நிலைமைக்கேற்றவாறு உழைக்கும் தன்மையும், தேசிய விடுதலைக்கு தான் தான் என்று உரக்கக்கூவிப்பாடுபடும் காங்கிரஸ் முயற்சியும் விழலுக்கிறைத்த நீர்போல் ஒருவித குணமுமின்றி ஒளிமழுங்க, மகானின் துயரம் நாள் தோறும் அதிகரிக்கக்காரணமென்ன?

பூருவும் சுயநலம் பாராட்டி வாழ்கின்ற ஆரிய வர்க்கத்தைச்சேர்ந்த பார்ப்பனர்களால் உண்டாக்கப்பட்டு உலவ விடப்பட்டிருக்கும் பிரயோஜனமற்ற பார்ப்பன மதாச்சாரங்களும், அவைகளைப் பரிபாலிக்கவிருக்கும் பார்ப்பன புரோகிதர்களும் தான் மக்களின் வாழ்வு தேய்ந்து குன்றக்காரணங்கள்.

ஆதியில் ஆரியர்கள் ஆடுமாடு மேய்த்துக்கொண்டு அவற்றின் மேய்ச்சலுக்குப் புல்வளர்ந்த நிலங்களைத் தேடித் திரிந்தபடியாகவேயிருந்து மெதுவாக இந்திய நாட்டினுள் புகுந்தார்கள். நாலாபக்கங்களில் ஆறுகளையும் வயல்களையும் செழுமையையும் கண்ணுற்று இந்நாட்டிலே தமது வயிற்றுப்பிழைப்பிற்கு வழி தேடும் கருத்துடையவராய் பலவகையிலும் நாட்டிலுள்ள திராவிட மக்களின் வாழ்வை சிதைத்தனர். ஆவின் இறைச்சியைத்தின்று உயிர் வாழ்தல் அவர்களுக்கு வழக்கமாயிருந்தது, அதற்கொப்ப இன்றும் வடநாட்டிலுள்ள பார்ப்பனர்கள் மீன் முதலியவற்றின் ஊனைத்தின்று வாழ்கின்றார்கள். தென்னாடாகிய இத்தமிழகத்தில் குடியேறிய ஆரியர்கள் மட்டும் இங்குள்ள புலால் உண்ணாதவர்களின் ஒழுக்கத்தைக்கண்டு தாமும் தமது புலைத்தொழிலைக் கைவிட்டு புதிய நடையைக் கைக்கொண்டொழுக ஆரம்பித்தனர்.

இப்பார்ப்பனர்கள் தாங்கள்தான் உயர்ந்தவர்களென்றும், மற்றவர்கள் தாழ்மைப் பட்டவர்களென்றும் நிலைநாட்ட தாங்கள் இறைவனது மேலுருப்பாகிய வாயிலிருந்தும், மற்றையோர் கீழ் உறுப்புக்களாகிய தோள், தொடை, பாதம் முதலியவற்றிலிருந்தும் தோன்றினவரென்று அவர்களால் இயற்றப்பட்ட நூல்களை ஆதாரமாகக்கொண்டுரைக்கின்றார்கள். எவ்வகைப்பட்ட உயிரும் தாயின் கருப்பையினின்று வெளிப்படுதல் எங்கும் எக்காலத்தும் நிகழ்ந்து வருகிறதேதவிர ஆரியர்கள் சொல்லும் வண்ணம் இயற்கையமைப்புக்கு மாறாக வாயிற் பிறத்தலும், தோள், தொடை, அடி என்னும் உறுப்புக்களில் பிறத்தலும் எவ்விடத்தும் நிகழக்காணோம். இஞ்ஞான்றுள்ள மக்களைப்பல வகைகளாகப் பிரிவினை செய்து எல்லாமக்கட் கூட்டத்தைக் காட்டிலும் உயர்ந்தோரென இருமாப்பெய்தும் இருபிறப்பாளர்களான பார்ப்பனர்கள் ஒவ்வொரு வகுப்பாரும் செய்யவேண்டிய அலுவல்களை தங்கள் வயிற்று வளர்ப்பிற்கும் கஷ்டமின்றி வாழவும் நிகுதி செய்து வைத்தனர். 'பிராமண வர்ணத்தார் ஒருஜன சமூகத்தின் அறிவுச் செல்வத்திற்குக் காவலாளிகள். அறிவுப் பயிருக்கு உழவர்கள். அவரவர் தத்தம்மால் இயன்ற சாஸ்திரங்களைப் படித்து வைத்துக்கொண்டு அவற்றை வெவ்வேறு வர்ணத்தாருக்கு உரிமை நோக்கிக்கற்பிக்கவேண்டும். அவ்வாறு கற்பிப்பதற்குத் தமது உணவு மட்டிற்கு மேற்பட்ட எவ்விதமான கிரயமும் வாங்கலாகாது. எவன் வீட்டில் மறுநாள் ஆகாரத்திற்கு இன்றே நெல் சேர்த்து வைக்கப்பட்டிருக்கிறதோ அவன் பிராமணன் ஆகமாட்டான்' என்று யாக்ஞவல்கியர் சொல்லுகிறார்.

இப்போதையப் பார்ப்பனர்கள் தமக்குரிய ஆறு வகைத் தொழில்களை அறவே விட்டொழித்து ஆங்கிலம் கற்று தம்மால் மிலேச்சர்களாகக்கருதப்படுவர்களிடம் வேலைக்கமர்ந்து அவர்கள் ஏவிய பற்பல தொழில்களையும் செய்து வருகின்றார்கள். இங்ஙனமாகத் தமக்குரிய தொழில்களை விட்டு, அரசரின் கீழ் அலுவல் பார்ப்போர் பார்ப்பனராக மாட்டாரென்று மனுஸ்மிருதி வற்புறுத்திக் கூறுகின்றது. கடல் கடந்துசென்று பொருள்தேடியும் வந்து தம்மினத்தவரோடு உறவு கலந்து பார்ப்பனரில் உயர்ந்தோராய்க் கருதப்படுதலை நாம் காண்கின்றோமல்லவா? உணவு சிற்றுண்டி விற்றலாலும் சோதிடம் சொல்வதாலும், சம்பளம்பெற்று பிறருக்கு ஊழியம் செய்தலாலும், வயிறு வளர்ப்பதே பார்ப்பனர்களுக்கு இயற்கையாய் வந்து விட்டதுடன் தம் வயிறு வளர்த்தற்கு எத்தனை இழிவான தொழிலாயினும் அதனைச் செய்தற்குப் பின்னடையாராய் தம்மை; வீணே உயர்த்' பிறரது நன்மையைச் சிறிதும் பொருட்படுத்தாமல் காலம் வாய்த்தபோதுலாவவேண்டுவதை லாவிக்கொண்டு பிறர்க்குத்தீமை செய்வதிலும் முனைந்து நிற்கின்றனர்.

செயல்பற்றியல்லாது வெறும் பிறப்பளவில் மக்களை உயர்ந்தோர் தாழ்ந்தோர், தீண்டப்படுவோர், தீண்டப்படாதார் என்ற கூற்றுக்கு ஆளாக்கி, சாதி, வேற்றுமையாகிய கொடிய நோயை மனுஸ்மிருதியென்னும் பாழும் குழியினின்றும் தோற்றுவித்து இந்து மக்கட்குழாமென்னும் உடம்பினுள் நுழையவிட்டவன் இவ்வாரியப் பார்ப்பானே ஆவன். இவ்வாறு உண்டாகிய சாதி நோய் நம் தமிழ் நாட்டில் வட நாட்டைக் காட்டிலும் கொடுமையாகக்காணப்படுகிறது. வடநாட்டின்கண் ஒரே அறையில் பார்ப்பனரும், பார்ப்பனரல்லாதாரும் ஒருவரை ஒருவர் காண அருகிலிருந்து உணவு கொள்ளுதலைக்காணலாம். ஆனால் தென்னாட்டிலோ உணவெடுக்கும் இடங்களில் ஒருவரையொருவர் பாராமல் இனம் இனமாய்ப்பிரிந்து அதனை விழுங்குதல்வேண்டும் திருக்கோவிலுள் இன்னின்ன வகுப்பினர்கள்தான் போகலாமென்றும் மற்றவர்கள் நுழையக்கூடாதென்றும் கூக்குரலே எங்கும் நிரம்பி ஒன்றோடொன்று ஓயாமற் சண்டையிடும் ஓநாயும், புலியும், கரடியும், சிங்கமும், நிறைந்த பாழுங்காடாக இந்நாட்டினை ஆக்கி விட்டனர். சாதிவேற்றுமை என்னும் இக்கொடிய என்புருக்கி நோய் தென்னாட்டாருக்கே உரியதாய் ஆங்காங்கு பெரிதும் பரவி விட்டது.

நமது நாட்டின் பண்டைக்காலத்தில் பிறப்பால் உயர்வு தாழ்வு கருதப்படவில்லை. அவ்வேற்றுமை இடைக்காலத்தில் ஆரியப் பித்தர்களால் புகுத்தப்பட்டு நாட்டைப் பெருஞ்சனியாய்ப் பீடித்து நிற்கிறது சிறப்பில் உயர்வு தாழ்வு நேர்தல் இயல்பு, வேத முதலாய நாட்களில் பிறப்பளவில் சாதிவேற்றுமை பாராட்டுவது அறியாமையென்றும், அங்கனம் பாராட்டுவாரை செருக்கில் ஆழ்த்தி பெருந்துன்ப சுழலில் புகுத்தி வருந்துமென்றும், வற்புறுத்திச் சொல்லப்பட்டிருக்கின்றனவே யல்லாமல் சாதிபற்றிய உயர்வு தாழ்வுகள் சிறிதேனும் சொல்லப்படவில்லை சாதிக்கொடுமை மிகுந்திருந்தவேளையில் அக்கொடுமையைப்போக்க எழுந்த தமிழ் நூல் ஒன்றுண்டு. அதுவே பெரிய புராணம் என்பது. அந்நூல் ஆராய்தல் இன்றியமையாதன. பெரிய புராணத்தில் கலப்பு மணம், உடனுண்ணல் பார்ப்பனரல்லாதாரைக்குருவாகக்கோடல் முதலிய பல சீர்திருத்தங்கள் பரவிக்கிடக்கின்றன இன்னும் நமது நாட்டில் அவ்வப்போது தோன்றிய பெரியோர்கள் சாதி வேற்றுமையைக்கடிந்திருக்கிறார்கள். திருவள்ளுவர், நால்வர், ஆழ்வார் முதலியோர் அக்கொடுமையை மறுத்துரைத்த செம்மொழிகள் பல உள.

'பிறப்பொக்கும் எல்லாவுயிர்க்கும்
சிறப்பொவ்வா செய்தொழில் வேற்
றுமையான்'

'சாத்திரம் பேசும் சழக்கர்காள்
கோத்திரமும் குலமுங்கொண்டென்
செய்வீர்'

'சாதி குலம் பிறப்பென்னும் சுழி
பட்டுத்தடுமாறும்
ஆதமிலி நாயேனை அல்லறுத்தாண்
டானே'

இச்செம்மொழிகளை நோக்குங்கள்.

மேல் உடுத்த உடையும், பூணூல் உச்சிக்குடுமிகளையும் களைந்து விட்டால் இவன் பார்ப்பனனென்று அறிதல் இயலாது. இங்ஙனமே அரசர், வேளாளர் முதலியோர் தாம் தாம் வேற்றுமையைக் காட்ட அணிந்திருக்கும் அடையாளப் பொருள்களை அகற்றிவிட்டால் அவர்களை

(தொடர்ச்சி 18ம் பக்கம் பார்க்க

மன்னார்குடியில் கூடிய தஞ்சை ஜில்லா இரண்டாவது சுயமரியாதை மகா நாட்டின் வரவேற்புத்தலைவர் தோழர்

எ. ஆறுமுகம் அவர்கள்

சொற்பொழிவின் சுருக்கம்.

தோழர்களே,

நமது ஜில்லாவில் இரண்டாவது முறையாக நாம் உடன் செய்ய வேண்டியதென்ன? என்ற பெரும் கவலையுடனும், ஆர்வத்துடனும் இங்கு விஜயம் செய்திருக்கின்ற உங்களை வரவேற்கிறேன். உங்கள் வரவு நல்வரவாகுக.

நூறு மாதங்களுக்கு முன்பு தமிழ் நாட்டில் நமதியக்கம் போல ஓர் சமூக சீர்திருத்த இயக்கம் தோன்றுமென்று நம்மில் எவரும் நினைத்ததில்லை. அதைப் போன்றே இந்த நூறு மாதங்களில் நாம் செய்த வேலையளவு எந்த இயக்கத்துக்காரரும் செய்ததில்லை என்பதை மகிழ்ச்சியுடன் ஞாபகமூட்டி உங்களை வரவேற்க விரும்புகிறேன்.

நமது இயக்கத்தில் தலைவரென்றோ தொண்டரென்றோ, உயர்ந்தவரென்றோ, தாழ்ந்தவரென்றோ கிடையாதென்பதையும், நமதியக்கம் எந்த ஒரு தனி கட்சியையோ தனி மனிதனையோ நம்பி வாழவில்லை என்பதையும் நாம் படிப்படியாகச் செயல் முறையில் காட்டியே வந்திருக்கிறோம். நாம் நமது நிலையிலிருந்து குறைவு படாமல் மேலே போய்க் கொண்டிருப்பதற்குக் காரணம் புத்தம் புதிதாக ஆயிரக்கணக்கான இளைஞர்கள் நமது இயக்கத்தை பகிரங்கமாக ஆதரிப்பதே யன்றி வேறன்று.

நமதியக்கம் காங்கிரஸைப் போல் இந்நாட்டில் படித்த, பணக்காரர்களின் நன்மைக்காக மட்டும் ஏற்பட்டதல்ல, அதைப் போன்றே ஒரு குறிப்பிட்ட சமூக பாதுகாப்புக்கு ஏற்பட்டதென்று சொல்லிக் கொண்டு அச்சமூகத்தின் பெயரால் போக போக்கியங்களை அடைந்து கொண்டு அச்சமூகத்தின் பரம விரோதியாளர் சர். சி. பி. ராமசாமி போன்றவர்களை ஆதரிக்கும் வழக்கமுடையது நமதியக்கமல்ல. அதைப் போலவே தனக்கென்று ஒரு கட்சியின் பெயரை குறிப்பிட்டு சொல்ல முடியாமல் பல கட்சிகளின் பெயராலும் தனது செல்வாக்கை நிலை நிறுத்தல் என்னும் வழக்க முடையதன்று. நமதியக்கம் என்ன சொல்லுகிறது? நமது லட்சியம் என்ன என்பது ஜனங்களுக்கு நன்கு தெரியும்.

இம்மாகாணத்தில் முதல் முறை சைமன் கமிஷன் விஜயம் செய்த போது மாகாணத்திலுள்ள சகல கட்சியின் வீராதி வீரர்களும் பத்திரிகைகளும் பகிஷ்காரம், பகிஷ்காரம் என்று கூச்சல் போட்ட காலத்தில் நாம் அதை வரவேற்றோம். பகிஷ்காரம் என்பது பார்ப்பன சூட்சி என்று பொது ஜனங்களுக்கு பகிரங்கப்படுத்தினோம். வேலை நிறுத்தம் செய்ய வேண்டுமென்று நம்மிடத்தில் சொல்லும்படி தலைவர்களும், பணக்காரர்களும் நம்மை ஏமாற்றுஞ் செய்யும் சூழ்ச்சி யென்று கூறினோம். சென்னையிலே பகிஷ்காரம் பலிக்காமல் போனதும் பிராமணோத்தமர்கள் என்போர் எவ்வளவு மோசமாக நடந்து கொண்டார்களென்பதும் ஜனங்களுக்குத் தெரியாததல்ல, அதே சமயத்தில் தான் பிரமாண்டமாக நமது சுயமரியாதை மகாநாட்டை செங்கற்பட்டில் தோழர் பாண்டியர் தலைமையில் கூட்டி நமது சங்க லட்சியங்களையும், திட்டங்களையும் உறுதிப் படுத்தினோம். அதன் பின்போ இவ்விந்திய நாட்டிலேயே உயரியவர்களென்றும் பொறுப்புடையவர்களென்றும் சர்க்காராலும், பொது ஜனங்களாலும் ஏககாலத்தில் போற்றி ஒப்புக் கொள்ளப் பட்ட தலைவர்களான தோழர் எம். ஆர். ஜெயகர் அவர்கள் தலைமையில் ஈரோட்டிலும், தோழர் ஆர். கே. ஷண்முகம் அவர்கள் தலைமையில் விருதுநகரிலும் மீண்டுமிருமுறை இரண்டு மகாநாடுகள் கூட்டி நமது கொள்கைகளை வற்புறுத்தியிருக்கிறோம்.

செங்கற்பட்டில் கூடின நமது முதல் மகாநாட்டிற்கு பதினாயிரக் கணக்கான பிரதிநிதிகளும் சகல ஸ்தல ஸ்தாபனங்களின் தலைவர்களும், சட்டசபை அங்கத்தினர்களும் விஜயம் செய்ததோடு நமது மாகாண சர்க்காரின் நிர்வாக உத்தியோகஸ்தர்கள் அத்தனை பேரும் அங்கு விஜயம் செய்தது உங்களுக்குத் தெரியாததல்ல. அவர்களை யெல்லாம் அங்கே நாற்காலிகளில் வீற்றிருக்கச் செய்தது, அதே சமயத்தில் தான் நமது கொள்கைகள் வகுக்கப்பட்டது என்பதை உங்களுக்கு ஞாபக மூட்ட ஆசைப்படுகிறேன்.

ஒரு மாகாண முழுவதும் கட்டுப்பாடாக பகிஷ்காரக் கூச்சல்போட்ட காலத்தில் அதை தன்னந்தனியாய் எதிர்த்து நின்றவர் யார் தெரியுமா? ஆங்கிலமே தெரியாத வயோதிகரும் ஓர் மிளகாய் வியாபாரியுமான ஈரோடு ஈ. வெ. இராமசாமியாராகும் இம்மாகாணத்தில் பகிஷ்காரம்என்று கூச்சலிடுபவர்கள் அத்தனை பேர்களும் யார் யார் என்பதை அவர் விளக்கிக் காட்டினார். பகிஷ்காரக் கூச்சலிடுகின்றவர்கள் பெயர்களை யெல்லாம் மனதில் வைத்துக் கொண்டு வட்ட மேஜை மகாநாட்டுப் பிரதிநிதிகள் பெயர் வரும் பொழுது அதில் இவர்கள் பெயர்களை பார்த்துக் கொள்ளலாம் எனநமக்குக் கூறினார். பகிஷ்கார வேஷத்தின் உண்மையை தெரிந்த நமது மக்கள் பகிஷ்காரத்தில் ஈடுபட்டு ஏமாறாமல் எதிர்த்தார்கள். இவைகளெல்லாம் எதைக் காட்டுகிறது. நமதியக்கத்திற்கும் நமது தலைவருக்கும் இந்நாட்டிலுள்ள செல்வாக்கையே குறிப்பிடுவதாகும்.

மகாநாடுகள் கூடி தீர்மானங்களும் உபந்யாசங்களும் செய்து இங்கு விஜயம் செய்துள்ள தலைவர்களும் அலுத்தும் போனதைப் போல நாமும் அலுப்படைந் திருக்கிறோம். இங்கு நன்கு ஆலோசித்து செய்ய வேண்டியவேலைகளைப் பற்றிஒருமுடிவுக்கு வாருங்கள். அரசியலைப் பற்றியோ தேர்தலைப் பற்றியோ நமது சுயமரியாதைஇயக்கத்திற்கும், சுயமரியாதைக் காரர்களுக்கும் கவலையில்லை என்பது எனக்குத் தெரியும். அச்சூழ்ச்சியில் சிக்கினால் நாம் அடியுடன் அழிந்து போவோம் என்பதும் தெரியும். நமது ஜில்லாவில் பார்ப்பனரல்லாத சமூகத்துக்கு கிடைத்து வந்த ஓர் பெரும் சாதகமான பள்ளிக்கூடங்கள் எப்படி நாம் அடிவைக்கக் கூட முடியாத இடமாக மாறி நிற்கிறது. நீங்கள் ஞாபகப் படுத்தி பார்ப்பதிலிருந்து நமது இயக்க பிரசாரம் இந்த ஜில்லாவில் எவ்வளவு குறைந்து விட்டது என்பது நன்கு புலனாகும் என்பதற்காகவே நமக்கு அப்பாற்பட்ட ஒன்றை எடுத்துக் காட்ட விரும்பினேன்.

தோழர்களே! அடுத்த மூன்று மாதங்களுக்குள் தஞ்சை ஜில்லாவில் நமதியக்கத்தை ஆதரிக்கும் சங்க அங்கத்தினர்கள் ஆயிரக்கணக்காகவும், கொள்கைகளை விளக்கும் ஸ்தாபனங்கள் நூற்றுக் கணக்காகவும் ஏற்படுத்த ஓர் திட்டம் போட்டுக் கொண்டு அதை செய்து காட்ட உங்களை கேட்டுக் கொள்ளுகிறேன். மலையாளத்தில் நடந்த வழக்கைப் பற்றி சென்னை ஹைகோர்ட்டில் ஜஸ்டிஸ் ராமேஸம் அவர்கள் தீர்ப்பு கூறியதை நீங்கள் பத்திரிகையில் படித்திருப்பீர்கள். பழக்க வழக்கம் என்பதின் பேரால் அந்த பிலத்தில் நீதி வழங்கப்பட்டிருக்கிறது. இதை வைத்துக்கொண்டு நாம் நமது வாழ்க்கைக்கு இன்றியமையாதனவான ரயில்வே பிரயாணத்தையும் அங்குள்ள போஜன சாலைகளையும் சற்று ஞாபகப்படுத்திப் பாருங்கள். அபாய நிலை விளங்கும் ரயில்வே கம்பெனியாரால் ரயில்வே ஸ்தலங்களில் சாப்பாடு விடுதி வைக்க ஆரம்பித்தது சிறிது காலமேயாகும். வைக்க ஆரம்பித்ததிலிருந்து பல மகாநாடுகளும் நமது ஜஸ்டிஸ் திராவிடன் பத்திரிகையும் சிற்றுண்டி ஸ்தலங்களில் சாப்பாடு கஷ்டத்தைப் பற்றி கடுமையாக எழுதிக் கொண்டு தான் வருகிறது. ஆனால் பழைய விடுதிகளிலும் புதிதாகக் கட்டப் படும் விடுதிகளிலும் நம்மை அவமானப்படுத்தும் திட்டம் கருங்கல்லால் கட்டப்படுகிறதே யன்றி மாறவில்லை இன்னும் இதே நிலைமையில் இருக்கும் பட்சத்தில் குருவாயூர் சத்தியாக்கிரகிகளுக்குக் கிடைத்த நீதியே பிற்கால ஜட்ஜிகளும் பழக்க வழக்கம் என்று சொல்லி விடுவார்கள். நீட்டு மனிதர்கள் என்பார்கள், அதற்காக நாம் ரயிலுக்கு போகாமலோ சிற்றுண்டி சாலைகளில் சாப்பிடாமலோ இருப்பது என்பது முடியாத காரியமாகும். ஆதலால் இப்பொழுதே கனம் ஜஸ்டிஸ் ராமேஸம் அவர்கள பெருந்தன்மையுடன் நமக்கு எச்சரிக்கை செய்ததற்கு அவரை தனி மனிதர் என்ற முறையில் பாராட்டி ஓர் ஞாபகச் சின்னம் ஏற்படுத்துவோம்! எப்பொழுது! எங்கே? தெரியுமா? ரயில்வேயிலுள்ள சிற்றுண்டி சாலைகளிலுள்ள சாப்பாடு விடுதிகளில் பிராமணர்களுக்கு--அல்லாதார்களுக்கு என்று எழுதப்பட்டுள்ள கல்லுகளை அப்புறப்படுத்தி விட்டு அந்த இடத்தில், அந்த காலத்தில் அதே கல்லால் ஞாபகச்சின்னம் ஏற்படுத்த முயலுவோமாக. இதைக் கூட நாம் செய்யவில்லை என்றால் உண்மையில் நமது நிலைமை மிக மானக்கேடானதாகவே முடியும். இதற்கும் ஏதாவது முயற்சி எடுத்துக் கொள்ளுங்கள். அடுத்தது விபசாரத் தொல்லையாகும். கடவுளைக் காப்பாற்றும் பக்தர்கள் தேவதாசிகள் இருக்க வேண்டும், சாமி தாசி கேட்கிறது என்கின்றார்கள். நமது மாகாண சர்க்கார் விபசாரத்தடை மசோதா சென்னை நகரில் மட்டும் மாதிரிக்குக் கொண்டு வந்ததில் நல்ல பலன் முழுதும் ஏற்படா விட்டாலும் பாதி சுகாதாரம் உண்டாய் விட்டது என்பது சென்னை நகரின் அடுத்த வருட ஜனன மரண கணக்கைப் பார்த்தால் தெரியவரும்.

பல எதிர்ப்பின் கீழ் இதை தைரியமாய் அனுஷ்டிக்க முன்வந்த கனம் லாமெம்பர் சர். கிருஷ்ண நாயர் அவர்களையும் கனம் முகம்மது உஸ்மான் அவர்களையும் நாம் பாராட்டுவதோடு அச்சட்டத்தின் அமுலை அடுத்தபடி மாதிரிக்காக செய்து பார்க்க விருக்கும் ஜில்லாவாக தஞ்சையை எடுத்துக் கொள்ள கேட்டுக் கொள்ளுகிறேன். இந்த ஜில்லாவில் அவ்விதம் செய்து பார்க்கமுயலுமாறு சட்ட சபையில் நமது சட்டசபை பிரதிநிதிகளைக் கேட்டுக்கொள்வதுடன் நமது ஜில்லாவிலுள்ள எல்லா ஸ்தல ஸ்தாபனங்களும் அவ்விதம் செய்ய சட்ட சபையை தூண்டுவதற்கு முயற்சி எடுத்துக் கொள்ள

தொடர்ச்சி 17-ம் பக்கம் பார்க்க.

சமதர்ம இராஜ்யத்தில்

ஐந்து நிமிஷம்!

(தோழர் அ. இரத்தினசபாபதி)

(கருத்தூன்றிக்கவனிக்க)

"ஆ! என்ன அழகிய காட்சி! நெல்லையம்பதியின் வீதிகளெல்லாம், நான் சில ஆண்டுகளுக்கு முன் பார்த்தது போலல்லாது புதுமாதிரியாகக்காணப்பட்டன. வஸந்த காலத்து மாலை நேரம் மிகரமணீகரமாயிருக்குமன்றோ?—அதிலும் அன்று தெருக்களெல்லாம் தண்ணீர் தெளிக்கப்பட்டு பல விடங்களில் தோரணங்களும் கட்டப்பட்டிருந்தன.

வீதியில் எங்கு நோக்கினும் மோட்டார் வண்டிகளிலும், சைக்கிள்களிலும், பீட்டன் வண்டிகளிலும், கால் நடையாகவும், ஆடவரும் பெண்டிருமாகப் பலர் உல்லாசமாக உலவிக்கொண்டிருந்ததானது கண்கொள்ளாக் காட்சியாகவிருந்தது! வாலிபர்களான இளந்தம்பதிகள் தங்கள் மனம் போல் ஒருவரோடொருவர் கை கோர்த்த வண்ணம். இன்பமாகச் சம்பாஷித்துக்கொண்டு ஜோடி ஜோடியாகச் சென்று கொண்டிருந்தனர். அங்கு வந்து போய்க்கொண்டிருந்த மோட்டார்களை நான் கவனித்த போது, சிலவண்டிகளில் பெண்டிரும் மோட்டார் ஓட்டிகளாகக் காணப்பட்டனர்!

அச்சமயம் அருமையான ரோல்ஸ் ராய்ஸ் கார் ஒன்று நான் நின்று கொண்டிருந்த இடத்தினருகில் வந்து நின்றது. அதிலிருந்து ஓர் பெரிய மனிதர், தனது மனைவி, பருவமடைந்த புதல்வி ஆகியவர்களுடன் கீழிறங்கினர். இறங்கியவர் மோட்டார் ஓட்டியை நோக்கி, "நீங்கள் இங்குக் காத்திருக்கவேண்டாம்; வீட்டுக்குச் சென்று, இரண்டு மணி நேரங்கழித்து மறுபடியும் வந்தால் நலமாயிருக்கும்" என்றார். அவரது வார்த்தைகளில் அன்பும் விநயமும் மலிந்து காணப்பட்டன. அந்த டிரைவரும் புன்னகையுடன் "ஆஹா! அப்படியே செய்கிறேன்;—நான் சென்று வரட்டுமா?" என்று கேட்டுக்கொண்டே வண்டியைச் செலுத்த வாரம்பித்தார். பெரிய மனிதர் "சரி" என்னும் பாவனை தலையையசைத்ததும் அந்த உயர்ந்த மோட்டார் வண்டி காற்றாகப்பறந்துகடிதுமறைந்தது!

அந்தப் பெரியவர் முதலாளியும், அந்த மோட்டார் ஓட்டி அவரிடம் சம்பளம் பெறுந்தொழிலாளியுமென எண்ண என் மனம் இடந்தரவில்லை. ஏன்? மேலே குறிப்பிட்டுள்ள சம்பாஷணையில் மிளிரும், இனிமையைக் கவனிக்க எவர் தான், அவ்விருவரையும் 'முதலாளியும் தொழிலாளியும்' எனக்கருதுவர்?—ஆனால் என்னருகிலிருந்த மனிதரிடம் நான் விசாரித்த போது அம்மனிதர் 'அப்பெரிய மனிதர்தான் திவான்பகதூர் தர்மபூஷணம்; மோட்டார் அவரது சொந்தந்தான். மோட்டார் ஓட்டிய மிஸ்டர் ரங்கநாதம் அவரிடம் சம்பளத்திற்கு டிரைவராயிருக்கிறார்" என்று விடையளித்த போது, உண்மையிலேயே நான் ஆச்சரியத்தால் ஸ்தம்பித்துப் போனேன். "ஆ! அவர்கள் முதலாளியும், தொழிலாளியுமா? ஒருவரிடமொருவர் எவ்வளவு அன்பும் மரியாதையும் காட்டிப் பேசிக்கொண்டனர்!" என்று வியப்போடு கூறினேன்.

பக்கத்தில் நின்ற மனிதர் என்னை ஏற இறங்கப்பார்த்து, "ஏனையா நீங்கள் இத்தேசத்தார் இல்லை போலிருக்கிறது. இங்கே முதலாளி—தொழிலாளி என்ற பதத்தையே உபயோகப்படுத்தக்கூடாது! முதலாளியும் தொழிலாளியும் இங்கு சரி நிகர், சமானமான அந்தஸ்துடையவர்களே!" என்றார். மறுபடியும் நான் அவரை நோக்கி "ஏனையா அந்த மனிதர் தர்ம பூஷணத்துடன் நிற்கும் இளம்பிராயத்துப்பெண் அவரது புத்திரிதானே?" என வினவினேன். அவர் 'ஆம்'! குணரத்தினம்' என்னும் அப்பெண்மணி அவரது மகள் தான், வயது 18ஆகிறது. பி. ஏ. சீனியர்வகுப்பில் வாசித்துக்கொண்டிருக்கிறார்" என்றார்.

நான்:—ஆமாம்; அப்பெண்ணிற்குக் கல்யாணமாயிருக்கிறதா?

அவர்:—இல்லை; இதற்குள் என் கல்யாணம்? பெண்களுக்கு 20 வயதிற்கு மேலும் ஆண்களுக்கு 25 வயதிற்கு மேலும் தான் இங்கு கல்யாணப் பேச்சுப்பேசலாம். அரசாங்கச் சட்டமே அப்படி.

நான்:—அப்படியா, இப்பெண்ணிற்கு முறை மாப்பிள்ளைமார் இருக்கிறார்களல்லவா?

அவர்:—முறைமாப்பிள்ளையாவது? அந்தப்பெண் யாரை மணந்து கொள்ளவிரும்புகிறதோ அவருக்குத்தான் மணம் நடைபெறும்.

நான்:—இருக்கட்டும்; இவர்கள் என்ன ஜாதி?

அவர்:—நீர் என்ன பழைய பிடுங்கலாயிருக்கிறீரே! இங்கு ஜாதி பேதம் பார்ப்பதே கிடையாது—ஒன்று கேளும்; இந்த தர்ம பூஷணம் இருக்கிறாரே, இவரது பாட்டன் பூட்டனெல்லாம் தொண்ட மண்டல முதலிமார்கள். இவரது மனைவியோ, அகம்படியர் என்று சொல்லப்படும் ஜாதியைச்சேர்ந்தவர். இவரது பெண் குணரத்னம் ஓர் வாலிபனைக்காதலித்து வருகிறது. அவரது முன்னோர்கள் பறையர் என்ற தாழ்ந்த வகுப்பைச்-சேர்ந்தவர்கள்!

எதிர் பாராத இந்த விடைகள் எனக்குப்பெரும்வியப்பையளித்தன! பின்னர் நண்பருக்கு சலாம் போட்டு விட்டு, நான் என்னையே மறந்து நடந்தேன். அங்கு நான் கண்ட காட்சிகளைச் சுருக்கமாகக்கூறிவிடுகிறேன்; நீங்கள் அதிலிருந்து விபரமாக எல்லாவற்றையும் யூகித்துக் கொள்ளுங்கள். எதிரிலிருந்த தபாலாபீசில் எட்டிப்பார்த்தேன். போஸ்ட் மாஸ்டர் ஸ்தானத்தில் மூக்குக் கண்ணாடியணிந்த ஓர் மாது உட்கார்ந்திருந்தார். அவரைச்சுற்றி நான்கு ஆடவர்களும் நான்கு ஸ்திரீகளுமாக எட்டு குமாஸ்தாக்கள் இருந்தனர். அடுத்த கட்டடம் போலீஸ் ஸ்டேஷன். அங்கிருந்த சர்க்கிள் இன்ஸ்பெக்டர் மிஸ்டர் "பார்த்திபனும்" சப்இன்ஸ்பெக்டர் "ரமாமணி" அம்மாளும், ஹெட் கான்ஸ்டேபிள் "துரைசாமி"யும், ஆடவரும் பெண்டிருமான மூன்று கான்ஸ்டேபிள்களும் சந்தோஷமாக உரையாடிக் கொண்டிருந்தனர்!

சுகாதார விதிப்படி அமைக்கப்பட்டிருந்த "காபிஹோட்டல்"களைப் பார்த்தேன். அங்கு ஆடவரும் பெண்டிரும் சமமாகவே நடந்து கொண்டார்கள். இன்னும் ரெயில்வே ஸ்டேஷன், ஆஸ்பத்திரி, கலாசாலைகள், கோர்ட்டுகள் முதலிய எல்லாப் பொது ஸ்தலங்களிலும் ஆடவரும் பெண்டிரும் விகற்பமின்றி தோளுக்குத்தோள் நின்று வேலை செய்வதைக்கண்டேன்!

வடக்குமாசி வீதியில் சுமார் பதினைந்து வருடங்களுக்குமுன் நான் பார்த்த "அருபத்து மூவர் திருமடம்" எப்படியிருக்கிறதென எட்டிப் பார்த்தேன். அந்தப் பெரிய, புராதன, குருமார் மடத்தில் "ஜின்னிங் பாக்டரி" (பருத்தி அரைக்குமிடம்) அமைக்கப்பட்டு தடபுடலாய் வேலை நடந்து கொண்டிருந்தது! அங்கிருந்த ஒருவரை "இந்தத் திருமடத்திலிருந்த அருபத்து மூன்று நாயன்மார்களுடையவும் மற்றுமுள்ள சிவலிங்கம், பிள்ளையார், முதலியன விக்ரகங்களுமெல்லாம் என்னவாயின?" என்று கேட்டேன். "இதற்கடுத்தாற்போலுள்ள பொதுஜன சக்கூஸ் (பப்ளிக் லேட்டரின்) கட்டிடத்தின் அஸ்திவாரத்தில் அந்தக் கல் விக்கிரகங்களெல்லாம் பலத்திற்காகப்போடப்பட்டிருக்கின்றன" என்ற பதிலைக் கேட்டவுடன் என்னைத் தூக்கி வாரிப்போட்டது!

அதன் பின்னர், அரைச்சதுர மைல் விஸ்தீரணங்கொண்ட "சுவாமி நெல்லையப்பர் ஆலயம்" எப்படியிருக்கிறதெனப்பார்த்தேன். என்ன சொல்வது! அந்தப் பிரமாண்டமான ஆலயத்தின் கோபுரத்தின் உச்சியில் அழகிய கொடி யொன்று அழகாகப்பறந்து கொண்டிருந்தது. அதில் 'தராசின்' படம் ஒன்று சித்தரிக்கப்பட்ட அதனடியில்—சரி—நிகர்—சமம்— என எழுதப்பட்டிருந்தது. வாயைப்பிளந்த வண்ணம் உட்புறம் எட்டிப்பார்த்தேன்! இதற்கு முன் கோவிலுக்குள் குடி புகுந்திருந்த இருளையும், புழுக்கத்தையும், வௌவால் நாற்றத்தையும் காணோம். போதுமான காற்றும் வெளிச்சமும் வரும்படி பெரிய பெரிய ஜன்னல்கள் புதிதாக வைக்கப்பட்டிருந்தன. முகப்பில் தொங்கிக்கொண்டிருந்த பெரிய பலகையில் "நெல்லைமாநகர் சர்வகலாசாலை" என்றெழுதப்பட்டிருந்ததைக் கண்டவுடன், "ஸ்ரீலஸ்ரீ சுவாமி நெல்லையப்பரும் அம்பாள் காந்திமதியும் என்ன கெதியானார்களோ" என என்னைத்தானே மெதுவாகக் கேட்டுக்கொண்டேன் "நெல்லையப்பரும் காந்திமதியும் அவர்களது பரிவாரங்களுடன் வங்காளக்குடாக்கடலின் மத்தியில் சுகமாக சதாகாலமும் ஜலக்கிரீடை செய்து கொண்டிருக்கிறார்கள்" என்று என்பக்கத்திலிருந்து யாரோ பதில் கூறினார்கள்!

திடுக்கிட்டுத்திரும்பிநோக்கினேன் எனது பழைய நண்பர் 'முனிசாமி' ஓர் பருவ மங்கையுடன் கைகோர்த்துக்கொண்டு நிற்பதைக்கண்டேன். அப்பெண்ணை உற்றுப்பார்த்தபோது எனக்குண்டான ஆச்சரியத்தால்என் மண்டை வெடித்து விடும்போலிருந்தது! ஏனெனில், நண்பர் முனிசாமி ஆதிதிராவிட அங்கப்பனின் குமாரன் என்பதை நானறிவேன். அவரது மனைவியான அம்மங்கையோ? ஹிந்து மகாஜன சபைக் காரியதரிசிஸ்ரீமான் மகாதேவ சாஸ்திரிகளின் ஏக புத்திரி ருக்மணி! இந்த வியப்படங்கு முன்னரே, எனது மற்றொரு பழைய நண்பரான "இராமானுஜமய்யங்கார் (இப்பொழுது இராமானுஜம்) தன் மனைவியுடன் அங்கு மோட்டார் சைக்கிளில் வந்தார். அவரது மனைவியோ, எனது பாட்டனார் வீட்டு நஞ்செய் நிலங்களைச் சாகுபடி செய்து வந்த தாழ்ந்த வகுப்பு "சின்னக்கருப்ப"னின் புத்திரி! போதாக்குறைக்கு இராமானுஜமய்யங்காரின் உச்சிக்குடுமி, துவாதச நாமம், பூணூல், மழுங்கச் சிரைக்கப்பட்ட முகம், பஞ்சகச்ச வேஷ்டிக்கட்டு முதலியவற்றை யெல்லாம் வழியனுப்பிவிட்டு சென்டர் கிராப்பு, நறுக்குமீசை, ஆக்ரா லெதர் ஸ்லிப்பர், ரிஸ்ட் வாட்ச் முதலியவற்றுடன் நாகரீகப்பேர்வழியாய் விளங்கினார். தாழ்த்தப்பட்ட பெண்கள், மார்பில் சேலை போடக் கூடாது என்ற அரட்டைகளெல்லாம் மாண்டு மடிந்து போய், சின்னக்கருப்பனின் புத்திரி "ராக்காயி" தன் பெயரை "இராஜாம்பாள்" என மாற்றிக்கொண்டு, காலில் ஸ்லிப்பரும் உடம்பில் இங்கிலீஷ் கவுனும் அணிந்துகொண்டு ரமணீகரமாய் விளங்கினார்!

பின்னும் எனது நெல்லைநகர் ஊர்வலத்தில் "சுந்திரமூர்த்தி நாயனாரின்

தொடர்ச்சி 16-ம் பக்கம் பார்க்க.

கதரை ஆதரித்தல் அறிவுடைய செய்கையா

(எம். கலியாணசுந்திரம்.)

(முன் தொடர்ச்சி)

கதரை ஆதரிக்கக்கூடாதென்பதற்கு என்னென்னகாரணங்கள் நம்முன் நிற்கின்றன என்ருராய் வதற்காகவே இவ்வியாசம் வெளிவருகிற தாயினும் எந்தஅளவில் கதரை ஆதரிக்கக்கூடாது என்பது முடிந்தபின் எந்த அளவிலாவது கதரை நாம்ஆதரிக்க வேண்டுமா? என்பதை ஆராய்வோம். கதர் என்பது பற்றியே சுமார் 10 12 ஆண்டுகளாகத்தான் பிரசாரம் செய்ய ஆரம்பிக்கப்பட்ட தென்பதும் அப்போது போதிக்கப்பட்ட சாதுரியத்தின்பேரில்தான் கதரில் ஆதரிப்பு; உணர்ச்சி மக்களுக்கு ஏற்பட்டதென்பதும்; போதித்தவசனமும் அதன் நோக்கமும் உயர்ந்ததாய், நன்மையாய் தோன்றிய தால்தான் தக்கதோர் நிதிசேரும்படி பொது ஜனங்கள்பொருளுதவி செய்தார்களென்பதும், அப்பொருளுதவியால் சேர்ந்த நிதியின் நிர்வாகமுறைகளும் நிர்வாகிகளின் நோக்கங்களும்நேர்மை யுடையனவாகத் தோன்றிய தால்தான் கதரை அபிவிருத்தியாக்கும்படிஉறுதிசொல்லப் பட்டது யென்பதும் யாவரும் அறிவோம்.

ஆனால்அவர்கள் இப்போது தங்கள் கையில் ஓர்பெரிய அரசாட்சி (நிர்வாகம்) அகப்பட்டதுபோல் தன்மதிப்பும், மற்றதும் கொண்டு தங்கள்வகையினர் என்றும் சில தொகுப்பினரையே தங்களுடன் சேர்த்துக்கொண்டு அ. பா. ச. சங்கத்தார் என்னும் பேரால் பசுத்தோலும் புலிக்குணமும் என்றபடி மற்றவர்களிடத்தில் அசிகையும் அருவருப்புமான கொடிய எண்ணங்களுடன், தங்களை அணுகுவோர் நீண்டநாளாய் நல்லவாழ்கை நடத்திய சொல்வாக்குடையருயிருந்த போதிலும் அந்தக்கதர் நிதிக்கே துகைகொடுத்து உதவநேர்ந்தவர்களாயிருந்த போதிலும், தற்போது அவர்களிடமே நூல்நூற்று அல்லது துணி நெய்து கொடுப்பவர்களாய் இருந்தபோதிலும், அல்லது தங்கள் முதலைக்கொண்டு தங்கள் உழைப்பில் கதரபிவிருத்திசெய்து வரும் கிரமமான வியாபாரிகளாய் இருந்த போதிலும், சங்கநிர்வாகிகளின் நோக்கம் நிர்வாக உரிமைகளில் அல்லது நடைமுறைகளில் தலையிடவோ, யோசனை சொல்லவோ கூட உரிமை யற்றவர்களாக அன்னியராக்கி, அவர்களை மதிக்க வேண்டிய அவசியமில்லை யென்ற மனோபாவத்தில் அமர்ந்து, கதரில் ருசிபிடித்த (பற்றுதலுள்ள) எவரும் நூற்பவர் முதல் பெரிய வியாபாரிவரையில் தங்களாய் மதிப்புப்பெற வேண்டிய தவசியமென்பதையும், சர்டிபிகேட் என்னும் முத்திராதானம் தராதங்களே தகுந்த உயர்ந்த ஸ்தாபனாதிபதிஎன்றும், தங்களைத் தவிர அருகதையுடைய வேறுஸ்தாபனம் அல்லது நபர் இல்லையென்றும் தங்களைவிட்டால் மற்றவர்க்குள்ள கதர்பற்று தலைமெய்ப்பிக்க (மதிப்புப்பெற) மார்க்கமில்லை என்றதோதில் திட்டம் வகுத்துக்கொண்டு, மகாத்மா உத்தமர்என்றெழுதிய திரையின் கீழ் (கியாதியின் கீழ்) ஓரளவு சம்பளத்துக்கு அமர்ந்துள்ள அச்சங்கத்தார் நூற்போருயினும் வியாபாரியாயினும் எவ்வெவரும் வந்துதங்களைக் கண்டு கொள்ளவும் அவர்கள் நடந்து கொள்ளச்சொல்லும் எவ்வித சடங்குகளுக்கும், கட்டுப்பாட்டுக்கும் அவ்வவர்களும் கட்டுப்பட்டு நடக்க சம்பிரதாயப்படுத்திக்கொண்டும் வருவதனுலும் தங்குழுவினருக்குள் படிவரிசை யழைத்து தரவரிசையில் பிரமாணங்களையும், முச்சலிக்காவையும் நூல் காரர்கள் வேறு, தறிகாரர்கள் வேறு, வியாபாரிகள்வேறு, எனத் தனித்தனியே பிரத்தியேகப்படுத்தி அவ்வவர்களிடமும் பிணிக்கவும்தளர்த்தவும் உரிமையுடையோனுய்தங்களை அமைத்துக்கொண்டு, நிர்வாகம் நடத்துகிருர்களே தவிரவேறு பொதுநலப்பொருப்பு டையவர்களாய் எதிர்பார்த்தபடி விளங்கவேயில்லை என்பதும் அவ்வகை நோக்கம் இனி அவர்களுக்கு உண்டாகும் என்று சொல்லுவதற்கோ எதிர்பார்க்கிறதற்கோ தக்கவர்களும் அங்கில்லை யென்பதாகவும் காண்கிறோம்.

கதர் என்பதன் தாயகமாய் கருதப்படும் அ. இ. ச. சங்கத்தின் தமிழ் நாட்டுக்கிளையைப்பொருத்த மட்டிலாவது, நிச்சயமாய் அவ்விதமான நடைமுறைகள் இன்று நிலவுவதால், கதரில் சம்பந்தப்பட்ட பல தரத்தினரான பொருளிலார் பொருளுடையார் என்பவர்களின் சுதந்தரத்தை நிரந்தரமாய் கட்டுப்படுத்தி அன்னூர் உரிமையும் மரியாதையும் அமுத்தி குறைத்து தங்கள், பதவிக்கும் நிதியமைக்கும் தக்கபீடமாய் (ஆசனமா)ய் அவர்களையே அமைத்துக்கொண்டுஷை சங்கநிர்வாகிகள் அப்பொது நிதியை நிர்வாகம் நடத்தி வருவதாய்த் தெரிவதால் கதர் அவசியமென்று எடுத்துரைத்தபோது மக்கள் ஏற்கனவே பொருளுதவி செய்ததும் அக்கூட்டத்திற்குப்போனதும் கூட ஏமாந்த செய்கைதான் என்றேற்படுவதுடன் அதனுல் சேர்ந்த துகைதான் ஓர் நிர்வாகநிதியாகி நமது சகாக்களை, உறைவினரை, நண்பரை, பொதுமக்களையெல்லாம் இன்று அங்கு போய் கட்டுப்பட (அடிபணிய) வைக்கிறதென்றும்கண்ணுரக்காண்பதால்இன்றுநாம் கனம் நடுங்க வேண்டி வருகிறது.

இவ்வித மாக எந்தெந்த சந்தர்ப்பம் கிடைத்தாலும் நம்மவர் என்ற ஜனசமூகத்தை வளைத்து ஒடுக்கி தர்மத்தின் பேரால் பலனனுபவித்துக் கொள்ளும் முறையில் ஒருவகையார் நம் நாட்டில் நீண்ட நாளாய் நிலவி வருவதன் பயனுகவே.

அதாவது சரீர பாடு பட்டுப் பொருள் சேர்ப்பதையே குடித்தன முறையாகக் கொண்டவர், படிக்க தங்களுக்கு சந்தர்ப்ப மில்லாமல் போனுலும் பரவாயில்லை, படித்தவன் சரியாய் சொல்லுவான் என்று நம்புவதாலும், அவர்களில் ஒரு சாராரோ சுயநலத்திற்காக சாஸ்திரம் என்பதன் பேரால், தானம் விசேஷம், எவ்வளவு தத்தம் செய்தாலும் புருஷார்த்தம் எல்லாம் சித்திக்கும், மேலுலகமும் நிச்சயப்படும், என்றெல்லாம் வாய்ச்சாலகம் செய்வதை நிதானம் செய்து கொள்ளாமல் தானம் செய்தலே சுபாவமாகக் கொண்ட நம்மவரான சகோதரர்களும் நம்பி, இந்த தானம் செய்வோமா, அந்ததானம் செய்வோமா, புண்ணியம் இப்படி வருமா, மோக்ஷம் அப்படிச்செய்தால் கிடைக்குமாஎன்று, ஆராய்ந்து பார்த்துக் கொள்ளாமலே தர்மப்பேச்சுடன் கேள்வியுடன் நின்று கொண்டுஅறிவுக்கு சம்பந்தப்படுத்தாமலே திரும்பவும் தன் தொழிலுக்கு ஈடுபட்டு விடுவதாய் பெருமித மக்கள் இன்னும் இருந்துவரும் தோரணையால், இவ்வித பழக்கத்தை அநேக நாளாகவே ஏமாந்தும் அப்பிய சித்தும் விட்டபடியால் வெகுநாள் முன்பிருந்தே இங்கு ஏற்பட்டுள்ள கோயில், மடம், சத்திரம் என்ற பல தர்மஸ்தாபனங்களை அதைநிர்மாணித்த குடும்பத்தினரே பின் நிர்வாகம் நடத்த சந்தர்ப்பம் பெருமல் தகப்பன் பொருள் கொடுத்து தர்மஸ்தாபனம் ஏற்படுத்தவும், மகன் அந்த ஸ்தாபன நிர்வாக பொருப்பை விடவும்போன அந்த ஸ்தாபனத்தில் மானேஜரின் கீழ் ஓர் சேவகம் பார்க்க சந்தர்ப்பம் கிடைக்குமா என்று எதிர் நோக்கவும் வெகுவாய் நேர்வது அச்சாரீரின் சூழ்ச்சியால் தான் என்ற உண்மையை தீர அறிந்தவர்களாய் உள்ள சிலர் இத்தனை வருடங்களாகியும் கதர் வலையில் அகப்படாதிருந்து வருகிருர்கள். அத்தகையாரிடம் கதர் தேசீயம் என்று சொன்னுலும், கதர் நிதிக்கு தம்பிடி கொடுத்தாலும் உயர்ந்த தர்மம் என்று சொன்னுலும், மகாத்மா கேட்கிருர் கொடுக்கலாம் என்று சொன்னுலும் கூட, சரீர பாடுபட்டுக்கொடுப்பதில் சேர்ந்தவர் தான் மகாத்மா என்றும், நம்மவன் உத்தமனுய் இருப்பான், தன் பொருளையும் கொடுப்பான், பிறன் பொருள் கவருன், ஆனால் ஏமாறுவான், செத்தை அறிக்கிறவன், ஒருவன் குளிர்காய்கிறவன் வேறொருவன் என்ற பழமொழி போல நிதி சேர்த்து முடிவில் பிறர் ஆதிக்கத்தில் விட்டுவிடுவார்கள் அப்படி நேரும் என்று தீர்க்கமாய் தெரிந்து தன் தலையசைப்பு உதவாமலும், கதர் உடுத்தவேண்டியதில்லை என்று அழுத்ததிருத்தமான வெருப்புணர்ச்சி கொண்டுபதேசித்தும், இன்றும் நாளையும் விலகியிருக்கிருர்கள் என்பதை நாம் சிந்திக்கக் கடமைப்பட்டிருக்கிறோம். இவ்வித அறிவு நம்மவர் எல்லார்க்கும் எட்டாததாலேயே கதர் போர்டுக்கும் இன்று ஓரளவு மதிப்பு இருந்து வருகிறது என்று உணர்வோமாக. அதுபோக அப்படிப்பட்ட முறையில் நாம் தத்தம் செய்து கொடுத்த துகையைக்கொண்டு அவர்கள் நிர்வாகம் எவ்வளவு தூரம் கவனக்குறைவாயும் நியாயக் குறைவாயும் நடத்தி வருகிருர்களென்பதை அடுத்தவாரம் வெளியிடுவோம். (தொடரும்)

திரு. கி. ஆ. பெ. விஸ்வநாதம்.

திருச்சி. திரு. கி. ஆ. பெ விஸ்வநாதம் அவர்கள் 26-6-32 தேதி நாகையைவிட்டுப்புறப்பட்ட ரஜுலா என்ற கப்பலில்மலாய்நாட்டுக்குப்பிரயாணமானுர். அவர்விலாசம்:

கி. ஆ. பெ. விஸ்வநாதம்.
71 அம்பாங்கு தெரு.
கோலாலம்பூர்.

கார்குடி சின்னையா.

கும்பகோணம் தேவஸ்தானக் கமிட்டிக்கு சமீபத்தில் நடந்த மாயவரம் தாலுகா தேர்தலில் கார்குடி உயர் திரு. ஆர். சின்னையா அவர்கள் வெற்றி பெற்றிருக்கிருர்.

கத்தோலிக்க குருமார்கள் இல்லாத சீர்திருத்தத் திருமணம்.

லாலுகுடிதாலூக்கா வழுதியூர் கிருமம் தேவசகாயம் அவர்கள் குமாரன் திரு. செபஸ்தியான் அவர்களுக்கும், கூகூர் அந்தோனி அவர்கள் குமார்த்தி திருமதி. செபஸ்தியம்மாள் அவர்களுக்கும் 27-6.32 காலை 8-30க்கு குருமார்களில்லாமல் சீர்திருத்த சிக்கனமுறையில் திருமணம் நடைபெற்றது.

அதுசமயம், பூவாளூர் திருவாளர். பி. எம். சாமிக்கண்ணு அவர்கள் தலைமையில் ஒரு கூட்டம் நடைபெற்றது. சுமார் 200 ஜனங்களுக்குமேல் கூடியிருந்தனர் என ஒரு நிருபர் எழுதுகிருர்.

(Scientific Method and Ignorant Beliefs.)

மெஞ்ஞான முறையும் மூட நம்பிக்கையும்.

"கடவுளும், பிரபஞ்சமும்" என்ற வியாசத்தின் மேல் எழும் பிரச்சினை.

[தோழர் ம. சிங்காரவேலு பி. ஏ., பி. எல்.,]

(1)

"குடி அரசில்" பிரசுரித்து வந்த, "கடவுளும், பிரபஞ்சமும்" என்ற நமது வியாசத்தில் கண்டுள்ள மெஞ்ஞான குறிப்புகளைக் குறித்து, அநேக நண்பர்கள், நமக்கு அடுத்தடுத்து, அவரவர்கள் மனதில் எழும் சங்கைகளுக்கு "குடி அரசு" மூலமாக பதில்தெரிவிக்கும்படிகேட் டுவருகின்றார்கள். இந்தக் கேள்விகளும், சங்கைகளும், உண்மையாகவே (Sincere) அவரவர்மனதில் எழுந்தவை என்று நாம் கருதி வருகின்றோம். ஆனால் விஷயமொன்றிருக்க அதற்கு சம்பந்தமொன்றுமில்லாத கேள்விகளைக் கேட்பது தகுதியற்ற மார்க்கமென்றே எண்ணவேண்டிவருகிறது.

திருஷ்டாந்தமாக, ஒரு நிருபர் உலகம், அதாவது நமது பூமிஅந்தரத்தில் எப்படி நிற்கின்றது என்றும், உலகிற்கு அப்பால் மழைவுண்டா எனவும், இன்னும் இவை போன்ற பலகேள்விகளைக்கேட்கின்றார். இந்தக் கேள்விகளை நமது நிருபர் கேட்பது ஆச்சரியப்படவேண்டியதாய் இருக்கின்றது. ஒவ்வொரு ஆங்கில ஐரோப்பிய சிறுவனும் இந்த விஷய ஞானம் 7, 8 வயதிலேயே பெறுகின்றான். இவ்விஷய ஞானத்தைப்பற்றிய பூகோள நூல் (Geography) பூத் பௌதீக விளக்கம் (Physical Geography) முதலிய பாலபோத முதற்பாடங்களில் தெரிந்து கொள்ளலாம். நமது முக்கிய கோரிக்கை என்னவெனில் நமது நாட்டில் பல கோடி பாமர மக்கள் மூட நம்பிக்கையில் மூழ்கிக்கிடக்கின்றமையால், அவைகளில் சிலவற்றை விஞ்ஞான முறைப்படி விசாரித்து அவ்வித நம்பிக்கைகளுக்கு ஞாயமான ஆதாரமில்லை என்று எடுத்துக்காட்டுவதே நமது முக்கிய கோரிக்கையாகும். விஞ்ஞான நூல்களையெல்லாம் எடுத்துரைக்க வேண்டுமென்ற எண்ணமும் நமக்கில்லை. "குடி அரசு" அவ்வியாக்கியானங்களுக்கு இடம் தராது. நாம் எழுதுவதும் அழகல்ல. ஆதலின் நமது நிருபர்கள் கேட்ட சில முக்கிய கேள்விகளுக்கு விடை கொடுத்து வந்தோம். அதற்கு மேல் கோருவதும் ஒழுங்காகா. ஆனால் நமது நண்பர்கள் விஞ்ஞானமுறையை சற்று தெரிந்து கொள்வார்களேயாகில் பலவித சங்கைகளுக்குத் தாங்களே அவைகளுக்குறிய விடைகளைத் தெரிந்துகொள்ளலாம். மூட நம்பிக்கைகளுக்குபல காரணங்கள் உள. முதல் முதல், நாம் விசாரிப்பதில்லை. இரண்டாவது விசாரித்தும் தகுதியான முறைப்படி விசாரிப்பதில்லை. இவ்விரண்டு முக்கிய காரணங்களால் நமக்கு பலவித தோற்றங்கள் (Phenamena) சாதாரணமாக தெரிந்து கொள்ள முடியவில்லை. ஆதலின் நமது "குடி அரசு" வாசிப்போர் நிமித்தமாக இவ்விடத்தில் மெஞ்ஞான முறையை சுருங்க விளக்கி, பலவித நம்பிக்கைகளின் எதார்த்தம் விளங்குமாறு ஈண்டு குறிப்பிடுவோம்.

நாம் கொண்டுள்ள நம்பிக்கைகள் இரண்டு வகைத்து. சரியான நம்பிக்கை ஒன்று [Right Beliefs] சரியற்ற நம்பிக்கை மற்றொன்று [Wrong Beliefs] காற்றால் புயல் அடிக்கின்றது என்ற நம்பிக்கை முதல் நம்பிக்கைகளுக்கு திருஷ்டாந்தம். வாயுதேவனால் புயல் அடிக்கின்றதென்பது இரண்டாவது நம்பிக்கைக்குத்திருஷ்டாந்தம். நீராவி குளிர்ச்சிபட்டதும் மழையாகப் பெய்கிறதென்பது சரியான நம்பிக்கை. வருண பகவானால் மழை பெய்கின்றதென்பது சரியற்ற நம்பிக்கை. இவ்விரண்டு நம்பிக்கைகள் நமது அனுபவத்திலிருந்தே எழுகின்றன. அடிக்கும் புயலையும்,பெய்யும் மழையையும் நாம் பார்க்கும் காட்சிகளே. ஆனால் ஒரு நம்பிக்கை விசாரணையில் எழுந்தது. மற்றொரு நம்பிக்கை வெறும் உத்தேசத்தால்பிறந்தது. காற்றில்லா வேளையில்புயல் அடிப்பதில்லை காற்று பலமாக அடிக்க அடிக்க புயலாக மாறுகிறது. இந்த அனுபவத்தைக்கொண்டு காற்றால் புயல் அடிக்கிறதென்று நம்புகிறோம். ஆனால் காற்று வாயுதேவனால் அடிக்கின்றதென்று கூறுவது தன்னைப்போல் ஒரு கர்த்தா அல்லது ஒருசக்திபுயலை அடிக்கச் செய்கின்றது என்று எண்ணுவது வெறும் எண்ணமே, தேள் கொட்டியோ, அல்லது பாம்பு கடித்தோ மந்திரத்தால் லகுவாய் விட்டதாகச் சொல்லும் நம்பிக்கையை சற்று விசாரிப்போம். ஆயிரக்கணக்கானவர்கள் தேளாலும் கொட்டப்படுகின்றார்கள், அவர்களில்பெரும்பான்மையோர், மந்தரித்தும் பாதைப் படுகின்றார்கள். ஆனால் கிஞ்சித்து சிலர் மாத்திரம் பாதைப்படுவதைக் காணோம். இவர்களில் ஒருவனுக்கு மந்திரத்தால் பாதை போயிற்றென்றால் எந்த வகுப்பில் இவனைச் சேர்ப்பது? பாதைப்படும் அனேகரில் சேர்ப்பதா? அல்லது பாதைப் படாத சிலரில் சேர்ப்பதா இதனைக் கண்டறிவது தான் விஞ்ஞானமுறை (Scientific method) என்று கூறுவது. சில திரேகங்கள் தேள் விஷத்தால் பாதிக்கப் படுவதில்லை. இப்பேர்கொத்த திரேக முடையவனுக்கு; மந்திரத்தால் குணமாயிற்று என்ற சொல்வதால் என்ன பயன்? இந்தப் பாதையைப் பொறுத்துக் கொள்ளும் சிலர் இருக்கின்றார்கள். இவ்விதமாக பொறுத்துக் கொண்டவர்களுக்கு பாதைப்மந்திரத்தால்லகுவாயிற்றென்பதும் பொருந்தாது. ஆதலின் தேள் கொட்டியது வாஸ்தவந்தானா வென்று முதலில் ஸ்திரப் படுத்திக் கொள்ள வேண்டும். தேளால் கொட்டப் பட்டவன் பாசாங்கு செய்கின்றானா வென்றும் அறிந்து கொள்ள வேண்டும். மந்திரம் சொல்வதற்கும், தேள் கொட்டிய காலத்திற்கும் எவ்வளவு நேரம் ஆயிற்றென்றும் தெரிந்து கொள்ளலும் வேண்டும், அது தெரிந்தாலொழிய மந்திரத்தால் பாதை நின்றதென்று நினைப்பது பிசகாகும். சிலருக்கு கொட்டிய பிறகு, சில நேரத்திற்கெல்லாம் பாதை நீங்குவதும் உண்டு பாதை நீங்கும் தருணத்தில் மந்திரமும் செய்யப்படுமாகில், Co-incidence என்ற, உடன் நிகழ்ச்சியால், மந்திரத்தால் தேள் விஷம் ஏராமல் நின்று விட்டதென எண்ணுவதும் பழக்கம். நமது நாட்டில் இத்தியாதி சம்பவங்கள் அனந்தமுண்டு. காக்கை பறந்ததும் மாங்கனி விழுந்ததுமான சந்தர்ப்பத்தில், பறந்த காக்கையால், பழம் கீழே விழுந்தது என்று எண்ணுவதுமுண்டு. அல்லது மாங்கனி பழுத்து விழவேண்டிய சந்தர்ப்பத்தில், காக்கையும் பரந்தது என்றும் எண்ணுவதும் உண்டு. இந்த இரண்டு அபிப்பிராயங்கள், அல்லது உத்தேசங்களில் எது உண்மையாய் இருக்கலாமென்பதற்கு, அதில் சம்பந்தப் பட்ட எல்லா சந்தர்ப்பங்களையும் (Conditions) பரிசீலனை செய்தால் தான் உண்மை விளங்கும் இது தான் மெஞ்ஞானத்தில் வழங்கி வரும் முறை. விஷயங்கள் நிகழும் சந்தர்ப்பங்களை எல்லாம் சேர்ந்த பிறது அவைகளின் காரணங்களை குறிப்பது தான் விஞ்ஞான முறைக்குப்பொருத்தமாகும். நமது நாட்டில் அவசரப்பட்டே நிகழ்ச்சிகளின் காரணங்களை யூகிக்கின்றார்கள். ஒரு நோயாளி அனேக ஆங்கில டாக்டர்களைக்கொண்டு சிகிச்சை செய்து வருகிறான். குணமாகவில்லையென்றுவைத்துக்கொள்ளுவோம். பிறகு ஆஸ்பத்திரிக்கும் அவன் கொண்டு போகப்பட்டு வீட்டுக்கு திரும்புகிறான் வீட்டுக்கு வந்த நோயாளியை ஒரு சாமியாரிடம் காண்பித்து அவன் ஏதோ பச்சிலைகளையோ, அல்லது சூரணத்தையோ கொடுக்கப்பெற்று நோய் விடுதலை அடைகின்றான்.

(தொடர்ச்சி 14ம் பக்கம் பார்க்க)

சீர்திருத்தத் திருமண அழைப்பு.

நிகழும் ஆங்கிரஸ ஆண்டு ஆனித்திங்கள் 7—7—32 வியாழக்கிழமை பகல் 2-மணிக்கு, எனது புதல்வி திருவளர்ச்செல்வி மெய்யாத்தாளுக்கும், காரைக்குடி திருவாளர் கெ. மு. பொ. வயிரவனம்பலகாரரவர்கள் புதல்வர் திருவளர்ச்செல்வர் இராமச்சந்திரன் அவர்கட்கும் காரைக்குடி தெற்குத்தெரு சா. நா. சா. தெ. அவர்கள் இல்லத்தில் தேவகோட்டை தாலூக்கா போர்டு மெம்பர் காரைக்குடி உயர்திருவாளர் சி. ராம. இராமச்சந்திரன் சேர்வை அவர்கள் தலைமையில் திருமண ஒப்பந்தம் நடைபெறும். அது சமயம் தாங்கள் தம்பதிகள் சகிதம் தோழர் குழாத்துடன் வந்திருந்து சிறப்பிக்குமாறு வேண்டுகின்றேன்.

சென்னை "திராவிடன் ஆசிரியர்" தோழர் டி. வி. சுப்பிரமணியம் அவர்களும், திருமதி குருசாமி குஞ்சிதம் அம்மையார் பி. ஏ., எல். டி., அவர்களும், திருமதி ராமசுப்பிரமணியம் நீலாவதி அம்மையார் அவர்களும், பட்டுக்கோட்டை தோழர் கே. வி. அழகர்சாமி அவர்களும், பூவாளூர் தோழர் அ. பொன்னம்பலம் அவர்களும் அதுசமயம் சொற்பொழிவாற்றுவார்கள்.

தங்களன்புள்ள

சி. பொ. சி. மெய்யப்பன்

காரைக்குடி.

பெண்மக்களே! எழுங்கள்.

வைதீகக்கோட்டையைத் தகர்த்தெறிவோம்.

(திருமதி எஸ். நீலாவதி).

ஏழாண்டுகட்கு முன்னர்
தோன்றி எழில்மிகு
சிறப்புடன் பல்லோர் கருத்தையும்
தன்வயம் ஈர்த்து பாரிடை உலவி
வரும் சுயமரியாதை இயக்கம் அடி
மைத்தளையாங்காங்கு இருக்கின்
றதோ, உயர்வு தாழ்வுக்கொடுமையெங்
கெங்கு உலாவுகின்றதோ அவை
அனைத்தையும் அடியோடு அழிக்க
வேண்டுமென அஞ்சாது முழக்கி
வருகின்றது. புரோகிதக்குழுவினர்
தம் துரோகத்தையும், பார்ப்பனீயப்
பேயின் வஞ்சகத்தையும் தன்னல
வெறியர்களின் சூழ்ச்சிகளையும் மக்
கள் 'உள்ளங்கைநெல்லிக்கனி' யென
உணரும் வண்ணம் இடித்திடித்தெ
டுத்தோதிவருவதை எவரும் மறந்திரு
க்கமுடியாது. இவ்வியக்க உழைப்
பின் பலனே இன்று நம்மக்கள் மனி
தரென்ற உணர்ச்சிபெற்று கண்விழி
த்திருப்பதற்கு காரணமாகும் என்ப
தையும் யார்மறுக்கக்கூடும்? கர்ப்ப
காலத்திலிருந்து இறக்கும் வரையி
லும், இறந்தபின்னரும் சடங்குச்
சாத்தான்களுக்கு கைகட்டி வாய்
பொத்தி சேவகம் செய்துவந்த நம்
மக்கள், தற்போது பகுத்தறிவுபெ
ற்று அச்சாத்தானின் தொல்லையி
னின்று சிறிதுசிறிதாய் மீண்டு வரு
கின்றனர். குறிப்பாக பார்ப்பனர்
களின் மதிப்பு (அகங்காரம்) குறை
ந்தே விட்டது என்பதில் எள்ளளவும்
பிசகில்லை. யாண்டும் நாடெங்கும்
பார்ப்பனீயமற்ற விழாக்கள் நடை
பெற்று வருவதே அதற்குத்தக்க
தோர் சான்றாகும். மேலும் சுயமரி
யாதை இயக்கம் மேற்கொண்ட
அரியதோர் பணியானது 'பெண்
மக்கள் சுதந்தரம்' பேணுதலேயாகும்.
பெண்மக்கள் உரிமைகளை நிலை
நாட்ட முற்பட்டதே சுயமரியாதை
இயக்கம் சிறப்புற்றோங்கிய தற்குக்
காரணமென இன்னும் சிறப்புற்
றோங்குவதற்குக் காரணமென துணி
ந்து கூறுவேன். அடிமைகளெனத்
தள்ளப்பட்ட பெண் சமூகம், அடுப்
பங்கரைக்கே உரியவர்களென ஒதுக்
கப்பட்ட பெண்சமூகம், ஆண்மக்க
ளின் இன்பப்பாவைகளென கருதப்
பட்ட பெண், சமூகம் குருடர்களாய்
இருட்டறையில் கூடிநின்ற பெண்
சமூகம் சிறகொடிந்த பறவைகளாய்
கூண்டில் அடைக்கப்பட்ட பெண்

ணுலகம் இன்று 'பெண்மக்கள் பெ
ருமையுணர்த்த' பெரியார் ராமசாமி
யவர்களால் கண்திறந்து சுதந்திரப்
போரில் இடம்பெற கலந்து யார்
அடிமைகள்? எவர் தாழ்ந்தவர்கள்?
நாங்கள் அடிமைகளென்னில், யாங்
கள் தாழ்ந்தவர்களென்னில் யாங்கள்
பாபப்பிறவிகளென்னில் எங்கள்
வயிற்றில் உதித்த நீங்கள்யார்?
என்றுகேட்க ஆரம்பித்துவிட்டது.
ஏன்? கேட்டேவருகின்றது. இன்
னுஞ்சின்னாட்களுக்குள் பெண்மக்
கள் இயக்கம் பெருத்த வெற்றியடை
யுமென்பதில் ஐயமொன்றுமில்லை.
கண்திறந்த பின்னர் கூடவா சேற்
றில் கால்வைத்து இடறுவார்கள்?
அது இல்லவே இல்லை. ஆனால்
'சோழியன் குடுமி சும்மா ஆடுமா?'
என்பதுபோல் மதக்காப்பாளர்களும்
சாத்திரபக்தர்களும், கூட்டங்கூடி
காரியத்தோடு கூச்சல் போடுவது
தான் வியப்பைத்தருகின்றது. ஒரு
வரை ஒருவர் ஒரு நாளைக்கு ஏமாற்ற
லாம், ஆனால் எல்லோரையும். ஒரு
சிறு குழுவினர் எக்காலத்திலும்
ஏமாற்றிக்கொண்டிருக்க முடியாது.
ஒருவர் ஒருநாளைக்குத்தெரியாமல்
மோசம் போகலாம். ஆனால் பலர்
பலநாளைக்கு அறியாமல் ஏமாறுவது
இயலாததுதானே? என்று எண்ணிப்
பார்க்க (வைதீகர்களின் மூளை அவர்
களை அந்த ஆராய்ச்சிக்கு விடுவ
தில்லை போலும்!) என் நேரமில்லை
யோ தெரியவில்லை. ஆனால் பார்ப்
பனர்கள் என்னபாடு படினும் இனி
மேல் அவர் தம் ஜம்பம் பலிப்பதென்
பது வீண்தான், இதையறியாமல்
பாவம்! துள்ளிக்குதிக்கின்றார்கள்.

பெண்மக்கள் முன்னேற்றமும்; பார்ப்பனர்கள் ஆர்ப்பாட்டமும்.

வாசகர்களே! இவ்வளவு தூரம்
எழுதவேண்டிய அவசியத்தை
தஞ்சை பார்ப்பன மகாநாடு உண்
டாக்கிவிட்டதென்பதை தெரிவித்
துக்கொள்ளுவதோடு மகாநாட்டின்
நடவடிக்கைகள் பழைய கருப்பனே
கருப்பன் என்று இருந்தாலும் நமது
மக்கள் ஏமாறாதிருக்கவும் பார்ப்பன
சூழ்ச்சியை அறியவும் குறிப்பாக
வைதீகர்கள் பெண்கள் விஷயத்தில்
இனியும் கிள்ளுக்கீரையாய் நடந்து
கொள்ளவேண்டா மென்பதை எச்
சரிக்கை செய்யவுமே இக்கட்டுரை
எழுத முன்வந்தேன் என்பதையும்
குறிப்பிடவிரும்புகிறேன். குப்புற
ப்படுத்திருப்பவர்கள் என்றும் குப்
புறபடுத்திருக்க முடியாது என்று
வது தலை நிமிரும்படியாய்த்தான்
வரும். இதை ஆத்திரக்காரர்கள்
ஆராய்ந்து பார்ப்பது கிடையாது.
நிற்க வழக்கம்போல் பாலிய விவா
கம்தான் செய்யவேண்டும், மதநடு
நிலைமை வேண்டும், சாத்திரக்கட்டளை
களைசற்றும்மீறக்கூடாது. பெண்களை
அடிமைகளாகவே வைத்திருக்கவேண்
டும், கோவில்களில் தாசிகள் குடி
யிருக்கவேவேண்டும் என்ற தீர்மான
ங்கள் தாம் நிறைவேற்றப்பட்டிருக்
கின்றன. ஆனால் அவை அனைத்
தையும் விலக்கி பெண்கள் விஷயத்
தைப்பற்றிய செய்திகளைமட்டும்
ஈண்டு சிறிது விவரிக்கப்புகுகின்
றேன்.

பெண்கள் மகாநாடுகளென்று
கூறப்படுபவை மேல்நாட்டு முறை
களைப் பின்பற்றும் ஒரு சில பெண்
களே அடங்கியவையென்றும் அவை
மத ஆக்ஞைகளையும், சமூக நெறி
களையும் மீறி எல்லா வகுப்புகளி
னுடையவும் கலை, ஒற்றுமை, அன்னி
யோன்னிய சமூக குடும்பவாழ்வு
முதலியவற்றை அசாத்தியமாக்கு
வதாயும், இம்மாதிரி பெண்கள் மகா
நாடுகளின் தீர்மானங்கள் இந்தியப்
பெண்களின் அபிப்பிராயத்தைத்
தெரிவிப்பதாகத் தவறாக நினைத்துக்
கொண்டுவிட வேண்டாமென்று
மக்களுக்கும் கவர்ன்மெண்டுக்கும்
எச்சரிக்கை செய்வதாய் ஓர் தீர்
மானம் நிறைவேறியுள்ளது.

நன்று! பெண்களால் பின்பற்றப்
படும் மேல்நாட்டு முறைகள் எவை
எவையென தீர்மான கர்த்தாக்கள்
சிறிது தெளிவுபடுத்தியிருந்தால் நல
மாயிருக்கும். போகட்டும் பெண்
கள் பின்பற்றும் மேல்நாட்டு முறை
கள் காப்பி குடித்தலா, ஒயின் குடித்
தலா, கப்பலேறுதலா, அந்நியநாடு
சென்று நீசபாஷையாகிய ஆங்கிலம்
கற்பதா, உத்தியோகம் பார்ப்பதா,
மாட்டுக்கறியும், கோழிக்குஞ்சு சூப்
பும், பன்றிக்கறியும், பட்சமாய்
சாப்பிடுவதா, உச்சிக்குடுமிபோய்
ஒய்யாரக்கிராப்பு வைத்தலா, காசு
கூட பெறாத தர்ப்பைப்புல் வாச்சை
(கடியாரம்) விலக்கி ஆகாதவன் உண்
டாக்கிய (ரிஸ்ட்வாச்) என்னும் கைக்
கடியாரத்தை அணிந்து திரிவதா
எதுவென்று கேட்கிறேன். மேல்
நாட்டுமுறைகளை ஒரு எள்ளளவைக்
கூட குறைக்காமல் அப்படியே இற
க்குமதி செய்கிறவர்கள் இந்த ஐயர்,
ஐயங்கார், சாத்திரிகள் என்பதில்
கடுகளவேனும் தப்பிதமுண்டோ?
மேல்நாட்டுமுறைகளைப் பின்பற்றும்
ஒருசில பெண்களின் ஒலியைப்பற்றி
கவலைகொள்ளவேண்டாமென், கவ
னிக்கவேண்டாமென கதறும் இவர்
கள் தம்சாதி ஆசாரம்விட்டு சமயநீதி
விட்டு மதவொழுக்கம்விட்டு, சாத்
திரதிட்டம்விட்டு, கோத்திரசட்டம்
விட்டு வெள்ளைக்காரனிடம் வெள்ளை
யப்பன் (பணம்) ஒருவனையே குறி
யாகக்கொண்டு சேவகம் செய்யும்
ஒரு சிறு கூட்டத்தாராகிய இன்னா
ரின் கூச்சலை மக்கள் ஏன் கவனிக்க
வேண்டும்? அதில் எவ்வாறு கவலை
கொள்ளுவார்கள்? பெண்கள் மகா
நாட்டுத்தீர்மானங்கள் மத ஆக்ஞை
களையும், சமூக நெறிகளையும், மீறு
கிறதாம் ஓ! பார்ப்பனப்பதர்களே!
ஆழந்தெரியாமல் காலைவிட்டு அவ
திப்படாதீர்கள்! எச்சரிக்கை! எச்
சரிக்கை!! சமூக நெறிகளை மீறிசண்
டாளத்துவம் அடைந்திருப்பவர்கள்.
நீங்களே யன்றோ? மேலும் உங்
கள் வேதபுராண இதிகாச குப்பைக
ளுக்கு அடிமைப்பட்டிருப்பது தான்
சாத்திர நெறி யென்னில் அந்நெறியி
னின்று ஒழுக இனி எந்தப் பெண்
ணும் முன் வரா தென்பதை உணர்
வீர்களாக! அகங்கார வெறி பிடித்த
உங்கள் ஆர்ப்பாட்டம் செல்லும்
காலம் மலையேறி விட்டது. பெண்
மக்கள் சுதந்திரத்தைப் பற்றி, பெண்
மக்கள் உரிமையே தன் உயிர் நாடி
யென உழைத்து வரும் சுயமரியா
தை இயக்கத்தைப் பற்றி தாறு மாறா
கப் பேசுவீர்களே யானால், அதனைக்
கூறுகூறாகக் கிழித்தெறிந்து குப்பை
யோடு சேர்க்க பெண் மக்கள் இதோ
தயாரா யிருக்கின்றனர். "மாதர்
தம்மை இழிவு செய்யும் மடமை
யைக் கொளுத்த" மாதருலகம்வீறிட்
டெழுந்து விட்டது. நீங்கள் கூட்
டம் கூடிய சமயத்திலேயே உங்க
ளுக்கு அறிவுச் சுடர் கொளுத்தும்
முறையில் நீங்கள் வெட்கித்தலைகுனி
யும் முறையில் எமது, சகோதரியார்
குஞ்சிதம் பி. ஏ. எல். டி. அவர்கள்
தலைமையில் "மனிதர்யாரும்ஒருநிகர்
சமான" மென்ற மாபெரும் இயக்க
மகாநாடு எவ்வளவு சிறப்புடன் நடந்
தேறியது. ஓர் பெண்மணி பி. ஏ.
எல். டி. பட்டம் பெற்று அறிஞர்
களால் ஆதரிக்கப்பட்ட உயரிய
தோர் இயக்கத்தின் (மகாநாட்டில்)
மாபெரும் சபையில் தலைமை தாங்கு
வதைக் கண்டு உங்கள் மனம் எவ்
வாறு சகிக்கும்? உங்கள் வயறு பற்
றித்தான் எரியும் ஆனால் சுதந்திர
உணர்ச்சி பொங்கி யெழுந்து நிற்
கின்றது. இனி அதை யடக்க ஒரு
வராலும் இயலாது. உங்களால் தாழ்த்
தி வைக்கப்பட்ட தீண்டப்படா சகோ
தரர்களாகட்டும், பெண் மக்களாகட்
டும் நீங்கள் கூறும் பழம் பஞ்சாங்கத்
திற்கு செவி சாய்க்கப் போவது இல்
லவே இல்லை யென்பதைத் திண
ணமாய் மனதிலிருத்துங்கள். சமூக
நெறிகளைக் கடந்து, நீச அரசாங்கத்
தில் நீச பாஷை கற்று, நீசத்தொழில்
கள் பல புரியும் நீங்கள் பெண்கள் மு
ன்னேற்றம் பற்றி அழுக்காரடைந்து
அவர்கள் உங்கள் காலின் கீழ் உங்கள்
போன்றாரின் பாதத்தின் கீழ் அழுந்
திக் கிடக்க வேண்டு மென்றும் கருத்
தை யுன்னி சமூக நெறிகள் நாச
மாய்ப் போகிற தென சண்டப் பிர
சண்டம் செய்ய உங்கட்கு என்ன
யோக்கியதை இருக்கின்றது. ஒரு
பாலுக்கொருபால் அடிமையாயிருப்
பதுதான் சமூகநெறியோ? வெகு அ
ழகுசமூக நெறி யென்பதற்குப் பதில்

தொடர்ச்சி 14-ம் பக்கம் பார்க்க.

மடிசஞ்சிகள் மகாநாடு.

"பிறப்பினால் பாகுபாடு கற்பிக்கும் பாழும் பழக்க வழக்கத்தைத்தகர்த்தெறிய, சட்டமியற்றவும், சதுர்வித உபாயங்களை அனுஷ்டிக்கவும் இந்தியருக்கு உரிமையுண்டு"

°° °° °°

"பசிக்கும் வயிற்றிற்கு ஒரு கவள சாதம் கொடுக்க சக்தியற்ற "சாமிகளும்" சாஸ்திரங்களும் இந்நாட்டுக்கு வேண்டியதில்லை.

தஞ்சாவூர் பிராமணர் மகாநாடு என்றபெயர் வைத்துக்கொண்டு திருவிட மருதூரில் சில பிராமணர்கள் கும்பல் கூடி செய்திருக்கும் தீர்மானங்களை மற்றோர் இடத்தில் பிரசுரித்திருக்கிறோம். பிராமண சமூகத்திலுள்ள குறைகளைப்போக்க வழி காண்பதற்காக மாத்திரம் இம் மகா நாட்டைக்கூட்டி அதற்கு வேண்டிய தீர்மானங்களையும் செய்திருப்பார்களாயின் அதைப் பற்றியாரும் குறை கூறப்போவதில்லை ஆனால் பிராமணீயத்தையும் ஹிந்து தர்மத்தையும் காக்கப்புறப்பட்டிருப்பதாகக் கூறிக்கொண்டு, தேசீய சமதர்மத்திற்கு முட்டுக்கட்டை போட இவர்கள் முற்பட்டிருப்பதை யாரும் சகித்துக்கொண்டிருக்க முடியாது. இந்தியாவில் இனி ஏற்படப்போகும் அரசியலில் சர்வ ஜாதியாருக்கும் தங்களிஷ்டப்படி நடக்கும் மதவுரிமையளிக்கும் பிரகடனமொன்றிருக்க வேண்டுமென இந்த பிராமணர்கள் செய்திருக்கும் முதல் தீர்மானம் கூறுகிறது. எந்த சமூகத்தின் மத சமூக நம்பிக்கை உரிமைகள் முதலியவைகளை பாதிக்கக்கூடிய சட்ட திட்டங்கள் எதையும் சட்டசபைகளோ சர்க்காரோ செய்யமுடியாதபடி அரசியல் அமைப்பில் தக்க பாதுகாப்புகளிருக்க வேண்டுமென்றும் மற்றோர் தீர்மானம் நிறைவேற்றியிருக்கிறார்கள். பிராமண தர்மத்திற்கு ஆபத்து ஏற்படாதிருக்க வேண்டுமாகில் இத்தகைய பாதுகாப்புகள் அத்தியாவசியமென்றும் அம்மகாநாட்டில் பேசியிருக்கிறார்கள். பிராமண தர்மத்திற்கு பாதுகாப்பு அவசியமாவென்பதைப்பற்றி யோசிக்குமுன்பு பிராமண தர்மம் என்னவென்பதை கவனிக்கவேண்டியது அவசியமாகும். இதைப்பற்றி எந்த தீர்மானமும் விளக்கமாகக் கூறாவிட்டாலும் பிர்மாவின் முகத்திலிருந்து தோன்றியதால் பிராமணனாகப் பிறந்தவனெல்லாம் உயர்வு என்ற வர்ணாச்சிரம அக்கிரமமே பிராமண தர்மமென்பது இவர்களுடைய மனோபாவமென்பதை நாம் விளக்கிவைக்க வேண்டியதில்லை. மேலும் வேதத்தையும் ஆகம சாஸ்திரங்களைப்பற்றியும் இவர்கள் பேசப் புறப்பட்டிருப்பதிலிருந்து அவற்றில்கண்ட பிராமண தர்மத்தை நிலைநாட்டவே இவர்கள் மகாநாடு கூட்டியிருக்கிறார்களென்றும் நினைக்க வேண்டியிருக்கிறது. இந்த பிராமண தர்மத்தைக் காக்கவேண்டியது அவசியமென்றே வைத்துக்கொள்வோம். ஆனால் திருவிடமருதூரில் கூடிய பிராமணர்கள் யாருக்காவது வேதாகம முறைப்படி ஒழுக்கமோ யோக்கியதையோ இருக்கிறதாவென கேட்கிறோம். பிராமணன் மூன்று நாள் சாப்பாட்டிற்கு மேல் சொத்து வைத்துக்கொள்ளக்கூடாதென்றும். உஞ்சவிருத்தியெடுத்து வேத பாராயணத்தையே தொழிலாக வைத்துக்கொள்ள வேண்டுமென்றும், வேதாகமங்கள் கூறுகின்றன, அப்படியிருந்தும் வேத விதியை மீறி வக்கீல் தொழிலும், சேவகா விருத்தியும் செய்து வயிறு வளர்க்கும் நாகரிக பிராமணர்கள் வேதாகமத்தையும் ஹிந்து தர்மத்தையும் காக்கப்புறப்பட்டிருப்பதாகக்கூறுவதற்கு என்னயோக்கியதையிருக்கிறதென்று கேட்கிறோம். வேதம் படிக்கவேண்டிய பிராமணர் ஆங்கிலம் படித்து உத்தியோகம் பார்க்கவும், மற்றுஞ்சகல தொழில்களையும் செய்துவரும் இக்காலத்தில் பழைய நிலைமையைப் பாதுகாக்கப் போவதாகக் கூறுவது பாசாங்கைத் தவிர வேறில்லை.

சமூக விஷயங்களில் பிராமணர் பெற்றிருக்கும் உரிமைகளில் தலையிடக்கூடாதென்பது சரியாவென்பதை இனி கவனிப்போம். சர்வ ஜனங்களுக்கும் சம உரிமையளித்து சகல சமூகங்களும் உயர்வு தாழ்வின்றி வாழப்பார்க்கவேண்டியதே நல்ல சர்க்காரின் கடமை யென்பதை அறிவுள்ள யாவரும் ஒப்புக்கொண்டே தீருவார்கள். ஜன சமூகத்தில் பிறப்பினால் ஒரு சாரார் உயர்வுகொள்ள சந்தர்ப்பமளிக்கும் நாடு எதுவாயிருந்தாலும் அந்நாட்டு சர்க்கார் எத்தகையதாயிருந்தாலும் அந்நாடும் சர்க்காரும் சிறந்தவைகளென யாரும் கூறமுடியாது. பிராமணர் ஜனசமூகத்தை விட்டுப்பிரிந்து காடுகளுக்குச்சென்று, கந்த மூலங்களைப் புசித்து கண்மூடி தபசிகளாயிருக்கப் போய் விடுவார்களாகில் அவர்களைப் பற்றி சர்க்காரோ அன்றி ஜன சமூகமோ தலையிடப்போவதில்லை. ஆனால் அவர்களும் மற்ற சமூகங்களுடன் வாழ்ந்து மற்றவர்களை மிருகங்களிலும் கேவலமாக மதிக்கும் மனோபாவம் பெற்றிருக்கும் வரையில் மானமுள்ள சர்க்காரோ சமூகமோ சும்மாயிருக்க முடியாது. பிறப்பினால் பாகுபாடு கற்பிக்கும் பாழும் பழக்க வழக்கத்தைத் தகர்த்தெரிய சட்டமியற்றவும் சதுர்வித உபாயங்களை அனுஷ்டிக்கவும் இந்தியருக்கு உரிமையுண்டு. ஆகையால் அடுத்த அரசியலில் பிராமணருக்கும் அவர்களுடைய 'உயர்' விற்கும் பாதுகாப்பு வேண்டுமெனக்கேட்பது அயோக்கியத்தனமாகும். மேலும் பிராமண தர்மம் தேசீய வளர்ச்சிக்கும் ஹிந்து தர்மத்திற்கும் எவ்வளவு ஆபத்தானதாயிருக்கிறதென்பதற்கு ஆலயப் பிரவேசத்தைக் குறித்து அவர்கள் நிறைவேற்றியிருக்கும் தீர்மானத்தைவிட வேறு உதாரணம் வேண்டியதில்லை. 'தீண்டாதார்' ஆலயங்களில் பிரவேசிப்பது நீண்டகாலமாக அமுலிலிருந்துவரும் பழக்க வழக்கங்களுக்கும்ஆகமசாஸ்திரங்களுக்கும் விரோதமானதாவதோடுஹிந்து சமூகத்தைச் சேர்ந்த பக்தர்களுள் சண்டை சச்சரவுகள் ஏற்படநேருமென்றும் தீர்மானித்திருக்கிறார்கள். ஆலயப்பிரவேச சத்தியாக்கிரகத்தில் காங்கிரஸ் தலையிட்டால் அதன் செல்வாக்கு அழிந்துவிடுமென்றும் மிரட்டியிருக்கிறார்கள். ஈஸ்வர சன்னிதானத்தில் ஹிந்து சமூகத்தைச் சேர்ந்த ஒரு சாராரை அனுமதிக்க மறுப்பதைவிட அக்கிரமமும் சண்டை சச்சரவை வளர்க்கக்கூடிய காரியமும் வேறு எதுவுமிருக்கமுடியாது. ஆகையால் ஹிந்து சமூகம் சகோதரத்துவத்துடன் வாழவேண்டுமாகில் 'தீண்டாதா'ருக்கு ஆலய தரிசன உரிமை அளிக்கவேண்டியது இன்றியமையாததாகும். அதைவிட்டு சண்டை சச்சரவையும் ஆகம சாஸ்திரங்களையும் காட்டி காரங்கிரசை மிரட்டி வர்ணாச்சிரம அதர்மத்தை சாஸ்வதமாக்கி விடலாமென்று திருவிடமருதூரில் கூடிய பிராமணர்கள் கருதுவார்களாகில், அக்காலம் மலையேறிவிட்டதென்பதை அவர்களுக்கு ஞாபக மூட்டுகிறோம். உடம்பில் நல்ல ரத்தமும், ரோஷமுமுள்ள ஹிந்து இருக்கும் வரையில், பிராமணீய 'உயர்'வும், வர்ணாசிரம அநீதியும் அழிந்தே தீருமென்பதையும் வைதீக வம்பர்களுக்கு எச்சரிக்கிறோம்.

°° °°

கடைசியாக சாரதா சட்டத்தின் பேரிலும் சீறி விழுந்திருக்கிறார்கள். சாரதா சட்டத்திற்கு இந்தியா சட்டசபையில் கொண்டு வந்திருக்கும் திருத்தம் நிறைவேறுவதற்கு வேண்டிய உதவியை சர்க்கார் செய்ய வேண்டுமென்றும் தீர்மானித்திருப்பதோடு இதற்கு வேண்டிய வேலைகளைக் கவனிக்க கமிட்டி யொன்றையும் நியமித்திருக்கிறார்கள். இந்த வைதிகர்களுடைய பூச்சாண்டியைக் கண்டு சர்க்கார் கவலைப்படப் போவதில்லையாகையால் சாரதா சட்டத் திருத்தத்தை நிறைவேற்றி விடமுடியுமென்று நாம் நம்பவில்லை, ஆனால் சாரதா சட்டம் ரத்தாக வேண்டியதின் அவசியத்தைக் குறித்து இவர்கள் கூறும் காரணந்தான் அதிக வேடிக்கையாயிருக்கிறது. பெண்கள் ருதுவான பிறகு விவாகஞ் செய்வதால் பெரும் பாவம் வந்து விடுவதாகவும், விவாகத்தின் தெய்வீகத் தன்மை கெட்டு விடுவதாகவும் கூறுகிறார்கள். பால்ய விவாகம் செய்யும் சமூகங்களில் தான் பால்ய விதவைகள் தொகை அதிகமாயிருக்கும் போது, குழந்தைகளுக்குக் கல்யாணஞ் செய்வதில் தெய்வீகத் தன்மை எங்கிருக்கிறதெனக் கேட்கிறோம். தேசத்திற்கு நன்மையான காரியங்களுக்கெல்லாம் குறுக்கில் நின்று தடுக்க முற்படும் ஒரு சில வைதீகப் பித்தர்களாலும் அரசியல் பிராமண வஞ்சத்தாலும் பிராமண சமூகத்தின் மீது பொதுவாக நாட்டில் தோன்றி வரும் வெறுப்பை பிராமண வாலிபர்கள் கவனிக்க வேண்டுகிறோம். இந்த ஆஷாடபூதிகளின் ஆர்ப்பாட்டத்தை அடக்கி சமூகத் தீமைகளை அழித்து சமதர்ம நோக்கத்தை வளர்க்க தேசீய பிராமண வாலிபர்களும் முன் வராவிடில் சமூகத்திற்கே பெரிய ஆபத்து நேர்ந்து விடுமென்பதை பிராமண வாலிபர்கள் உணர வேண்டியது அவசியம். இல்லாவிடில் இவர்கள் சூழ்ச்சிகள்வலுக்க வலுக்க, அச்சமூகத்தைச் சேர்ந்த எல்லோரிடத்திலும் துவேஷம் வளர்ந்து கொண்டு தான் வருமென்பது திண்ணம். பழங்காலத்தில் எது எப்படியிருந்திருப்பினும் இக்கால தேச வர்த்தமானங்களை அனுசரித்து நடந்து கொள்ளாதவர்கள் அறிவற்றவர்களென்பதில் சந்தேகமில்லை. கற்றவரும் கல்லாதாரும் பிழைக்க வழியின்றி தவிக்கும் இக்காலத்தில் மடிசஞ்சிகள் பேச்சைக் கேட்டு பிராம்மண இளைஞர்கள் மதிமோசம் போகக் கூடாதென்று எச்சரிக்கின்றோம். பசிக்கும் வயிற்றிற்கு ஒரு கவள சாதம் கொடுக்க சக்தியற்ற "சாமிகளும்" சாஸ்திரங்களும் இந்நாட்டுக்கு வேண்டியதில்லை. ஏதோ பிராமண சமூகத்திற்கு ஆபத்துகள் வந்து விட்டது போலவும், அதைத் தடுக்க தாங்கள் புறப்பட்டிருப்பதாகவும், வைதீக பிராமணர்கள் பாசாங்கு செய்வது பெரும் புரட்டாகும். மடிசஞ்சிகள் மகாநாடுகள் கூட்டுவதும் மந்திரங்கள் ஜபிப்பதும், இனி மேல் பயன்படாதென்பதை தஞ்சாவூர் பிராமணர்கள் அறிந்திருக்க வேண்டுமென்கிறோம்.

(21-6-32 'தமிழ்நாடு' தலையங்கம்)

திரு. குருசாமி—குஞ்சிதம்

புதிய விலாசம்.

எஸ். குருசாமி-குஞ்சிதம்,
2/24 சிவராமன் தெரு,
திருவல்லிக்கேணி, சென்னை.

குடி அரசு.

ஈரோடு 1932 ஜூலை மீ 3-உ

மாகாண சுயாட்சி தான்.

—:0:—

சட்ட மறுப்பால் பயனில்லை.

நமது நாட்டில் உள்ள ஆவேசங் கொண்ட தேசாபிமானிகள் கூட்டத்தில்பல மாதங்களாய், பூரண சுயேச்சைப் பேச்சும், குடியேற்ற நாட்டு ஆட்சிப் பேச்சும், ஐக்கிய ஆட்சிப் பேச்சும் நடைபெற்று வந்தன. இந்தியாவுக்குஎத்தகைய சீர்திருத்தம் வழங்கலாம் என்பதை விசாரித்து முடிவு செய்வதற்காக ஆங்கிலப் பாராளுமன்றத்தாரால் நியமிக்கப்பட்ட "சைமன் கமிஷ"னை காங்கிரஸ்காரர்கள் பகிஷ்காரம் பண்ணினார்கள். "பூரண சுயேச்சையே இந்தியாவுக்கு வேண்டும்" என்று சொல்லி திரு. காந்திஅவர்களின் தலைமையில் "உப்பு சத்தியாக்கிரகம்" சட்ட மறுப்பு முதலியவற்றை நடத்தி தேசத்தில் பெருங்குழப்பத்தையும், கிளர்ச்சியையும் உண்டாக்கினார்கள். இவ்வாறு சட்டமறுப்பு இயக்கம் பலமாக நடைபெற்ற காரணத்தால் பிரிட்டிஷ் அரசாங்கத்தாரும், இந்தியர்களிடம் தாராள மனதுகாட்டுவது போல், வட்டமேஜை மகாநாடு ஒன்றை ஏற்படுத்தி இந்தியப் பிரதிநிதிகளை இங்கிலாந்திற்கு வரவழைத்து அரசியல் சீர்திருத்தம் சம்பந்தமாக விவாதிக்கச் செய்தார்கள். முதலில் நடந்த வட்ட மேஜை மகாநாட்டிற்குக் காங்கிரஸ் பிரதிநிதிகள் செல்லவில்லை. ஆனாலும் முதல் மகாநாட்டிலேயே இந்தியாவுக்கு ஐக்கிய ஆட்சியை ஏற்படுத்துவது என்று தீர்மானித்தார்கள். பிறகு இரண்டாம்முறை நடந்த வட்டமேஜை மகாநாட்டிற்குக் காங்கிரசின் ஏகப்பிரதிநிதியாக திரு.காந்திஅவர்களும்சென்றார். இந்த மகாநாடும் ஐக்கிய ஆட்சியை ஏற்படுத்துவது என்ற முதல் மகாநாட்டு முடிவோடு நின்றதே ஒழிய, அவ்வாட்சிக்கான திட்டங்கள் ஏற்படுத்துவது பற்றி ஒரு முடிவுக்கும் வாராமல் கலைந்தது. கடைசியாக பிரிட்டிஷ் முதல் மந்திரியால் வாக்குரிமைக் கமிட்டி, சமஸ்தானக்கமிட்டி ஆலோசனைக் கமிட்டி எனமூன்று கமிட்டிகள் நியமிக்கப் பட்டன. இக்கமிட்டிகளில் வாக்குரிமைக் கமிட்டியின் வேலையும், சமஸ்தானக் கமிட்டியின் வேலையும் முடிந்து விட்டன. இவைகளின் அறிக்கைகள் பிரிட்டிஷ் அரசாங்கத்திடம் இருக்கின்றது. இன்னும் ஆலோசனைக் கமிட்டியின் வேலைகள் முழுவதும் முடியவில்லை.

வட்ட மேஜை மகாநாடு கூடியது முதல் சில தினங்களுக்கு முன், சென்ற 27—6—32 ல் இந்தியா மந்திரியின் அறிக்கை வெளியாகும் வரையிலும் எங்கும் ஐக்கிய ஆட்சியைப் பற்றியே பேச்சாக இருந்தது. ஆனால் இந்தியாவில் ஐக்கிய ஆட்சியை ஏற்படுத்துவதில் உள்ள இடையூறுகளையும், சிக்கல்களையும் உணர்ந்த பல நிருபர்களும், அரசியல் வாதிகளும், மாகாண ஆட்சி தான் முதலில் ஏற்படக் கூடும் என்று கூறி வந்தார்கள். "காந்தி-இர்வின்" ஒப்பந்தம் ஏற்பட்டது முதல் பெரும்பாலான காங்கிரஸ்காரர்களும், திரு. காந்தியும் ஐக்கிய ஆட்சித் திட்டத்தை ஒப்புக் கொண்டனர்.

ஆனால் நாம் மாத்திரம் ஆதி முதல், "ஐக்கிய ஆட்சி ஏற்பட இடமில்லை" என்றே கூறி வந்தோம். வட்ட மேஜை மகாநாடு ஏற்படுவதற்கு முன் உண்டான "சைமன் கமிட்டி" அறிக்கைபின்படியும், அவ்வறிக்கையின் மேல் இந்திய அரசாங்கத்தார் செய்துள்ள சிபாரிசின்படியும் அமைந்த "மாகாண சுய ஆட்சி" தான் ஏற்படும் என்றும், ஆகவே "காங்கிரஸ்" காரர்கள் செய்யும் சட்ட மறுப்பினாலும் மற்றவர்கள் போடும் கூச்சலினாலும் ஒரு பயனும் இல்லை என்றும் கூறி வந்தோம்.

இவ்வுண்மையைத் தற்சமயம் இந்தியா மந்திரி வெளியிட்டிருக்கும் அறிக்கையைக் கொண்டு உணரலாம். இந்தியா மந்திரியின் அறிக்கையை சென்ற 27—6—32-ல் மேன்மை தங்கிய வைசிராய் அவர்கள் வெளியிட்டுள்ளார்கள். அவ்வறிக்கையிலிருந்து நமக்குத் தெரியும் செய்தி யாவது:—

"தற்பொழுது அவசரமாக மகாண சுயாட்சி கொடுப்பதே பிரிட்டிஷ் அரசாங்கத்தின் முடிவாகும். ஆனால் இப்பொழுது மாகாண சுயாட்சிக்காக தயாரிக்கப் போகும் அறிக்கையிலேயே ஐக்கிய ஆட்சிக்கான திட்டமும் ஏற்படுத்தப் பட்டிருக்கும். இக்கிய ஆட்சித்திட்டங்களை ஆராய்ந்து முடிவுசெய்வதற்குஅதிக காலம் பிடிக்குமாதலால் முதலில் மாகாண சுயாட்சியே வழங்கப்படும்.

வகுப்புப் பிரச்சினை சம்பந்தமாக அரசாங்கத்தார் தமது முடிவை இன்னும் இரண்டு மாதங்களுக்குள் தெரிவித்து விடுவார்கள். அதன் பின் ஆலோசனைக் கமிட்டியின் கூட்டம் நடைபெற்று அதன் அறிக்கை தயாரிக்கப் படும்- இதன் பின்பே பாராளுமன்றத்தாரால் நியமிக்கப் படும் கூட்டு கமிட்டியினால் இந்தியப் பிரதிநிதிகளையும் விசாரித்து உடனே மாகாண சுயாட்சியைக் கொடுக்கின்ற மசோதா தயாரிக்கப்படும். இம்மசோதாவைத் தயாரிக்கும் போது வாக்குரிமைக் கமிட்டி, சமஸ்தானக்கமிட்டி, ஆலோசனைக் கமிட்டி ஆகியவைகளின் அறிக்கைகளையும் துணையாக வைத்துக் கொள்ளப்படும். இவ்வாறு தயாரிக்கப் பட்டமசோதா பாராளுமன்றத்தாரால் ஒப்புக் கொள்ளப் பட்ட பின் சட்டமாக அமுலுக்கு வரும்."

என்பது தான் இந்தியா மந்திரியின் அறிக்கையில் உள்ள சாரமாகும். இனி தயாரிக்கப் படப் போகும் அறிக்கை, பாராளுமன்றக் கூட்டுக் கமிட்டியினால் இந்தியப் பிரதிநிதிகளின் உதவியையுங் கொண்டு தயாரிக்கப் படும் என்று விளம்பரப் படுத்தியிருந்தாலும் உண்மையில் அவ்வறிக்கை, குப்பைத் தொட்டியில் போட்டு விட்டதாக அறியாதவர்களால் கருதப்படும் "சைமன் அறிக்கை"யை ஒட்டியதாகவும் அதன் மேல் இந்திய அரசாங்கத்தார் செய்திருக்கும் சிபாரிசை ஒட்டியதாகவும் தான் இருக்கும் என்பதில் ஐயமில்லை என்றே சொல்லலாம்.

ஆகவே இது வரையிலும், "சைமன் கமிஷனை" எதிர்த்தும், வட்ட மேஜை மகாநாட்டை எதிர்த்தும், பிரிட்டிஷ் அரசாங்கத்தை எதிர்த்தும் சட்ட மறுப்பும், கிளர்ச்சிகளும் செய்ததனால் என்ன பலன் கிடைத்தது? என்று கேட்கிறோம்.

"சட்ட மறுப்பு இயக்கத்தை ஒடுக்கி, தேசத்தில் அமைதியை ஏற்படுத்துகின்றோம்" என்று சொல்லிக் கொண்டு இக்திய அரசாங்கத்தாரால் பிறப்பிக்கப்பட்ட அவசரச் சட்டங்களாலும், அவைகளை எதிர்த்துச்சட்ட மறுப்புக்காரர்கள் செய்யும் கலகங்களாலும் நிரபராதியான ஏழை மக்கள் கஷ்டப் படுகிறது தான் கண்ட பலன்.

"பிரிட்டிஷ் அரசாங்கத்தார் "முதலில் இந்தியாவுக்கு மாகாண சுயாட்சி தான் கொடுப்பது" என்று தீர்மானித்திருப்பதால் அரசாங்கத்திற்கு இப்பொழுது இருந்து வரும் "இந்திய அரசியல் வாதிகளின் ஆதரவும், பொது ஜனங்களின் ஆதரவும் குறைந்து விடும். ஆகையால் மாகாண சுயாட்சித் திட்டத்தை யாரும் ஒப்புக் கொள்ள மாட்டார்கள்" என்று சிலர் கூறி வருகிறார்கள். இக்கூற்று சிறிதும் உண்மையற்றது என்று நாம் கூறுவோம். இங்கிலாந்தில் இரண்டாவது வட்டமேஜை மகாநாடு நடந்த காலத்திலேயே பிரபலமான இந்திய அரசியல் வாதிகளில் பலர் ஐக்கிய ஆட்சியை ஏற்படுத்துவதற்கு முன் மாகாண சுயாட்சியை ஏற்படுத்தவேண்டுமென்று கூறினார்கள். வட்ட மேஜை மகாநாடு கலைந்த பின்னும், முஸ்லீம் தலைவர்களில் பலரும், இந்துத்தலைவர்களில் பலரும், மற்ற சிறுபான்மை வகுப்புத்தலைவர்களில் பெரும்பாலானவர்களும் முதலில் 'மாகாண சுயாட்சி' ஏற்படுத்தும் விஷயத்தை ஆதரிப்பதாக அபிப்பிராயங்கள் வெளியிட்டிருக்கிறார்கள். ஆகையால் அரசாங்கத்தார் ஏககாலத்தில் ஐக்கிய ஆட்சியையும் மாகாண சுயாட்சியையும் விரும்புகின்றவர்களும், பூரண சுயேட்சைக் காரர்களும் காட்டும்பூச்சாண்டிகளுக்குப் பயப்படமாட்டார்கள்.

இதற்கு மத்தியில் அரசாங்கத்தார் காங்கிரசுடன் 'சமாதானம் பண்ணிக்கொள்ளவேண்டும் என்று', அவசரச்சட்டங்களையெல்லாம் நீக்கிவிடவேண்டுமென்றும், மீண்டும் அவசரச்சட்டங்களை ஏற்படுத்தக்கூடாதென்றும், இனி வரப்போகும் தேர்தலில் ஜனங்களிடம் ஓட்டுப்பெற விரும்பும் "தேசபக்தர்கள்" எல்லாம் தனித்தனியாகவும் ஒன்று சேர்ந்தும் பல அறிக்கைகள் வெளியிட்டார்கள். திரு. காந்தி அவர்களும் "தேசிய கௌரவத்திற்குப்பங்கம் வராதசமாதான"த்திற்குச் சம்மதிப்பதாக வெளியிட்டிருந்தார்.

ஆனால் சிறந்த ராஜதந்திரியான லார்டு வில்லிங்டன் அரசாங்கத்தார் "காங்கிரஸ்காரர்கள் சட்ட மறுப்பு நடத்திக்கொண்டிருக்கின்றவரையிலும் எத்தகைய சமாதானத்திற்கும் தயாராஇல்லை' என்ற முடிவோடு இருக்கிறார்கள் என்ற விஷயம் அடிக்கடி தெரி

விக்கப்பட்டிருக்கின்றது. ஆயினும் அரசியல் தந்திரம் அறியாதவரும், மதபக்தரும் ஆன மாஜி வைசிராய் லார்டு இர்வின் பிரபு அவர்களுடன் திரு. காந்தியவர்கள் சமாதான உடன்படிக்கை செய்து கொண்டதுபோல லார்டு வில்லிங்டன் பிரபு அவர்களுடன் செய்துகொள்ள முடியாது என்பதை காங்கிரஸ்காரர்கள் இன்னும் உணராததாலேயே மிடிவர்தமாகச் சட்டமறுப்பை நடத்திக்கொண்டிருக்கின்றனர். ஒருக்கால் காங்கிரசுக்கும் இந்திய அரசாங்கத்திற்கும் சமாதானம் ஏற்பட்டாலும் முன்பு ஏற்பட்ட "காந்தி-இர்வின்" ஒப்பந்தத்தைப்போல் போலிச்சமாதானம் ஏற்படாது என்பது நிச்சயம். காங்கிரஸ்படிந்து வந்தாலொழிய சமாதானம் செய்துகொள்ளப் போவதில்லை என்ற உறுதியினால்தான் இப்பொழுதுள்ள அவசரச் சட்டங்களின் காலம் முடிந்தபின் மீண்டும் ஜூலை 3-ந்தேதிமுதல் புதிய அவசரச்சட்டங்களை ஏற்படுத்துவதாக அரசாங்கத்தார் முடிவு செய்திருக்கின்றார்கள். இதுபற்றி சென்ற 27—6—32ல் பாராளுமன்றத்தில் இந்தியாமந்திரியவர்கள்

"ஜூலை மாதம் 3-ம் தேதி முதல் புதிய அவசர அதிகாரங்களைப் பெற வேண்டிய சங்கடமான நிலைமைக்கு வந்திருக்கிறோமாகையால் அதற்கு வேண்டிய அவசர அதிகாரங்களைப்பெறுவதென்று முடிவு செய்திருக்கிறோம்."

என்று பேசியிருப்பது கவனிக்கத்தக்கதாகும்.

ஆகவே இதுவரையிலும் கூறியவற்றால் இப்பொழுது மாகாண சுயாட்சி கொடுப்பதாகவே அரசாங்கத்தார் முடிவு செய்திருக்கிறார்கள் என்பதையும் பூரண சுயேச்சைக்காகவும், ஐக்கிய ஆட்சிக்காகவும், செய்த சட்டமறுப்புக்களும், போட்ட கூச்சல்களும் வீணே என்பதையும், காங்கிரஸ்காரர்கள் சட்ட மறுப்புச்செய்து கொண்டிருக்கும் வரையிலும் அரசாங்கத்தார் சமாதானத்திற்கு இணங்கப்போவதில்லையென்பதையும், அவசரச்சட்டங்களையும் கைவிடப்போவதில்லை யென்பதையும் உணரலாம்.

இந்த நிலையில் தேசமக்கள் செய்யவேண்டிய வேலைவரப்போகும் மாகாண சுயாட்சியில் ஒவ்வொரு வகுப்பினரும் சமபங்கு பெற்றுத்தங்கள் தங்கள் நிலையைச்சரிப்படுத்திக்கொள்ள முயலுவதேயாகும். பிற்போக்கடைந்திருக்கும் சமூகத்தினர் இப்பொழுது ஏமாந்து பேசாமலிருந்துவிட்டால் பிறகு கஷ்டப்படுமாறு நேரும். ஆகையால் முக்கியமாகத் தாழ்த்தப்பட்ட சமூகத்தினர் வரப்போகும் மாகாண சுயாட்சியில் சட்டசபைகளிலும் மற்ற பொது ஸ்தாபனங்களிலும் தங்கள் ஜனத்தொகைக்குத்தகுந்த பிரதிநிதித்துவம் பெறுவதற்கும் தங்கள் சமூகத்தின் முன்னேற்றத்திற்கும் யாருடைய தாட்சண்யத்திற்கும் கட்டுப்படாமல் உழைக்கக்கூடிய பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுப்பதற்கும் தகுந்தவகையை மாகாண சுயாட்சித்திட்டத்தில் அமைக்கும்படி கிளர்ச்சி செய்யவேண்டும். வகுப்புப்பிரச்சினை சம்பந்தமான முடிவிலேயே தாழ்த்தப்பட்ட சமூகத்தினருடைய நன்மைதீமைகளும் மற்ற பிற்போக்குள்ள சமூகத்தினருடைய நன்மைதீமைகளும் அடங்கியிருக்கின்றன. ஆகையால் எல்லாச்சமூகத்திற்கும் அரசியலில் நியாயமான பிரதிநிதித்துவம் ஏற்படும்படி முடிவு கூறுமாறு பிரிட்டிஷ் முதல் மந்திரிக்கு எடுத்துக்காட்டுவதே இச்சமயத்தில் உண்மையான தேசாபிமானிகளின் கடமையாகும் என்பதை நினைப்பூட்டுகிறோம். இதைவிட்டு இன்னும் வீணாகச் சட்டமறுப்பென்றும், சத்தியாக்கிரகமென்றும் சொல்லிக்கொண்டு தேசத்தின் அமைதியைக் கெடுத்துக்கொண்டிருப்பதனால் ஒருபயனும் இல்லையென்று எச்சரிக்கை செய்கின்றோம்.

வெற்றிக்குறி.

திருச்சியில் உயர்திருவாளர் எம். டி. சோமசுந்திரம் அவர்கள் தலைமையில் நடைபெற்ற சீர்திருத்த திருமணநிகழ்ச்சியைப்பற்றிய செய்தி பிறிதோரிடம் பிரசுரிக்கப்பட்டுளது. நமதன்பர் சோமசுந்திரமவர்கள் சென்னை அரசாங்க அமைச்சர் கனம் பி. டி ராஜன் அவர்களது சிறியதந்தையென்பதும், தொண்டைமண்டல முதலியார் என்றுசொல்லப்படும் வகுப்பைச்சேர்ந்தவரென்பதும்நேயர்கள் அறிந்ததே. அன்னார்தலைமையில் புரோகிதம் ஒழிந்த. சீர்திருத்தத்திருமணம்நடந்ததானது ஷைசமூகத்தில் ஒருபெரும் புரட்சியைபுண்டாக்கி விட்டதென்றே சொல்லவேண்டும். ஏனெனில் இந்த சமூகத்தார் தாங்கள் ஜாதியில் உயர்ந்தவர்கள் என்றஇறுமாப்புக் கொண்டிருப்பதோடு புரோகிதத்தையோ, வைதீக மதாசார சடங்குகளையோ எக்காரணம்கொண்டும் கைவிட ஒருப்படாதவர்கள். அத்தகைய ஓர் 'பெரிய' வகுப்பில் புரோகிதமொழிந்த சீர்திருத்தத்திருமணம் நடந்ததென்றால், அது நமதியக்கத்திற்கு மகத்தானவெற்றியென்றே கூறவேண்டும். நமதியக்கக்கொள்கைகள் நாட்டில் எவ்வளவுமலிந்து வருகின்றதென்பதோடு நமது கொள்கைகள் திட்டங்கள்யாவும் மக்களுக்கு தங்கள் தினசரிவாழ்க்கைக்குப் பயன்படத்தக்க இன்றியமையாதனவாயிருக்கின்றன வென்பது நன்குபுலனாகும். நமது கொள்கைகள் நாடெங்கும் பரவி சர்வவியாபகமாக வேண்டுவதற்கு பார்ப்பனீயகோட்டைகளும் சைவக்கோட்டைகளும் தகர்த்தெறியப்படவேண்டுமென நாம் பன்முறையும் இடித்திடித்து கூறி வந்திருக்கிறோம். தலைவரவர்கள் தனது முன்னுரையில் சுயமரியாதை உலகெலாம் பரவவேண்டுமென அவாவுவதையும் இத்தகைய மணங்கள் நாட்டிற்கு எவ்வகையிலும் புதிதன்று எனவும், இது பழங்காலமுறையே என்றும் குறித்திருப்பதைப்பாராட்டுவதோடு இத்தகைய திருமணங்கள் ஏராளமாக நடைபெற வேண்டுமென்றும் விரும்புகிறோம்.

"லெனின்"

நமதியக்கத்தோழர் மாயவரம் சி. நடராஜன் அவர்களுக்கு ஆண்மகவு பிறந்திருந்த சந்தோஷசெய்தியை சில வாரங்களுக்குமுன் பிரசுரித்திருந்தது நேயர்களுக்கு ஞாபகமிருக்கலாம். அதைவிட முக்கியமும் விசேஷமான மற்றொரு அதுசம்மந்தமான செய்தியை இவ்வாரம் பிரசுரிக்க அளவிலா மகிழ்ச்சியடைகிறோம்.

பண்டைய பழக்க வழக்கத்தையும், சம்பிரதாயத்தையும் எக்காரணம்பற்றியும் நம்மக்கள், என்ன வரினும் கை விட மனந்துணிவதேயில்லை. வாலிபர்களும், படித்துப்பட்டம் பெற்றவர்களுமே அப்படி என்றால்வயோதிகர்களைப் பற்றியும் வைதீகர்களைப்பற்றியும் ஒன்றும் சொல்லவேண்டியதில்லை. பிறந்த குழந்தைகளுக்குநாமகரணம்சூட்டுவதில் சாஸ்திர புராணங்களிலுள்ள பெயர்களையும்,நம்தேசத்திலுள்ளசாமிகள் குட்டிச்சாமிகளின் பெயரையிட்டு அழைப்பதில், ஆனந்தப்படுவதில் ஒரு தனிபாத்தியதையும்பெருமையும் இந்தியருக்கேயுண்டு என்பதையாவரும் மறுக்கமுடியாது. அவ்வாறிருக்க தோழர் நடராஜன் அவர்கள் தன் மகவுக்கு இந்தியப்பெயர்களை அறவே விட்டு, நூதன முறையில் ஓர் உலகப்பெரியார்,ஓர் இயக்கத்தலைவர் திரு. "லெனின்" அவர்கள் ஞாபகார்த்தமாக அவரது பெயரையே முதன் முதலாக சூட்டியிருப்பதறிய அளவிலா மகிழ்வெய்துகிறோம். தோழர் நடராஜன் அவர்களது நவீன முயற்சியைப் பாராட்டுவதோடு ஏனைய நமது நண்பர்களும் இதை பின்பற்றுவார்களென்றே எண்ணுகிறோம்.

சாரதாசட்ட அமுல் மாப்பிள்ளைகளுக்கு தண்டனை.

மைனர் பெண்ணைவிவாகம்செய்து கொண்ட குற்றத்திற்காக கல்கத்தாவைச்சேர்ந்த அமர் சந்சாதானி, சேமரத்னபகாதி என்ற இரண்டுமார்வாரி வியாபாரிகளுக்கு 10 நாள்காவல்தண்டனையும் 500 ரூ. அபராதமும் விதிக்கப்பட்டது.

இராமநாதபுரம் ஜில்லா இரண்டாவது சுயமரியாதை மகாநாடு.

காரைக்குடியில் 2. 3—7—32-ல் நடைபெறுவதென்று முடிவு செய்யப் பெற்றிருந்த இராமநாதபுரம் ஜில்லா இரண்டாவது சுயமரியாதை மகாநாட்டை பல வசதிகளை யுத்தேசித்தும் மகாநாட்டிற்கு வர இசைந்துள்ள தலைவர்களின் பிற வசதிகளையும் உத்தேசித்து மகாநாட்டுத் தேதியை மாற்றி ஒத்தி வைக்கும்படி நேர்ந்தது. மகாநாட்டுக்காகவேண்டிய முயற்சிகள் செய்யப்பட்டு வருகின்றது. என்று மகாநாட்டுக் காரியதரிசிகள் அறிவிக்கின்றார்கள்.

பாலர்கள் பசியால் வருந்த, பாலாபிஷேகஞ் செய்வது தான் அறிவுடைமையா?

ஈரோடு முனிசிபாலிட்டி.

முனிசிபல் வண்டிப் பேட்டையை (மறு ஏலதேதி முதல்) 31—3—35 முடிய அனுபவித்துக் கொள்ளும் பாத்தியதையை 6—8—32 காலை 9-30 மணிக்கு முனிசிபல் சங்கத்தாரால் பகிரங்கமாக மறு ஏலம் போடப்படும். நிபந்தனைகளை ஆபீசில் நோட்டீஸ் போர்டில் பார்த்துக் கொள்ளலாம்.

(ஒப்பம்)
கே. ஏ. ஷேக்தாவுத்.
சேர்மன்.

லட்சுமி-ராஜரெத்தினம் திருமணம்.

சுயமரியாதைக்குப்பெரிய வெற்றி.

திரு. எம். டி. சோமசுந்தரம் தலைவர்.

சடங்குகள் அடியோடு ஒழிந்தன.

ஜூன்-மீ 15-தேதி புதன் கிழமையன்று அம்பில் தோழர் செல்லப்பா அவர்கள் குமாரத்தி திருமதி லட்சுமிக்கும் ஷையூர் தோழர் சரவண முதலியாரவர்கள் குமாரர் தோழர் ராஜரெத்தினம் அவர்கட்கும் திருச்சி முனிசிபல் சத்திரத்தில் நடைபெற்ற சுயமரியாதைத்திருமணமானது "தொண்டைமண்டல முதலியார்" என்று சொல்லப்படும் வகுப்பில் ஒரு பெரிய புரட்சியான சம்பவமென்றே சொல்லலாம். இவ்வைபவத்திற்கு கனம் மந்திரி பி. டி. ராஜன் அவர்களது சிறிய தகப்பனரும், உத்தமபாளையம் ஜமீன்தாரருமாகிய உயர்திருவாளர் எம். டி. சோமசுந்திரம் அவர்கள் தலைமை வகித்தார்கள். சத்திரத்தினுடைய ஹாலில் சுமார் 1200 ஜனங்கள் கூடியிருந்தனர். மணமக்கள் எவ்வித ஆடம்பரமுமின்றி, மணவரை முதலிய வீண்டம்பங்கள் கூட இல்லாமல் ஆளுக்கொரு சோபாவில் அமர்ந்திருந்தனர். திருமணத்திற்கு வந்திருந்தவர்களில் குறிப்பிடக் கூடியவர்கள்:— தோழர்கள் மதுரை காமாட்சி முதலியார், கோவை ஏ. ஆர். சிவானந்தம், அவர் மனையார், சென்னை பிரசிடென்சி காலேஜ் தமிழாசிரியர் ஆறுமுகம் பி. ஏ., எல். டி., அவர் மனைவியார், குமாரசாமி பி. ஏ., சங்கர நாராயணன், மீனாட்சிசுந்தர முதலியார் பி. ஏ., டி. வி. சோமசுந்தரம் பி. ஏ., பி. எல்., வேதாசலம் வக்கீல், திருமதி குஞ்சிதம் பி. ஏ., எல். டி., குருசாமி பி. ஏ., எஸ். வி. லிங்கம், அ. பொன்னம்பலனார், திருமலைசாமி, ச. ம. சி. பரமசிவம், அப்பாவு நாடார், பிச்சக்கார நாட்டார், ஜெம்புலிங்கம், பூமிநாதம், இன்ஜினியர் கேதாரம், ராமச்சந்திரன், தாயுமான், திருமதி நீலவதி, ராமசுப்பிரமணியம், தியாகராஜ முதலியார், செல்லப்பா, குப்புசாமி முதலியார், சப்ரிஜிஸ்தார் அண்ணாமலை முதலியார், சந்திரகாச முதலியார், அவர் மனைவியார், நடேச முதலியார், ஷேக்தாவுத், கைலாச முதலியார், அவரது மனைவியார், முத்து முதலியார், சூரிய மூர்த்தி, பண்டிதர் திருமலைசாமி முதலியார், அரசங்குடி சுப்பிரமணிய முதலியார், திருத்தங்கல் கிருஷ்ண முதலியார், அருணசல முதலியார், வீரப்ப முதலியார், கோயம்பள்ளி தெய்வநாயக முதலியார், கீர்த்திவாசன் முதலியவர்களாகும்.

திருமணம் நடத்தி வைத்ததோழர் உத்தமபாளையம் எம். டி. சோமசுந்தரம் அவர்கள் "சுயமரியாதை சூழ்க உலகமெலாம்", என்ற தலைப்பிட்ட ஒரு பிரசங்கத்தை வாசித்தார். பிறகு மணமக்கள் பெயர் பொறிக்கப்பட்ட இரண்டு மோதிரங்களை தலைவர் அவர்கள் மணமக்களுக்கு இனமாக அளித்தார். பிறகு இருவரும் மாலைமாற்றிக்கொண்டனர்.

அதன்பின் சுயமரியாதைத்திருமணம் என்பதுபற்றி தோழர்கள்:— டி. எஸ். குஞ்சிதம் பி. ஏ., எல். டி., டி. வி. சோமசுந்தரம் பி. ஏ. பி.எல், ஏ. ஆர். சிவானந்தம், எஸ்.குருசாமி, நீலாவதி, அ. பொன்னம்பலனார் ஆகியவர்கள் பகல் 12-30 மணி வரையில் பிரசங்கம் செய்தார்கள். அதன் பிறகு தலைவர் முடிவுரை கூறுகையில், சுயமரியாதைத்திருமணத்தைத் தான் முற்றிலும் ஆதரிப்பதாகவும், இத்தகைய சிக்கனமான திருமணமே எல்லோரும் இனி நடத்தவேண்டுமென்றும், ஜாதி வித்தியாசம் ஒழிய வேண்டுமானல் கலப்பு மணம் செய்ய வேண்டுமென்றும், முதலாவது பேசிய திருமதி குஞ்சிதம் தன்னுடைய பேத்தி என்றும், திருமதி நீலாவதி பிரசங்கத்தைப்போல் எந்தப்பெண்ணும் அவ்வளவு அழகாகவும் வேகமாகவும் பேசியவர்களைத்தான் கண்டதில்லையென்றும், மணமக்களிருவரும் சுயமரியாதைக்கொள்கைகளைப் பரப்புவதில் ஈடுபடவேண்டுமென்றும், தோழர் ஈ. வெ. ராமசாமியாரால் ஆரம்பிக்கப்பட்ட இவ்வியக்கம் ஒன்று தான் இந்திய மக்களுக்குப்பயன் படக்கூடியதென்றும், இவ்வியக்கத்தை எல்லா மக்களும் ஆதரிக்கவேண்டியது கடமை யென்றும் பேசினர். பிறகு தோழர் ஆறுமுகம் பி. ஏ., எல். டி., அவர்கள் சுயமரியாதைஇயக்கத்தின்மேன்மையைப்பற்றியும், இக்கல்யாணத்திற்குக்காரணமாயிருந்த தோழர் செல்லப்பா அவர்களைப்பாராட்டியும் பேசிய பின்னர் தலைவருக்கு வந்தனம் கூறி, தாம்பூலம், சந்தனம் வழங்கப்பட்டு திருமணம் முடிந்தது.

வந்திருந்தவர்களெல்லோரும் சமபந்தி போஜனம் செய்தது குறிப்பிடத்தக்கது. புரோகிதப்பித்தும், ஜாதி அகம்பாவமும் கொண்ட ஒரு ஜாதியில் முதன் முதல் இம்மணத்தை தைரியமாகச்செய்ய முன்வந்த மணமக்களை சுயமரியாதை இயக்கம் பாராட்டக்கடமைப்பட்டுள்ளது.

தலைவர் திரு. எம். டி. சோமசுந்தரம் பிரசங்கம்.

தன்மதிப்புடைய தமிழ்நாட்டுப் பெரியார் பலர் வேண்டுகோட் கிணங்கித் தொண்டை மண்டலத்தினின்றும் போந்து முத்தும் முத்தமிழ்தரும் பாண்டிய நாட்டின் தலைநகரமாகிய மதுரையம்பதியிலும் உத்தமபாளையத்திலும் பெருநிலக்கிழமை பூண்டவனும் சென்னை யரசாங்க இரண்டாவது அமைச்சர் உயர்திருவாளர் பி. டி. ராஜன் அவர்கள் சிறிய தந்தையும் ஆகிய எம். டி. சோமசுந்திரன், அன்பில் உயர்திருவாளர் சரவண முதலியார் அருந்தவப் புதல்வர் நிறை நாட் செல்வர் இராசரெத்தினம் அவர்களும் மேற்படியூர் உயர் திருவாளர் செல்லப்பாப் பெரியாரவர்கள் அருந்தவப் புதல்வி நிறை நாட் செல்வி இலக்குமி அம்மையாரும் தலைப்பெய்து தம்முட் செய்து கொண்ட மண வொப்பந்தத்தை உறுதி செய்யும் காலத்து நிகழ்த்திய முன்னுரை:—

இவ் அவையின்கட் குழுமியுள்ள தன்மதிப்பிற் குன்றாத் தகைசால் பெண்மணிகளே! சான்றோர்களே! நாம் இங்குக் கூடியிருத்தல் நீண்ட காலமாக நாமிழந்தநம் மரியாதையை மீண்டும் அடையும் பொருட்டேயாம் நம் தண்ணிய தமிழ் நாட்டின் கண் வதிந்த நம் பெரியார் யாவரும் எல்லாத்துறைகளிலும் தங்கள் நன்கு மதிப்பிற்குன்றாமல் உயிரோம்பி வந்தன ரென்பதைப் பண்டைக்காலத்துப் பழந்தமிழ் நூல்களிற் பரக்க மிளிர்தலைக் கண் கூடாகப் பலருங் காணலாம். இங்ஙனமாப் செயல்களை இயல்பாவெய்திய பெரியார் வழித்தோன்றல்களாகியநாம் வேற்று நாட்டினின்றும் வயிறு வளர்த்தற் பொருட்டு நம் நாட்டிடைப் போந்த ஒரு சாரார் குழ்ச்சியிலகப்பட்டுப் பண்டைய ஒழுக்க வழக்கங்களையும் நன்கு மதிப்பினையும் இழந்து அவர் வயப்பட்டு விட்ட நாம் பண்டைய நிலைமையை நாளடைவிலெய்தி வருகின்றோம். இந்நிகழ்ச்சியின் நிமித்தம் நாம் இங்குக் குழுமியிருத்தலை ஒருண்மைத் தமிழ் மகன் கண்ணுறுவானாயின் களிபேருவகைக் கடலுள் மூழ்குவான் என்பதின் எட்டுணையும் ஐயமின்றாம்.

சீலமிக்க சிறப்புடையீர்! நந்தமிழ் நாட்டின் கண் பண்டைக்காலத்து ஓராண் மகனும் ஒரு பெண் மகளும் இல்லறம் நடத்துங் கருத்துடையாராயின் அவ்விருவரும் தனியிடத்துத் தலைப்பெய்து ஒருவர் மேலொருவர் காதல் கொள்வர்; இங்ஙனமிவர்கள் காதல் கொண்டதைக் குறிப்பானுணர்ந்த பாங்கி முதலியோர் அப்பெண் மணியின் நற்றாய் முதலியோரை அண்மி, அன்னையீர் நும்மகளைக் கட்டழகு வாழ்ந்த காளைப்பருவத்தானொரு ஆண்மகன் வாழ்க்கைத் துணைவியாகக் கொள்ளும் கருத்தினனாயுள்ளானெனக் கழறுவர்; அக்கழற்றுரைக் குடன்பட்ட தாய் முதலியோர் உள்ளக்கிடக்கையை, அவர் மணமகனுக் கறிவிக்க, அவனுடைய பாங்கன் முதலாயினோர், அம்மணமகன் தந்தை தாயாருக்கறிவிக்க, அத்தந்தை தாயர்கள் தம் தமருடன் பொன்னணி முதலியன கொண்டு அம்மணமகளின் இல்லிற்குச் செல்வர். இங்ஙனமிவர் மகட் கொள வந்தமையை அறிந்த அவ்வில்லிலுள்ளார் முகமன் கூறி வரவேற்று, அறவோர், சான்றோர், அருந்தவத்தோர் முதலிய பெரியார் முன், மண், நீர், அனல், வளி, வான், வெங்கதிர், தண்கதிர், முதலிய இயற்கைப் பொருள்கள் சான்றாக இம்மணமகளைக் கையடை கொடுப்பர். அதன் பின்னர் அம்மணமகன் என் வாழ்நாளில் இப்பெண்ணருங் கலத்திற்குளவாகும் இன்ப துன்பங்களை எனக்கு வந்ததாகக் கருதுவேன். இந்நங்கையும் எனக்கு வாழ்க்கைத் துணைவியாகி என்பாலுறும் இன்ப துன்பங்களைத் தன்பாலுறுவதாகக் கருதுவதற்கு அடையாளமாக இம்மணவணியை அணிகின்றேனென்று உறுதி கூறி, அம்மணவணியை யணிய, அன்று தொட்டு அவ்விருவரும் நீங்கா அன்புற்று இல்வாழ்க்கையை இனிது நடாத்தி எல்லாவின்பமு மெய்தி, இனிது வாழ்ந்து வந்தனரென்பது பழந்தமிழ் நூல்களான் அறியக்கிடக்கின்றது.

நலத்தகைவாய்ந்த நண்பீர்! "உற்றார்க்குரியர் பொற்றொடி மகளிர்" என்னும் முதுமொழியை நம் தமிழ் மக்கள் பொன்போற போற்றி மணவினையுற்றுக் கற்பொழுக்கங்களாற் சீருஞ்சிறப்புமெய்தி, வாழ்தலையறிந்து அழுக்காறு கொண்ட அயல் நாட்டினர் அச்சஞ்சிறிதுமின்றி, அமயமறிந்து இத்தமிழ்மக்களின் ஒழுக்க வழக்கங்களையும், மணமுறைகளையும் இழித்துக் கூறுதலையே தம் தொழிலாக மேற்கொண்டு தங்கள் ஒழுக்க வழக்கங்களும், மணமுறைகளுஞ் சாலச்சிறந்ததென உயர்த்திக்கூறுவாராயினர். வஞ்சம்புகாத நெஞ்சினராகிய நம் தமிழ்மக்கள், அவர்கள் கூறும் ஒழுக்க வழக்கங்களும், மணமுறைகளுஞ் சாலச்சிறந்ததெனக் கைக்கொண்டு தம் சீறிய பண்டைய ஒழுக்க வழக்கங்களையும், மணமுறைகளையும், நெகிழவிடலாயினர். இவர் நெகிழவிடும் அமையத்தை எதிர்நோக்கியிருந்த அயல்நாட்டினர் தம் கலியாணச் சடங்காகியகாரணங்களையும், ஒழுக்க வழக்கங்களையும் தமிழ்மக்களின் ஒழுக்க வழக்கங்களினும், மண

வினைகளிலும் புகுத்துவாராயினர். இங்ஙனம் மணமுறையினின்றும் நம் தமிழ்மக்கள் வேறுபாடுற்றமையை கனித்துணர்ந்தன்றே ஒல்காப் பெரும்புகழ்த் தொல்காப்பியனாரும் "பொய்யும் வழுவுந் தோன்றிய பின்னர் ஐயர் யாத்தனர்கரணமென்ப" எனச்சூத்திரிப்பாராயினர்.

பேரறிவுவாய்ந்த பெரியீர்! ஈண்டு நிகழாநிற்கும் திருமணவிழாவின் உண்மை நிலையறியாத நம்மவருட் சிலர் புதுமுறைத் திருமணவிழாவோவென ஐயுறலாம். இது புதுமுறை விழாவன்று. நம் தமிழ் நாட்டின் கண் வதிந்த பண்டைத் தமிழ்மக்களின் பழந்தமிழ்த்திருமணவிழாவேயாகும். இப்பண்டைத்தமிழர் மணமுறைப்படி இம்மணமகன் இம்மணமகளை வாழ்க்கைத் துணைவியாகக்கொண்டு இல்லறம் நடாத்தவும், இம்மணமகளும் இம்மணமகனை வாழ்க்கைத் துணைவனாகப்பெற்று அறவோர்க்களித்தல், துறவோர்க்கெதிர்த்தல், தொல்லோர் சிறப்பின் விருந்தெதிர் கோடல், சுற்றந்தழுவுதல் முதலிய அறநெறிகளை மேற்கொண்டு கற்புநெறியினின்று இல்லறம் நிகழ்த்தவும், இவ்விருவருக்கும் இம்மணவணியை அளிக்கின்றேன். இம்மணமகன் இம்மணமகளுக்கு இதனையணிந்து பல்லூழிகாலம் எல்லா நலனுமெய்தி இன்புற்று வாழுமாறு நாமனைவரும் வாழ்த்துவோமாக.

பெறலருஞ் சீர்மையமைந்த பெரியீர்! எல்லாவுயிர்க்கும் பிறப்பு ஒக்குமாகலான் இவ்வுலகின்கண்ணுள்ள நாமனைவரும் இத்திருமணமுறையைப் பின்பற்றி அன்பும் அருளுந் தாங்கி, இன்பமெய்தித் தன்மதிப்பிற் குன்றாது வாழ்வோமாக!.

பழையன கழிந்து புதியன புகுதலே. புரட்சி.

திரு. ஜார்ஜ்பர்னார்ட்ஷா அவர்கள் 28-5-32 இல் ஆக்ஸ்போர்டு சர்வகலாசாலைக்கு விஜயஞ்செய்து, மாணவர் கூட்டத்தில் செய்த சொற்பொழிவின் சுருக்கம்:—

உங்களைக் காட்டிலும் எனக்குமிகவும் வயதேறி விட்டதன்பொருட்டு நான் முதலில் உங்களிடம் மன்னிப்புக்கேட்டுக் கொள்ளுகிறேன். ஆக்ஸ்போர்டு சர்வகலாசாலையைப் பொறுத்தவரையில் இதில் சேருபவர்களுக்கு வயது நிபந்தனை இருக்கவேண்டியது முக்கியமாகும் என்று நான்பல தடவை கூறியிருக்கின்றேன். எனது அபிப்பிராயம் 23 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு இக்கலாசாலையில் யாதொரு வேலையும் இல்லையென்பதே. இப்பொழுது எனக்கு 76 வயது ஆகிறபடியால் எனக்கும் இங்குஒரு வேலையும் இருப்பதற்கு இடமில்லை. ஆனாலும் உங்களைவிட நான்அனுபவ முதிர்ச்சியுடையவன். ஆதலால் எனக்கு உங்கள் கூட்டத்தில் பேசஉரிமையுண்டு.

நான் எனக்குள்ள அனுபவ முதிர்ச்சியைப்பற்றி உங்களிடம் அதிகப் பிரசங்கம் பண்ண வரவில்லை. முதலாளிகளின் செல்வாக்கு மிகுந்துள்ள ஒரு சமூகத்தில் அனுபவ முதிர்ச்சியினால் ஒரு பயனும் உண்டாவதில்லை. பழயபழக்க வழக்கங்கள் எப்பொழுதும் அழியாமல் நிலைத்திருக்கவேண்டுமென்பதே முதியவர்களின் நோக்கமாகும். பழய பழக்க வழக்கங்களைப் பின்பற்றி ஒழுகிவந்த காரணத்தால்தான் இந்நாடு இன்று இந்த நிலையிலிருக்கிறது.

நான்எப்பொழுதும் வாலிபர்களான புரட்சிக்கூட்டத்தாருடன்தான் சம்பந்தம் வைத்துக்கொண்டு வந்திருக்கிறேன். நானும் ஒருபுரட்சிக்காரனாகவே இருந்திருக்கிறேன். நீங்களும் புரட்சியின் அனுபவத்தை அடைந்திருக்கிறீர்கள். உங்களுடைய சங்கத்தின் நோக்கமும் புரட்சிதான். புரட்சிக்காரர்களெல்லாம் முதலில் இளைஞர்களாயிருந்து, பிறகு நடுத்தர வயதுள்ளவர்களாகி, கடைசியில் வயதேறியவர்களாகியிருக்கிறார்கள். புரட்சிக்காரர்களாக இருந்த எனது பழய நண்பர்களில் திரு. ராம்சே மேக்டனால்டும் ஒருவராவார். திரு. ராம்சேமேக்டனால்டு அவர்கள் ஒரு காலத்தில் தீவிரமான புரட்சிக்காரராகவும், சமதர்ம வாதியாகவும், இருந்தது எனது நினைவிலிருக்கிறது இனி இப்பொழுது அவரைப்பற்றி ஒன்றும் கூறவில்லை. வாலிபர்களாகவும், புரட்சிக்காரர்களாகவும், இருக்கின்ற உங்களைப்பற்றியே இப்பொழுது நான்சிலவிஷயங்கள் சொல்லுகிறேன். உங்களில் பலர் 1930 ஆம் ஆண்டு வரையிலும் உயிரோடிருக்கலாம். ஆனால் அச்சமயம் நீங்கள் இப்பொழுது இருப்பதுபோல் புரட்சிக்காரர்களாக இருக்கமாட்டார்கள். உங்களில் சிலர் 1910 ஆம் வருஷம் வரையிலும் கூட புரட்சிக்காரர்களாக இருக்கமாட்டார்கள்.

முதலாளித் தத்துவத்தைவிட, புரட்சிதத்துவமானது மோசமானதன்று. புரட்சிக்குத்தயாராக இருக்கின்றவர்களையும், புரட்சி என்பதன் அர்த்தத்தைத் தெரிந்து கொண்டிருப்பவர்களையும், தவிரமற்றவர்களைப் புரட்சியின் தத்துவமே பிற்போக்குடையவர்களாக ஆக்கிவிடும், புரட்சியின் உண்மையான தத்துவம், பழயன கழிந்து புதியன புகுதலே யாகும்.

இந்நாட்டில் உள்ளவர்களுக்குப் புரட்சியில் சிறிதும் நம்பிக்கையே கிடையாது. இங்கு புரட்சிஇயக்கம் ஆரம்பிக்குமானால் அது இங்குள்ள பலரையும் ஆச்சரிய மடையும்படி செய்யும்.

புரட்சி இயக்கங்கள் சாதாரணகாரியங்களுக்காகத் தோன்றுவதில்லை. கொடுமையான காரியங்கள்நடைபெறும் பொழுதுதான் அதைக்கண்டிக்கும் பொருட்டு, புரட்சிஇயக்கங்கள்உற்பத்தியாகின்றன.

புரட்சி இயக்கங்கள் உற்பத்தியானவுடன் கொஞ்சம் கஷ்டங்களும்உண்டாகும். மக்கள் விரும்பிநிற்கும் நன்மைகள் உடனே கிடைப்பதில்லை. ஆகையால் இந்நிலையைத்தாங்கமுடியாமல் பலர் பிற்போக்காளர்களாகத் திரும்பிவிடுகிறார்கள்.

இந்நாட்டில் உள்ள குடிஅரசு சம்பந்தமான கொள்கைகள் எல்லாம் ரஷியாவிலும் இருக்கின்றன. இந்நாட்டில் உள்ள கொடுமைகளும் ருஷியாதேசத்தில் இருக்கின்றன.

உடனே பரீட்சை பார்க்கலாம்!

தாது புஷ்டிக்கு அதிசயமான டானிக்.

"கெய்ரோடைன்"

இந்தியா கவர்ன்மெண்டில் ரிஜிஸ்தர் செய்தது.

ஆறுமுக முத்திரையுள்ள மருந்துகள் மூன்று லட்சம் புட்டிகள் விலையாகி விட்டன. உண்மையான நற்சாட்சிகள் ஏராளம். மெலிந்து வாடியிருக்கிற பெண்கள் "கெய்ரோடைன்" சாப்பிட்டால் தேக புஷ்டியும், செழிப்பும் அழகும் உண்டாகும். டாக்டர்கள் இதை பரீட்சை பார்க்கலாம்.

"கெய்ரோடைன்" டானிக் மருந்து இரத்தசுத்தி, இரத்த விருத்தி, சதை புஷ்டி, பலம், அழகுதரும். மலச்சிக்கல், உஷ்ணவாய்வு, குன்ம வயிற்றுவலி, நீர்கடுப்பு, வெள்ளை, வாய்ப்புண், மூலச்சூடு, பெண்கள் சூதக வயிற்றுவலி, சூதக்கட்டுகளைக் குணப்படுத்தும். வாத நோய்கள், மேக நீர், துர்நீர்கள், க்ஷயம், இருமல், எலும்புருக்கி நோய், கைகால் அசதி, பலவீனங்கள் முதலிய நூற்றுக்கணக்கான நோய்கள் நீங்கித் தேகக்குளிர்ச்சியும்உண்டாகும். உடம்புக்குச் சுறு சுறுப்பும், களைப்பில்லாமல் வேலை செய்யக்கூடிய சக்தியும் இந்திரியக்கட்டும், அளவு மீறிய தாதுபுஷ்டியும் உண்டாகும். உடனே பரீட்சை பார்க்கலாம். பத்தியமில்லை கெடுதி செய்யாது. வியாதி இல்லாதவர்களும் தாது பலத்திற்காக இதைச்சாப்பிடலாம்.

பூரண சுகத்திற்கு ஒரு புட்டி மருந்து போதுமானது.

80 வேளை மருந்து புட்டி 1-க்கு விலை ரூ. 5. தபால் செலவு வேறு.

தந்தி விலாசம். "சித்தர்" மதுரை.

விலாசம்:— ஆர். எஸ். பதி அன்கோ., (ரிஜிஸ்டர்)
215, மேலை மாசிவீதி, மதுரை.

(7-ம் பக்கத்தொடர்ச்சி)

இதனைக்கண்டோர் உடனே டாக்டர்களால் தீராதநோய் நமது நாட்டு சாமியாரால் தீர்ந்தது என்று சொல்லுவது வழக்கம். இதை சாதாரணக்மாக படித்தவர்கள் வாயிலும் கேட்கலாம். டாக்டர்களால் குணமேற்படாமலும் இருக்கலாம். சாமியார் பச்சிலையை கசக்கி வாயில் பிழிந்தும் இருக்கலாம், இதன் பிறகுநோய் நீங்கியதாகவும் இருக்கலாம். இப்படி மூன்று சம்பவங்களும் உடன் நிகழ்ந்தும் இருக்கலாமன்றோ? பல நாளாக பிரசண்ட வைத்தியர்கள் செய்துவந்த சிகிச்சைகளால் நோயின் பலம் குறைந்துவரவும், உடலுக்குள்ள இயற்கை சக்தியால் திரேகம் நோயினின்று விடுபட்டு வருங்காலை சாமியாரால் லேகியமோ, பச்சிலையோ அல்லது பஸ்பமோ கொடுத்திருக்கலாம். இவ்விரண்டுடன் நிகழ்ச்சியால் நேர்ந்த பயனை சாமியார் நோயைத்தீர்த்தார் என்று சொல்வது அவசர தீர்மானமென்று என் எண்ணக்கூடாது? கொடுத்த சூரணம், பச்சிலை, பஸ்பம் இவைகளின் குணங்கள் இன்னவை என்று நிபுணர்களுக்குத் தெரியும் வரை அவ்வித மருந்துக்களை ஆயிரக் கணக்கானவர்களுக்குக் கொடுத்து அநேகருக்குக் குறித்தநோய் போயிற்றென்ற ரிகார்டுகள் ஏற்படும் வரை, நாட்டு வயித்தியர் செந்தூரங்களால், டாக்டர்களால் குணப்படாத நோயை குணப்பட்டு விட்டதாக தீர்மானிப்பது அவசர தீர்மானம் [Hasty conclusion) என்று சொல்லுவதற்கு என்ன தடை? சகல சந்தர்ப்பங்களையும் பரிசோதனை செய்து தான் சம்பவங்களின் காரணங்களை நிர்ணயிக்க வேண்டும். இந்தப்பழக்கமின்மையால் நம்மவர்கள் பலர், அவசரத்தீர்மானங்களுக்கு ஆளாகின்றார்கள்.

செந்தூரங்களாலும், பஸ்பங்களாலும், எதாகிலும் நன்மை உண்டாகலாம். ஆனால் அவைகளின் குணங்கள் மேல்நாட்டு மெஞ்ஞான உலகிற்கு தெரியவரு. நமது நாட்டு வைத்தியர்கள் முக்கிய குறை என்னவெனில் எதையும் வெளிமுகமாக செய்யாமல் மறைமுகமாகவே வே செய்வது பழக்கம். இந்தப்பழக்கம் மெஞ்ஞானத்திற்கு முற்றிலும் விரோதம். ஆனால் மெஞ்ஞானத்தின் முக்கிய லட்சணமென்னவெனில் எவ்வித சம்பவமாய் இருப்பினும், எல்லாவற்றையும் பகிர்முகமாக விசாரித்துணருதலென அறிக. மெஞ்ஞானத்திற்கு இரண்டு கருவிகள் உண்டு. அவையாவை எனில் முதலாவது பார்த்தால் [Observations] இரண்டாவது பரிட்சித்தல் [Experiment] இவ்விரண்டு கருவிகளைக்கொண்டே இது வரை தெரிந்து இருக்கும் சம்பவ காரணங்கள் விளக்கமுற்றன. இனி தெரிந்துகொள்ள வேண்டிய விஷயங்களும் மகத்தானதென சொல்லலாம். இதுவரை தெரிந்து இருக்கும் விஷயங்கள் தினை அளவு என்று சொல்ல வேண்டும். தெரிந்த விஷயங்களுக்கும், தெரியா விஷயங்களுக்கும் தெரிந்து கொள்வதற்கு வேண்டிய கருவிகள் முன்கூறிய இரண்டே—பார்த்தல், பரிட்சித்தல். இவ்விரண்டு கருவிகளை உபயோகிக்காததால் கடவுள்களாலும், மந்திரங்களாலும், பொய் பித்தலாட்டங்களாலும் உலகை நிறப்பிவைத்திருக்கிறோம். இச்சொற்குறிய வஸ்துக்கள் [Objects] இருக்கின்றனவா என்று "பார்த்தல்" எனும் கருவியைக்கொண்டும், "பரிட்சித்தல்" எனுங்கருவியைக்கொண்டும் உபயோகிக்கப் புகுந்தவாத்திரத்தில்இச்சொற்களின் வெறுமை [Emptiness] விளங்கும். சாதாரணமாக நமது வாழ்வுக்கு வேண்டிய விஷயங்களை நாம் இந்த இரண்டு கருவிகளால் அறிந்து கொள்ளுகின்றோம். சாதத்தில் உப்பில்லை என்றால் உடனே ருசித்துப் பார்க்கின்றோம். இது "பார்த்தல்" என்னப்படும். ஒரு வேளை நாவு நோயால் ருசிக்க முடியாமல் இருக்கலாம். அந்த வேளையில், ஆரோக்கியமுள்ள நாவைக்கொண்டு (Healthy Tongue) அறிந்து கொள்ளலாம். இது "பரிட்சை" என்னப்படும். இவ்விதமாகத்தான் நமது உலக அனுபவங்கள் யாவும் கட்டுப்பட்டுள்ளன. சம்பவங்களின் உண்மையைத்தெரிந்துகொள்ள இந்த இரண்டு வழிதான் உண்டு. அவைகளாவன — பார்ப்பதும், பரீட்சித்தலுமென அறிக. நீங்கள் சொல்லும், "பேய்" "பிசாசு" "மந்திர தந்திரம்" "கடவுள் மோட்சம்" முதலிய சொற்கள் இவ்விரண்டு கருவிகள் மூலமாக அறியக்கூடுமா என்று கேளுங்கள்? முடியாவிடில், அச்சொற்களை குப்பை தொட்டியில் போட்டு விடுங்கள். உலகை இன்னும் மோசம் செய்யாதீர்கள். மந்திரங்களால் எத்தனை மாங்காய் விழுந்ததைப் பார்த்தீர்கள்? தந்திரத்தால் எத்தனை "பூ அம்மாளை" கூடையில் போட்டு குத்தியதை பார்த்தீர்கள்? பூசைகள் பலிகளால் எத்தனை கோரிக்கைகள் நிறைவேறியதென்று தெரிந்து கொண்டீர்கள்? பச்சை இலையால் எத்தனை பாம்புகடி தீர்ந்தன என்று தெரிந்து கொண்டீர்கள்? அமாவாசைகளில் மருந்துண்டவர்கள் எத்தனை பேர் தேறியதாக தெரிந்து கொண்டீர்கள்? லக்கணம் பார்த்து செய்யும் கலியாணங்கள் எத்தனை அறுபட்டதென்று எண்ணுகின்றீர்கள்? என் இதன் கணக்குகளை (Statistics) எடுக்கப் பயப்படுகின்றீர்கள்? இதனைக் கண்டு தெளியாமல் தினமொன்றுக்கு இவைகளைப் பற்றியே, ஒரு கேள்வி கேட்கின்றீர்கள்? தெரிந்து கொள்ள வேண்டியது அவசியம் சங்கயை விளக்க வேண்டியதும் அவசியம். ஆனால், ஒரு விஷயத்தை பன்முறை திரும்பிக் கேட்பதில் பயன் யாது? சம்பவங்களின் காரணங்களை அறிய சிரத்தை எடுத்துக் கொள்ளாமல், வீண் கேள்விகளை பன்னிப் பன்னி கேட்பதும், அவைகளில்மூட நம்பிக்கை வைத்திருப்பதும், மனதின் சோம்பல் Mental inertia or idleness என அறிக. எளிதில் மோசம் போகக் கூடியவர்கள் தான், அமாவாசை கிர்த்திகை, பரணி பால்காவடி, அன்னக்காவடி, மச்சக் காவடி, தயிர் காவடி, பில்லி சூனியம் என்ற வெறுஞ் சொற்களில் நம்பிக்கை வைத்துளார் என அறிக. தெய்வீகத்தால் பால் பத்து நாளைக்கு கெடாமல் இருக்கின்றதாம்! அது பழனி ஆண்டவன் மகத்துவமாம்!! ஆனால், பால் டின்கள், மாம்ச டின்கள், மீன் டின்கள், சூப் டின்கள் கோடான கோடி, பத்து நாளல்ல, பத்து வாரம் நன்றாயிருப்பது யார் மகத்துவத்தால் என கேட்கின்றேன்?

நான் சிறுவனாக இருக்கும்போது (1879) பழனிக்கு அழைத்துக் கொண்டு போய் இருந்தேன். அவ்விடத்தில் இருந்த சில நண்பர்கள், பால் காவடி கொண்டு போவதைக் குறித்து எளனம் செய்தார்கள், பழனிக்கு அடுத்த கிராமத்தில், கலயத்தில் பாலை நிரப்பிக் கொண்டு, அதன் அடியில் சுண்ணாம்பு நீரை வைத்து தளும்பும் பால் துளிகள் அதன் மேல்பட அதனால் உண்டாகும் சுடுகையாய் பால் பழனி ஆண்டவன் சன்னிதானததில் கொதிக்ககாட்டுகின்றார்களாம்! இது உண்மையோ, பொய்யோ நான் அறியோம். ஆனால் பேய் பூதங்களின் மேல் இவ்வளவு ஆசை வைத்திருக்கும் நமது நண்பர்கள் ஏன் இத்தியாதி காட்சிகள் உண்டா அல்லவா என நன்றாக கண்டறியக்கூடாது? பேய்பிடித்த வீடென்று கூறும் [HauntedHouse) அனேகமுள்ளதாகக் கூறுகின்றார்கள் கல்வந்து விழும் வீடு, கட்டிலை தூங்கும் ஆளுடன் அப்புரப்படுத்தும்வீடு, மலம்விழும் வீடு உளதாகக்கேள்வி. இவைகளை யார் பரீட்சை செய்து விளங்கவைத்திருக்கின்றார்கள்?

இத்தியாதி சம்பவங்களை பரிசோதிக்க [Psychic Research Society]என்று ஒருசங்கம்மேல் நாடுகளில்இருக்கின்றனஅந்தரிப்போர்டு[Report] களைவாசித்தவர்களுக்கு இத்தியாதி மறைவான சம்பவங்களில் [Mysterious Appearances] அதிகமோசம் உளதாக ஏற்படும். இவ்வித மோசங்களைச் செய்து வந்த நூறுபேருக்கு மேலான மோசக்காரர்கள் கடந்த 30 வருஷங்களாக வெளிப்படுத்தப்பட்டார்கள்! இவ்வித பித்தலாட்டங்களை அறிய விருப்பமுள்ளவர்கள் 'குடிஅரசில்' 'காவடி' களைப் பற்றி நடக்கும் சூதுகளை வரையப்பட்டிருப்பதைக்காணலாம். அதையும் படித்துவிட்டு பழனி ஆண்டவன் சந்நதியில் நாகையில் சமைத்து வைத்த மச்சங்கள் உயிர்பெற்று குதிக்கின்றனவென்றால் அவ்வாசகர்களை என்னவென்று மதிப்பது!

உலகில் மனிதன் அறியாமையில் நிறைந்திருந்த காலை கல்லிலும் தூணிலும், துரும்பிலும், புல்லிலும் செடியிலும், நிலத்திலும், நீரிலும், பாழ் வீட்டிலும், குட்டிச்சுவர்களிலும், பருந்திலும், பட்சியிலும், நோயாளிகளிடத்திலும், பைத்தியம் கொண்டவர்களிடத்திலும் பேயோ? பிசாசோ, காற்றோ? கருப்பனோ? அண்ணமாரோ? கன்னிமாரோ? சாத்தான் சனியனோ? வசிப்பதாக கற்பனைசெய்துவந்தான். விஞ்ஞானம் பரவப்பரவ இந்தப்பேய் பூதக் கோஷ்டி எல்லாம்-பறந்தோடிப்போகின்றன. ஆனால் நமது அந்தகார இருளடைந்த நாட்டிலோ ஒவ்வொரு வீட்டிலும் இந்தப் பொய் தேவதைகள் வாசம் செய்யும் இடமாக துர்பாக்கியவசமாய் விட்டது. இந்த இருளைப்போக்கி மெஞ்ஞானத்தை (Science) நாட்டில் அறிந்து நடக்கும் காலம் எக்காலமோ அறியோம்! ஆனால் சுயமரியாதை சங்கத்தார் மெஞ்ஞான விதையைக் கையிலேந்தி அங்கும் இங்கும் விழைத்து வருகின்றனர். அவர்கள் முயற்சி கைகூட பிரார்த்திக்கின்றோம்.

[8ம் பக்கத்தொடர்ச்சி]

சண்டாள நெறியென்னில்பொருத்தமாயிருக்கும். இன்பத்திற்கென ஒரு ஒரு சமூகமும், துன்பத்திற்கென ஒரு சமூகமும் இருக்க வேண்டுமென்பதுதான் மத ஆக்ஞையென்னில் அதனைத் தீயிட்டுக் கொளுத்தியே தீருவோம். ஆணுக்கொரு நீதி, பெண்ணுக்கொரு நீதி அறைவது மதமேயாயினும், எவ்வளவு உயரிய நூலேயாயினும், மற்றெவர் (கபரியோரெனப்படுவர்) கூற்றேயாயினும் அதனைத் தவிடு பொடியாக்கப் பெண் மக்கள் இனி தயங்கப் போவதில்லை. இறுதியாக வைதீகக் குடுக்கைகளே! பெண்ணுலகம் கண் விழித்து விட்டது. இனி மேல் அது ஒரு ஊசிமுனையளவும் உங்கட்கு அடிமைப்படவோ, உங்கள் ஆர்ப்பாட்டங்களுக்கு செவி சாய்க்கவோ போவதில்லை உறுதி! ஆணுக்கே உரியதென உரிமை பாராட்டும் சகல தொழில்களிலும், போட்டி போட்டு வெற்றியடைந்து வீர வாழ்க்கையை மேற் கொள்ளப் போகின்றது. மேற் கொண்டும் வருகின்றது. மேலும் பெண்கள் மகாநாட்டைப் பற்றித் தீர்மானம் செய்ததீரர்களே! நாடெங்கும் நடை பெற்ற, நடை பெறும் எந்தப் பெண்கள் மகாநாட்டிலாவது கல்வி வேண்டாமென்றோ, மறு மணம்வேண்டாமென்றோ, சொத்துரிமை கூடாதென்றோ, விவாக விடுதலை வேண்டாமென்றோ, பால்ய விவாகம் தான் வேண்டுமென்றோ தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டிருக்கின்றதென்றோ உறுதி கூறுவீர்களா? என்று கேட்கின்றேன்.

(தொடரும்.)

கடவுள்களின் சுயமரியாதை மகாநாடு.

சென்னைக்கு 2000 மைல் உயரத்தில்

ஆகாயத்தில் கூடிற்று.

பற்பல ரிஷிகளும், தீர்க்கதரிசிகளும் விஜயம்செய்தனர்.

——:0:——

(M. R விகடன்)

(சென்ற வாரத்தொடர்ச்சி)

(பரமசிவன் பேச யெழுந்ததும் உறக்க பேசுங்கள் யென்ற சப்தம்) தலைவரவர்களுக்கும் சகோதரி சகோதரர்களுக்கும் எனது பட்சமான வந்தனத்தைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன். தோழர் இயேசு அவர்கள் அதிக நேரம் யெடுத்துக்கொண்டு மிக விரிவாக பேசினார். இப்போது நேரமும் ஆகிவிட்டது, ஆகையால் சுருக்கமாக சிலவற்றை மாத்திரம் சொல்லுகிறேன். என்மீது நம்பிக்கையுடையவர்கள் ஏறத்தாழ 22 கோடி ஜனங்கள் தான். அதுகூட இந்தியாவின் சிலபாகங்களில் மட்டுந்தான். ஆனால்நமது தலைவர்புத்தருக்கோ விஞ்ஞான சாஸ்திரிகள் உட்பட உலக முழுவதும் அவருடைய கொள்கையை பின் பற்றக்கூடிய ஜனங்கள் இருக்கிறார்கள். எனது 22 கோடி ஜனங்களிலும் ஆதிதிராவிடர்கள் 7 கோடி. இவர்களுக்குஎன் மதத்தில் யாதொரு உரிமையும் கிடையாது. என்மதத்திலுள்ள மேல் ஜாதியிந்துக்கள் இவர்களைக்கோவிலிலும், பள்ளியிலும், பொதுவான யிடங்களிலும் கூட சேர்க்கிறதில்லை. நாய், கழுதை, பன்றி முதலானமிருகவர்க்கங்கள் நடமாடுகிற தெருக்களிலும் கூடசெல்ல விடுகிறதில்லை. பட்சிகள் மலங்கழித்து பாசைகள் படர்ந்து, புழுபூச்சிகள் செத்து, துர்நாற்றம் யெடுக்கும் தண்ணீரை இவர்கள் எட்டிப்பார்த்தாலும் கூட மேல்ஜாதியா ரென்பவர்கள் இவர்களைத்துரத்தியடிப்பார்கள். இவர்கள் பிரத்தியட்சத்தில் - இத்துன்பங்களை எல்லாம் அநுபவித்தும் கொஞ்சங்கூட பகுத்தறிவும், சுயமரியாதையுமில்லாமல் தாங்களும் இந்துக்கள்தானென்றுபெருமையாக சொல்லிக்கொள்ளுகிறார்கள். (அவமரியாதை. வெட்கம்' கேவலம் என்றுகூட்டத்தில்பெரியக்கூச்சல்) இந்த அவமரியாதைக்காக வேண்டிதான் லட்சக்கணக்கான ஜனங்கள் தோழர் இயேசுஅவர்களின் மதத்தில் போய் சேர்ந்தார்கள் அங்குக்கூட பாழாய்போன பறப்பிசாசும் அவர்களை விட்டபாடில்லை. (அதற்குப்பரிகார மென்ன என்றகூச்சல்) சகோதரர்களே அதற்கு இப்போது சமூகமுன்னேற்றத்திற்கு தொண்டாற்றிவரும் சுயமரியாதை யியக்கத்தின் கொள்கைகளைப்பின்பற்றினாலொழிய, பட்டைநாமம் அடித்து உச்சிக் குடுமிவைத்து பார்ப்பனரைப் போல் பகல்வேஷம்போட்டு பரமசிவனின் பாட்டனாரை தொழுதாலும் இழிகுலத்தோ ரென்னபட்டபெயர் ஒருபோதும் இவர்களை விட்டகலப் போகிறதில்லை. இது இத்துடனிருக்கட்டும். இந்தத் தாழ்த்தப்பட்டவர்கள் கூட போக்கிரிப் புரோகிதர்களால் எங்கள் மீது ஆபாசமாக எழுதிவைக்கப்பெற்ற புராணங்களையும், கதைகளையும் பாட்டுக்களையும் பாடிஎங்களை அவமானப்படுத்து கிறார்கள். கடவுள் ஐம்புலன்களுக்கும் எட்டாதவர், தலைக்கீழாக நட்டுக்கொண்டு தவம் செய்தாலும் காணக்கூடா தவரென்று சித்தர்களாலும், ஞானிகளாலும் சொல்லியிருக்க, நான்வீடுவாசல் பெண்சாதிபிள்ளையுடன் (இவர்கள் பார்த்ததைப்போல் புளுகும்) கைலாயமென்ற ஒருஇடத்தில் வசிக்கிறதாகவும்; எனக்கு ஒரு சோரநாயகி கூட உண்டென்றும், நான் தாருகாவனத்து ரிஷி பத்தினிகளைக் கற்பை அழித்தகாகவும், அதனால் என் ஆண்குறி அறுந்து போகும்படி சாபம்பெற்றதாகவும், நான் என்மனையாளுடன் 100 தேவவருடம் இடைவிடாமல் புணர்ச்சி செய்ததாகவும், பிர்மா என்மனைவியின் மீது காதல் கொண்டதாகவும் இன்னும் அளவற்ற ஆபாசங்களை யெழுதி விட்டதோடில்லாமல் பாடல்களாகவும்பாடி அல்லும்பகலும் எங்களை அவமானப்படுத்துகிறார்கள். இந்தப்பாடல்களை கோவில்களிலும் பஜனைகளிலும்பாடினால் நாங்கள் மோக்ஷம் கொடுப்போமென்றும் நினைத்துக்கொண்டிருக்கிறார்கள். இவர்களின் முட்டாள்புத்திக்கும், ஏமாற்று தலுக்கும் நான்விசனப்படுகிறேன். இந்தவிதமான அவமரியாதை யிலிருந்து நீங்கிசுயமரியாதை அடைவதற்காகத்தான் இந்த சுயமரியாதை மகாநாட்டைக் கூடிய சீக்கிரத்தில் கூட்டும்படி நமக்குநேரிட்டது. நமக்கு இதுமூன்றாவது மகாநாடாகிறது (உடனே விநாயக்கடவுள் எழுந்து) இதற்கு முந்திய இரண்டு மகாநாடுகள் எங்கே கூடினது (சரஸ்வதி) ரிவோல்ட், குடியரசு என்றபத்திரிகைகளில் நீர் பார்க்கவில்லையா? யானைத்தலையும் தவளை வயிருமாகயிருந்தால் பாவம் உனக்கு எப்படித் தெரியும்! (கூச்சல் அடங்கியதும் பரமசிவன் மறுபடியும் பேசுகிறார்) ஆகையால் சகோதரர்களே! சுயமரியாதைக் காரர்கள் வருஷத்திற்குஒரு மகாநாடு கூட்டினால், நாம் 12 மகாநாடுகள் கூட்டி புரோகிதர்களைக்கண்டிப்பதோடு, நமக்கு யாதொரு தொந்தரவும் செய்யாத சுயமரியாதைக்காரர்கள் மேற்கொள்ளும் ஒவ்வொருகாரியங்களிலும் உதவிசெய்து அவர்களுக்குத்தான் மோட்சமும் கொடுக்க வேண்டு மென்று என்னுடைய பிரசங்கத்தை இத்துடன் முடித்துக் கொள்ளுகிறேன்.

பிறகு தலைவர்முடிவுரை கூறினார் மிஸ்டர் மகமத் அவர்களால் வந்தனவுபசாரங் கூறப்பட்டு பகல் பனிரண்டு பணிக்கு கூட்டம்கலைந்தது.

அன்று பிற்பகலில் நிறைவேறிய மகாநாட்டுத் தீர்மானங்கள்:—

குருட்டு பழக்க வழக்கங்கள், மூடநம்பிக்கைகள் அதனால் உண்டாகும் வீண்பொருள் நஷ்டங்கள், வானத்தைக்காட்டிப்பயமுறுத்தி வயிர்வளர்க்கும் புரோகிதர்கள். ஆணடிமை, பெண்ணடிமை கர்மம், விதி, சோம்பேரி ஞானம் இன்னும் அநேக மூடவிஷயங்களைநீக்கி ஜனங்களை சீர்திருத்தம்செய்த ரஷியா, துருக்கி, ஸ்பெயின் சைனா, ஜப்பான், இன்னும் அறை குறையான சீர்திருத்தத்திலிருக்கும் இராஜாங்கங்களுக்கு இந்த மகாநாடு நன்றி செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறது.

(இயேசுநாதர்)

நெற்றி வேர்வை நிலத்தில் விழபாடுப்பட்டு சம்பாதித்த ஏழை ஜனங்களின் பொருளைக்கொண்டு கட்டிய கோவில் களில் கல்லு, கட்டை, பொம்மைவைத்து ஸ்சுவாமிகளென்றுசொல்லி பணம்பரித்து தேரு, திருவிழாக்கள் செய்வதையும், ஜப்பான், சைனா கற்பூரங்களையும், பாணவெடிகளையும் லட்சக்கணக்கான ரூபாய்க்குவாங்கி வீணில் கொளுத்தி புகையாக்கு வதையும், மீதிபணத்தைஒரு புரோகிதக் கூட்டத்தாரே தின்று கொழுத்துத்திரிவதையும், பெண் சாமிகளின் மர்மபாகங்களின் மீதெல்லாம் புரோகிதர்கைபோட்டு ஸ்நானம் செய்விப்பதையும் இம்மகாநாடு பலயாகக்கண்டிக்கிறது.

(பார்வதி)

துருக்கித் தேசத்தாரைப்போல் குருட்டுப் பிடிவாதங்களைவிட்டு கல்வியிலும், பகுத்தறிவிலும், விசாரணையறிவிலும், நாகரீகத்திலும் முற்போக்கடையும்படி இதற நாட்டாரையும் இம்மகாநாடு மிகத்தாழ்மையாய் கேட்டுக்கொள்ளுகிறது.

(முகமத்)

தேங்காய், பழம், அவுல், கடலை வைத்து படைத்து பூசைபோட்டு எல்லாக்கல்வியும எளிதில் அடையலாமென்ற சுயநம்பிக்கையற்ற முட்டாள் புத்தியைவிட்டு விட்டு, மேல் நாட்டாரை போல் சுயமுயற்சியால் கல்வியும், அறிவும் பற்பல யந்திரங்களையும் நூதனக்கருவிகளையும், கோளங்களைகண்டு பிடிக்கும் ஆற்றலும் உடையவர்களாக இருக்கும்படி இந்தியர்களை இம்மகாநாடு கேட்டுக் கொள்ளுகிறது.

(சரஸ்வதி)

சங்ககிரி.

22-6-32 தேதி புதன்கிழமைமாலை 3-மணிக்கு சங்ககிரி தாலூக்கா போர்டு உபதலைவர் திருவாளர் கே. ஏ. நாச்சியப்பகவுண்டர் அவர்க்ள் தலைமையில் நடைபெற்ற சங்ககிரி யூனியன்போர்டு தலைவர் தேர்தலில் திரு, இ. முத்துசாமிக்கோனார் அவர்களை ஷையூனியன் தலைவராகவும், ஜனாப், டி. கே; முஸபர்கான்சாயபு பகதூர் அவர்களை உபதலைவராகவும் ஏகமனதாகத்தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

(ஒருநிருபர்)

சுயமரியாதைத் திருமணம்.

கோலார் தங்கவயல் உரிகம் ஏ' பிளாக்லேன் 369 வது எண்ணுள்ள கிரகத்தில் 24-6-32 வெள்ளிக்கிழமை காலை 6-மணிக்கு திரு. எஸ். முனிசாமிக்கும், திருமதி. முனியம்மாளுக்கும், சீர்திருத்தத்திருமணம் நடந்தேறியது அத்திருமணத்திற்கு திரு. ஆர். சுப்பிரமணியம் அவர்கள் தலைமைதகித்து ஒரு அரிய செபற்பொழி வாற்றிதிருமணத்தை நடத்தி வைத்தாரெனஒரு நிருபர் எழுதுகிறார்.

பார்ப்பனீயம் ஒழிந்த 16-ம் நாள் இறுதிச்சடங்கு

எட்டையா புரத்தைச் சேர்ந்த குளத்துக்குள் வாய்ப்பட்டி திருவாளர், ஆண்டி அவர்களின் துணைவி திருமதி லட்சுமியம்மாளின் 16-ம் நாள் 19—6—32 சடங்கை பழய மூடப்பழக்க வழக்கங்களை ஒழித்து சுயமரியாதை முறைப்படி எட்டயாபுரம் திருவாளர் என். ஏ. ஸ்ரீனிவாசகம் பண்டிதர் நடத்தி வைத்தார். ஏராளமான பிரதிநிதிகள் வந்திருந்தார்கள் சாதி பேதம் அற்ற சமபந்தி போஜனம் நடந்தது என ஒரு நிருபர் எழுதுகிறார்.

உடனே தேவை.

நமது பத்திரிகை விற்பனை செய்வதற்குக் கீழ்க்கண்ட நகரங்களில் டிபாசிட் கட்டக்கூடிய ஏஜண்டுகள் உடனேதேவை.

சேலம்.
கோயம்புத்தூர்.
பொள்ளாச்சி.
ஜோலார்பேட்டை.
தஞ்சாவூர்.
வாணியம்பாடி.
விபரங்களுக்கு எழுதவும்.

மேனேஜர்,
குடி அரசு.

(5ம் பக்கத்தொடர்ச்சி)

தேவாரப்பாடசாலே, ஜெனரல் போஸ்டாபீசாவும், குமாரசாமி பண்டாரத்தின் தர்மசத்திரம், வாலிபர்களின் தேகப்பயிற்சிக் கூடமாகவும், சுந்தரேஸ்வர பட்டரின் வேதபாடசாலே, நெல்லேயம்பதி வாலிபர் ஐக்கிய சங்கமாகவும், சைவ சித்தாந்த சபைக்கட்டிடம் முனிசிபல் ஊழியர் சங்கமாகவும், இன்னுமிப்படியே மற்ற பழைய சோம்பேரி மடங்களெல்லாம் பற்பல சங்கங்களாகவும் தொழிற்சாலேகளாகவும் மாறியிருத்தலேக்கண்டேன்!

மற்றபடி ஜாதிவாரி, வகுப்புவாரிச் சங்கங்களேயே காணேம். மொத்தத்தில் ஜாதிப்பாகுபடுகளே காப்பி ஹோட்டல் முதல் சர்க்கார் காரியாலயம் வரையுள்ள எந்த இடத்திலும் நான் பார்க்கவில்லே. ஏழை-பணக்காரன், முதலாளி-தொழிலாளி, மேல் குலம்-கீழ் குலம் முதலிய பாகுபாடுகளேயும் காணேம். கைத்தொழிற் சாலேகள் கணக்கின்றிக் காணப்பட்டன!

இந்தச்சமயத்தில் எவனே ஒரு யாசகன் "சங்கர சங்கர சம்போ" என த்தாயுமானவர் ஆனந்தக் களிப்பைத் தாளம் போட்டுப்பாடிக்கொண்டு யாசகம் கேட்க வந்தான்! ஆனல் அதற்கடுத்த ஐந்து நிமிடத்திலெல்லாம் அவன், அங்கு பாராக்குச்செல்லப்பட்டதைக்கண்டேன்! கடைசியாகச் சிறைச்சாலேயையும் பார்வையிட்டேன். அங்கு காணப்பட்ட கைதிகளிற் பெரும்பாலோர் செய்த குற்றங்களென்னவெனில், திருட்டுத்தனமாக ஐயாயிரத்துக்கு மேற்பட்டசொத்தை மறைத்து வைத்துக்கொண்டிருந்ததும், சோம்பேறித்தனமாகவீட்டுத்திண்ணேகளிலமர்ந்து தேவாரம் பாடிப் பொழுதுபோக்கியதும், மணலில் பிடுங்கியெடுத்த வள்ளிக்கிழங்கு போலிருந்துகொண்டு யாசகம்செய்ததும், புராணப்பிரசங்கம் செய்ததும், வள்ளிகல்யாணம், வத்ஸலாகல்யாணம், அர்ச்சுனன் தபசு, முதலிய கதாக்காலட்சேபங்கள் செய்ததும், தெர்ப்பைப்புல்லேக் காட்டித்திதிவாங்கியதும், திதிகொடுத்ததும், ஜோதிடம் மாந்திரீகம் முதலியன செய்ததும், ஆகியவைகளேயாகும்.

அரசாங்கமோ! குடியாட்சியாகவிருந்தது! அதன் அறிக்கையிலோ, மரணவிகிதம் வெகுவாகக்குறைந்து காணப்பட்டது. தொத்து நோய்கள் அடியோடு நின்றுவிட்டன. இவற்றின் பலஊர்களிலும் நடக்கும் தேர் திருவிழா, தெப்போத்ஸவம், திருக்கல்யாணம், வைசாகம், தபசு மாமாங்கம் முதலிய திருநாட்களெல்லாம் சட்டமூலம் அடியோடு நிறுத்தப்பட்டமையுமேஎன்று அந்த அறிக்கையால் கண்டிருந்தது. சிறைச்சாலேயிலிருந்து விடுதலேயடைந்த கைதிகளின் ஜீவனேபாயத்திற்காக உதவிசெய்வதற்குச்சங்கங்கள் எற்பட்டிருந்தன. இன்னும் மோட்டார், ரயில், ஸைக்கிள், ஆகாயவிமானம், கப்பல்கள், முதலிய வாகனங்களெல்லாம் இந்நாட்டிலேயே செய்யபட்டன. ஒவ்வொரு மனிதனுடையவும் ஒரு நாள் சராசரி வருமானம் (ரூ. 3-0-0) மூன்று ரூபாயாக இருந்தது. (இப்போது 0-1-9.) லஞ்சம்கொடுத்தல் வாங்கல், கடன் கொடுத்து வாங்கல், ஏமாறுதல் ஏமாற்றுதல், கொலேகள் தற்கொலேகள், களவுகள் கொள்ளேகள், முதலிய ஒன்றையும் காணமுடியவில்லே! விபசாரம் சட்ட மூலம் தடைசெய்யப்பட்டிருந்தது.

புராணச்சுவடிகள், இதிகாசங்கள், ஆகமங்கள், உபநிஷத்துகள், வேதங்கள் முதலியவை எல்லாம் தீக்குளித்துபாடப்புத்தகங்களில், முதல்பக்கத்திலிருந்து கடைசிப்பக்கம்வரையில் "கடவுள்" என்ற வார்த்தையே காணப்படவில்லே! "நாயும் நரியும் கொக்கும் பேசிக்கொண்டன; பூனேயும் எலியும் சேர்ந்து ஆந்தைப்பிள்ளேயைப்பெற்றன;! இராவணன் பத்து தலேயோடும்இருபதுகைகளோடுமிருந்தான்; குண்டோதரன் வைகையாற்றைக் குடித்தான்" என்பது போன்றபுளுகுகளோ இல்லே! கட்டாய இலவசக்கல்வி சட்ட மாக்கப்பட்டிருந்தது."

இந்தமாறுபாடுகளே யெல்லாம்நேரில் என்கண்களால் கண்ட எனக்குப் பாரதிபாடிய "விடுதலே" என்றபாட்டு நினேவிற்கு வரவே, "சரிநிகர்சமானமாக வாழ்வோ மிந்த நாட்டிலே! என்று என்னேயறியாது என் வாய் உறக்கப்பாடிற்று! அச்சமயம் "என்னேயா, டேசன்வந்திருச்சு, எந்திரிண்ணுக்கா, என்னமோ பாட்டுபாடுறெ" என்று கூறியாரோ என் புஜத்தின்மேல் தட்டுவதையறிந்த நான் திடுக்கிட்டுக் கண்ணேவிழித்தபோது நான் இறங்க வேண்டியஇடமாகிய "மதுரை" ஸ்டேஷனுக்கு ரெயில்வந்து விட்டதைக் கண்டு எழுந்து உட்கார்ந்தேன்! இரவு நீண்டநேரம் வரையில் கண்விழித்துக் கொண்டிருந்து விட்டு சற்றுமுன்னர் தான் கண்ணயர்ந்தேன். மேலேகூறிய கனவு ஐந்து நிமிடங்களே நிகழ்ந்ததெனினும், "சமதர்ம இராஜ்யத்தின் சாயலே" இவ்வளவு தூரம்கண்ட நான் ஆச்சரியம் அதிகரிக்க அப்படியே உட்கார்ந்து விட்டேன் ஐந்துநிமிடக்கனவின் வியப்படங்கப்பத்து நிமிடம் சென்றது! (கதையையல்ல, கருத்தைகவ்னிக்க.)

தமிழ் நாட்டுப் பலசாலிகள்
2-வது மகாநாடு
செட்டி நாடு.

இம்மகாநாடு வரும் ஆகஸ்டுமீ 13-14 சனி, ஞாயிற்றுக்கிழமைகளில் செட்டிநாட்டில் நடைபெறும்.

(ஒரு நிருபர்)

வெய்யற்காலத்தில் வெப்பத்தைப்போக்குவது;
மூளைச்சோர்வை நீக்குவது; மனமகிழ்ச்சியையும், ஊக்கத்தையும்,
முக அழகையும், வசீகர சக்தியையும் தருவது
எது?

நமது
பஞ்சாமிர்தங்கள்.

பண்டிட் ஆனந்தரின் தமிழ் வைத்தியசாலையில் தயாராகும்
வேனிற்கால வெளிப்பிரயோக அமிர்தங்கள் ஐந்து!

1. ஆனந்தரின் மகா சந்தனுதித்தைலம் 1-0-0
2. லேம்ஸ் அண்ட் கிளசரயின் 0-10-0
3. ஆனந்தா ஸ்னே ... 0-10-0
4. கேசாமிர்தம் ... 0-8-0
5. ஆனந்தா ஹேர் கிரீம் (*Masters the hair*) 0-10-0

இவைகளை ஒரு முறை உபயோகித்துப்பார்த்தால் உண்மை விளங்கும்.

மானேஜர்:— தமிழ் வைத்தியசாலே,
221, தங்கசாலே வீதி, சென்னே.

[4ம் பக்கத்தொடர்ச்சி]

வேண்டுமென்றும் கேட்டுக் கொள்ளுகிறேன்.

இம்மாகாணத்தில் சிறப்பும் செல்வாக்கும் பெற்ற உயர்ந்த ஜாதியார்களென சொல்லிக் கொள்ளும் தடிப் பேறியவர்கள் முக்கால் பாகத்தினர்கள் நமது ஜில்லா வாசிகள் என்பதையும் இம்மாகாணத்திலுள்ள 45க்கு மேற்பட்ட ஜில்லா தேவஸ்தான போர்டுகளில் அதிக பூஸ்திதியும் வருமானமும் உள்ளது நமது ஜில்லா தேவஸ்தான கமிட்டி தான் என்பதையும், "உலக குரு" என்ற ஐவர்களில் ஒரு சங்கராச்சாரியாரும், சைவ மடங்களில் லட்சக்கணக்கான வருமானமுடைய தான மடங்களில் மூன்றும் நமது ஜில்லாவில் இருக்கிறது என்பதையும் சிந்திப்பின் இந்த ஜில்லாவில் மதம், கடவுள், என்பவைகளின் பேரால் பல லட்சக் கணக்கான ரூபாய்களைக் கொண்டு சுயநலமே உருவாய் கொண்டு நம்மை அடிமைகளாக உற்பத்தி செய்து கொண்டு 18, 19 தேதிகளில் சைவ மடமான திருவாடுதுறை மடத்துப் பணத்தில்ஸ்மார்த்த பிராமணோத்தமர்' என்பவர்களும் கும்பகோணத்தில் 8 ஆடுகளை வெட்டி யாகத்தின் பேரால் சாப்பிட்டவர்களும் பிராமண மகாநாடு கூடுகிறார்கள் என்பதையும் ஞாபகப்படுத்தி அதனிடையில் நம்முடைய எளிய நிலைமையையும் ஞாபகப்படுத்துகிறேன். இத்தகைய பிராமணீயம் தலை சிறந்து வாழும் நமது ஜில்லாவில் மதத்தின் பெயரால் சமூகத்தின் பெயரால், மூட பழக்க வழக்கங்களின் பேரால் நடை பெறும் இன்னல்களை எடுத்துக்கொள்வதென்பது முடியாததாகும். இவையனைத்தும் நமக்கு எதிரியாக இருப்பதிலிருந்து நாம் தப்ப வேண்டுமென்பதும் மறந்து விட முடியாது.

விலைமதிக்க முடியாத உங்களின் அரிய காலத்தை நான் வீணாக்க விரும்பவில்லை. சென்ற வருடத்தில் நமது ஜில்லாவில் தான் மாகாணப் பார்ப்பன பிரசாரமான உப்பு காய்ச்சும் திட்டத்திற்கு தலைமை ஸ்தலமாக தெரிந்தெடுக்கப்பட்டது. ஆண்மையுடன் எதிர்த்து உப்புக் காய்ச்சும் புரட்டையும் சத்தியாக்கிரக பித்தலாட்டங்களையும் நாம் பொது ஜனங்களுக்கு எடுத்துக் காட்டி சுயராஜிய மாய்கையில் ஏமாறாது செய்தோம். தோழர் காந்தியிடமோ நமக்குப் பகையில்லை. தோழர் காந்தி அவர்களுக்கு இந்நாட்டில் மகாத்மா என்ற மதத்தின் பெயரால் பெற்ற செல்வாக்கை அதிகப்படுத்திக் கொண்டு அரசியலில் இந்த நாட்டின் 8 கோடி முஸ்லீம்களையும் கோடி ஆதிதிராவிடர்களையும் ஏமாற்றும் கூட்டத்திற்கு ஆதரவு காட்டுகிறார். ஆதலால் அது தப்பு என்கிறோம். இந்திய நாட்டிற்கு வகுக்கப்படும் சுயராஜிய திட்டத்தைக் கண்டு முஸ்லீம்களும் ஆதிதிராவிடர்களுமான 16 கோடி மக்கள் அவநம்பிக்கை கொள்கிறார்கள் என்றால் அந்த சுயராஜியம் யாருக்கு என்று கேட்கிறோம். சுயராஜிய திட்டத்தில் போதுமான பாது காப்பு வைத்திருக்கிறோம் என்று காந்தி கூட்டத்தார் சொல்லுகிறார்கள். மதப்பாது காப்பு இருக்கிறது என்கிறார்கள். நிலப் பாதுகாப்பு இருக்கிறது என்கிறார்கள். ஆம் இருக்கிறது தான். மதமே இல்லாது நிலமே இல்லாது இந்நாட்டில் 35 கோடியில் 29 கோடி ஜனங்களிருக்கிறார்கள் மத பாதுகாப்புஎன்றால் 28 கோடி மக்களுக்கும் மதமும், நிலமும் கிடைத்த பின்பு தானே பாதுகாப்பின் பலன் கிடைக்க முடியும். ஆதலால் பாது காப்பு 35 கோடி மக்களின் பேரால் 2,3 கோடி மக்களின் சுயநலத்துக்கு ஏற்பட்டது என்கிறோம், நிலமே இல்லாதவனுக்கு நில பாதுகாப்பும் சோறே இல்லாதவனுக்கு சோறு பாதுகாப்பும் வேலையே கிடைக்காதவனுக்கு தொழில் பாதுகாப்பும் என்று பிரசாரம் செய்வதில் பலன் என்ன? என்று கேட்கிறோம். தேசாபிமானிகள் இந்நாட்டுக்குப் பொதுத் தொகுதியும் தனி சொத்துரிமை வேண்டும் என்கிறார்கள். நாம் தனித் தொகுதியும் பொது சொத்துரிமையும் பாது காப்பும் வேண்டுமென்கிறோம். காந்தி கூட்டத்தார்கள் மீண்டும் பாமர மக்களை வெள்ளைக்காரர் மீது துவேஷமூட்டிவிட்டதானது சர்க்காரை திகைக்கச் செய்தது. சர்க்காரிடம் தங்கள் வீரத்தைக் காட்டி பயமுறுத்தி தாங்கள் கேட்கும் உரிமைகளை வழங்கினால் பாமர மக்களை தாங்கள் அடக்கி விடுவதாக வர்த்தகம் செய்கிறார்கள். இவ்வர்த்தக பித்தலாட்டத்தை சுயமரியாதைக்காரர்களாகிய நாம் பாமர மக்களுக்கும் சர்க்காருக்கும் எடுத்துக்காட்டி இருவரும் ஏமாறக் கூடாது என்று எச்சரிக்கின்றோம்.

கதர் இந்திய நாட்டின் குடிசைக் கைத் தொழிலாகவும், ஹிந்தி இந்திய நாட்டின் பொது பாஷையாகவும் இருக்க வேண்டுமென்று காந்தியின் சம்பந்தியான சேலம் திருவாளர் ராஜகோபாலாச்சாரியார் கூட்டத்தார் கூறுகிறார்கள். கதர் இந்நாட்டு குடிசை தொழிலாக இருக்க முடியாது என்று 10 வருட அனுபவத்திற்குப் பின்பு தான் நாம் கூறுகிறோம். சுதேசியம் என்பது இந்தியா மில்-நூல், மில் துணி இவைகளாகத் தான் இருக்க முடியும் என்கிறோம். அகில இந்திய பொது பாஷையாகவோ, ஆங்கிலம் தான் இருக்க முடியுமே தவிர ஹிந்தி பொது பாஷையாக இருக்க முடியாது என்கிறோம்.

தோழர்களே மேல் நாடு சென்று நமது தலைவர்கள் இங்கு வருவதற்குள் நாம் செய்ய வேண்டிய வேலைகள் அளவு கடந்ததாகும் இந்த ஜில்லாவில் இன்னின்னவைகளை செய்வது என்று தீர்மானியுங்கள், அதை செய்வோம். அம்முறையில் நாம் செல்லும் போது வரும் கூர்மையானது போன்ற எதிரிகள் வாள்களுக்கு நாம் அஞ்சாது எதிர்த்து நிற்போம். சர்க்கார் உத்தியோகஸ்தர்களில் சில உயர்ந்த ஜாதியார் எனக் கூறிக் கொள்வோர் புகுந்து கொண்டு நமது இயக்கத்தை சர்க்கார் உதவி பெற்று எதிர்க்க ஆசைப் படுவதாகக் கேள்விப் படுகிறோம். அவ்விதம் அவர்கள் செய்வது அவர்களின் அழிவுக்கு அவர்களே வழி தேடிக் கொள்வதாகுமென்று எச்சரிக்கின்றோம். நமது தலைவர்கள் நம்மை விட்டுப்பிரிந்த இந்த 4-5 மாதங்களுக்குள் 5வதாக கூடுகின்ற இந்த ஜில்லா மகாநாட்டிற்கு எனது சகோதரியான தோழர் எஸ். குஞ்சிதம் பி. ஏ. எல். டி. அவர்களை தலைமை வகிக்குமாறு கேட்டுக் கொள்வதுடன் வரவேற்புக் கழகத்தின் சார்பாக மீண்டும் தங்கள் அனைவரையும் வரவேற்று எனது சொற்பொழிவை இத்துடன் பூர்த்தி செய்து கொள்ளுகின்றேன்.

விழுப்புரம் மாதர்சங்கம்.

திருமதி. திரிபுர சுந்தரியம்மாள் சொற்பொழிவு.

கடந்த சனிக்கிழமை மாலையில் விழுப்புரம் மாதர்சங்கத்தின் கூட்டமொன்று திருமதி. ராஜம்மாளின் தலைமையில் கூடிற்று. அது சமயம் திருமதி. திரிபுர சுந்திரியம்மாள் அவர்கள் சிசுசம்ரட்சணையும், தாய்மார்கள் அறிய வேண்டிய விஷயமும் என்பது பற்றிச் சொற்பொழிவாற்றினார்கள்.' அதுசமயம் அவர் குறிப்பிட்டதாவது:—

விலைபொருள்கள் குறைந்தும், பண நெருக்கடியதிகரித்தும், வேலையில்லாதிண்டாட்டமதிகரித்தும்உலகமெங்கும் ஜனங்களுக்கு மகத்தான கஷ்டங்கள் ஏற்பட்டு வருகிற இது சமயம் ஜனத்தொகை அதிகரிக்காவண்ணம் பார்த்துக்கொள்ள வேண்டியதும் குடும்பம் பெரிதாகாமல் பார்த்துக்கொள்ள வேண்டிதும் நம் கடமையாகும். இதற்கொத்த முறைகளை மேல் நாட்டார் கையாண்டு வருகிறார்கள். நாமும் அதைப்பின் பற்ற வேண்டிய காலம் இப்போது வந்திருக்கிறது.

ஃ ஃ

அறியாமையாலும், அஜாக்கிரதையினாலும் நமது தேசத்தில் சிசுமரணம் அதிகரித்து வருவது விசனிக்கத்தக்கதாகும். பிறக்கின்ற குழந்தைகளில் 100-க்கு50. நான்கு வயதிலும், 100-க்கு 70 ஒரு வயதிலும் இறந்துவிடுகின்றன. இதற்குக் காரணம் குழந்தைகளைப் பெற்றெடுக்கும் தாய்மார்கள் குழந்தைகளைப் போஷிப்பதிலோ, அல்லது உணவூட்டுவதிலோ தெரியாத்தனமாய் நடந்து கொள்கிறார்கள். கர்ப்பவதியாயிருக்கும் போது அநுஷ்டிக்க வேண்டிய ஆரோக்கிய விதிகளை சற்றும் கவனிப்பதில்லை. கர்ப்ப காலத்திலும், பிரசவ காலத்திலும் விவேகத்துடன் நடந்து குழந்தை பிறந்தபின் தகுந்த ஆகாரங்களை கொடுத்து ஆரோக்கிய விதிப்படி அவைகளைப் போஷித்து வந்தால் சிசுமரணம் நம் நாட்டில் இன்று இருப்பதைக்காட்டிலும் அதிகம் குறைக்க முடியும்."

என்று பேசினார் பின்னர் காரியதரிசியால் வந்தனோபசாரம் கூறப்பட்டு கூட்டம் கலைந்தது.

ஹிந்து முஸ்லீம் விருந்து.

19—6—32-ந் தேதி இரவு 8-மணிக்கு ஸ்ரீமான் கே. எஸ். சுந்தரம்பிள்ளை (புரோப்ரைட்டர். கே. எஸ். முத்தையாகம்பெனி) தமது கிரகத்தில் ஹாஜிகளுக்காக ஒரு விருந்து நடத்திவைத்தார். ஹிந்துக்களும், முஸ்லீம்களும் ஒன்றாய் உட்கார்ந்து உணவருந்திய்து காசியில் இதுவே முதல்தடவையாகும். பட்டுக்களாலும், தோரணங்களாலும், அலங்கரிக்கப்பட்ட ஓர் அழகிய ஹாலில் பெரிய மேஜை போடப்பட்டு இந்திய சைவஉணவு ஆங்கிலமுறையில் பரிமாறப்பட்டது ஹாஜீ ஜானுல்லா சாகேப்களும் ஹாஜியர்களும் கலந்து உட்கார்ந்தார்கள். தென்னிந்திய வாசிகளில் கலந்து கொண்டவர்களில் முக்கியஸ்தர்கள் ஸ்ரீமான் பா. ஆதி மூர்த்தி அய்யர், புரொப்ரைட்டர், சில்க் பீதாம்பரகம்பெனி, தலைவர் தென்னிந்தியாசபை, இன்ஜினீயர் அழகப்பன், ஸ்ரீ ஜீ. சுப்பிரமணி அய்யர் முதலியோர்கள். வடதேசத்து ஹிந்துக்களில் இருபிராமணர்கள், கலந்து கொண்டது குறிப்பிடத்தக்கது. வங்காளியர்களும் வந்திருந்தார்கள் 10-மணிக்கு உணவு முடிந்ததும் ஸ்ரீமான் பா. ஆதிமூர்த்தி எழுந்து ஹாஜியர்களை வரவேற்று ஹிந்தியில், ஹிந்து முஸ்லீம் ஒற்றுமையைப்பற்றியும், அதன் அவசியத்தையும், வற்புறுத்திப் பேசினார்.

பின்னர் திரு சுந்திரமவர்கள் சிறிய பிரசங்கம் செய்ய தலைவர்முடிவுரையுடன் கூட்டம் கலைந்தது எனகாசியிலிருந்தொரு நிருபர் எழுதுகிறார்.

சுயராஜியம் யாருக்கு?

தோழர் ம.சிங்காரவேலுபி.ஏ., பி. எல்., அவர்களால் எழுதியது. இதில் ஜாதிமதக்கொடுமை, சமூக இன்னல்கள், அரசியல், பொருளாதாரக்கொடுமைகள், காங்கிரசின் போலி வேஷம், தீண்டாமைஒழிப்பதின் அவசியம் முதலியனபற்றி இனிய, எளிய நடையில் வெகு தெளிவாக விளக்கப்பட்டுள்ளன.

பிரதி 1க்கு விலை 0—1—0.

கிடைக்குமிடம்:—

குடி அரசு புத்தகாலயம், ஈரோடு.

(8-ம் பக்கத்தொடர்ச்சி)

இன்னுரென்று அறிந்துகொள்ள இயலாது. இவ்வாறு மக்களுள் இவர் இன்ன சாதியார் அல்லாரென்று இனம் பிரித்துக்காட்டுதல் இயற்கையிலமையாது. இனி முக்கோலும் புற்கட்டும்யெடுத்துப் பூநூலும் பூண்டியான், பார்ப்பனனென்று தன்னைப் பெருமை பாராட்டுதலால், ஒருவன் எதும் பயன் பெருன். நுண்ணுணர்வால் வரும் மெய்யன்பே ஒருவர்க்கு மெய்ப்பயன் தருமென்பது போதா, திருநாவுக்கரசர்

'கோலும் புல்லும்
ஒருகையிற் கூரச்சமும்
தோலும்பூண்டு
துயரமுற்று என்பயன்'.

நன்கருளிச் செய்தமையும் காண்க.

சாதிவேற்றுமை அறவே ஒழிதல் வேண்டுமென்னும் பேச்சும் எழுத்தும் யாண்டும் பெருக்கெடுத்தோடுகின்றது.

பார்ப்பானை ஐயரென்ற
காலமும் போச்சே—வெள்ளைப்
பரங்கியைத்துரையென்ற
காலமும் போச்சே—பிச்சை
ஏற்பாரைப் பணிகின்ற
காலமும் போச்சே—நம்மை
ஏய்ப்போருக்கேவல் செய்யும்
காலமும் போச்சே.'

என்று பாரதியாரும் வாய்விட்டலறியிருக்கிருர். ஆனால் செயலிலோ சாதிப்பூசல் வளர்ந்துகொண்டே வருகிறது. நாட்டின் விடுதலையோ சாதிவேற்றுமை யழிவிலிருப்பதை உலகம் நன்கறிந்திருக்கிறது. பிராமணரல்லாதாராகிய நாம் மனங்கொண்டால் சாதி வேற்றுமையைத் தகர்க்கலாம். எக்காரணத்தைப்பற்றியும் பிறப்பில் உயர்வு தாழ்வு கருதாது பிறப்பால் உயர்வுதாழ்வெய்தி எவரையும் குருவாகக்கொள்ளாமல் அக்கருத்துடன் எவர்களுக்கும் வந்தனை வழிபாடுகள் செய்யாமல், தீண்டாமையை அறவே ஒழித்து, கலப்பு மணத்தில் கருத்திருத்தி அதை செயலில் ஆற்றி கலப்பு மணம் நாட்டில் பெருகப் பெருகச் சாதி வேற்றுமைதானே மங்கி மடிந்து போகும்.

சாதிவேற்றுமை பழைமையாக உள்ளதென்று கொண்டாலும் அதனைத்தழுவி யொழுகுதல் அறிவில்லார் கூற்ருகும். பழையனவெல்லாம் நல்லனவாதலுமில்லை. புதியனவெல்லாம் தீதனவாதலுமில்லை. மக்களுடைய நாகரிக வளர்ச்சிக்கும் அறிவின் மேன்மைக்கும் ஏற்பக் காலந்தோறும் பழைய ஏற்பாடுகள் அழிந்துபோதலும் புதிய ஏற்பாடுகள் புகுதலும் இயற்கை. இதுபற்றியே 'பழையன கழிதலும் புதியன புகுதலும் வழுவல காலவகையினுலே' என்ற ஆன்ருேர் மொழியும் எழுந்தது. முடிவில் உண்மையாய் விளங்க வேண்டுவது யாதெனில்,

"சாதி இரண்டொழிய வேறில்லை [யென்றே
தமிழ்மக்கள் சொல்லிய சொல்லை [அமிர்தமென்போம்
நீதிநெறியினின்று பிறர்க்குதவும்
நேர்மை மேலவர் கீழவர் மற்ருேர்

இத்தமிழ் நாட்டில் பிழைக்கவந்த பார்ப்பனர்கள் சொல்லிய பொய்க்கட்டுரைகளிற் திராவிட மக்கள் சிக்குண்டு தமக்குள்ள செல்வத்தையெல்லாம் பார்ப்பனர்கட்கும் அவர்கள் காட்டிய உலகப்பொய் மாய இன்பங்கட்கும் அளவின்றி செலவிட்டு பலவகையிலும் வறுமைக்கு ஆளாகிவிட்டனர். நூதன மந்திரங்களாலும், தத்துவங்களாலும் பரிபாலிக்கப்படுவதாக அநேக சடங்குமுறைகளை வழக்கத்திற்குக் கொணர்ந்து, பாமர மக்களை ஏமாற்றி அவர்களை மிகவும் வெறுக்கக்கூடிய அநாகரீகமான பழக்க வழக்கங்களில் மாய்த்து நாட்டிற்குப் பெறுத்த கேட்டை இப்பார்ப்பனர்கள் தங்கள் மதத்தால் விளைவித்திருக்கின்ருர்கள். தங்கள் வயிற்று வளர்ப்பிற்கென்று பொருளற்ற குருட்டு முறைகளில் சடங்குகள் பல வகுத்திருக்கின்றனர். அச்சடங்குகள் இருள்சூழ்ந்து நம்மை அலைக்கின்றது. மனிதவாழ்க்கையை மாய்கையாக மாற்றி மனிதர்க்கு யாதொரு உணர்ச்சியும் கொடுத்திலர். இறப்பிலும் பிறப்பிலும் முக்திபெற பார்ப்பனர்க்கு அர்ச்சனை செய்தல் அவசியமென்ற கட்டுரையைப்புகன்றனர். அக்கட்டுரையை அனுபவ பழக்கத்தில் கொணரபல விதிகளைப்பாமர மக்களுக்குப் புகட்டினர். பிறப்பில் குறிக்கொண்டு நல்வினை தீவினைகளுக்குப் பார்ப்பனரை அழைப்பதும் குறிப்பிட்ட ஆரியமொழியாகிய சமஸ்கிருதத்திலே சொல்வதும் நல்வினை தீவினைகளாற்ற குறிப்பிட்ட ஒருவகுப்பாரான பார்ப்பனருக்கு பண்டங்கள் வழங்குதலும் தான் நந்தமிழ் மக்கள் ஆயுள் கடனுகி விட்டது. நமது திராவிட மக்கள் படும்பாடு பட்டும் பாதிக்கும் செல்வத்தை பார்ப்பனர்களுக்கு அர்ப்பணம் செய்து மீளாத மூடத்தன்மையால் ஆழ்ந்துவிட்டனர். சராசரி வரும்படி ஒருதினத்திற்கு ஒரு வேளை உணவிற்குக்கூட போதாமல் கஷ்டம்படும் ஜன சமூகத்தினிடை அர்த்தமில்லாத அனர்த்தமான சடங்குகளை வழக்கத்தில் கொண்டுவந்து பாமர மக்கள் செல்வமும் மரியாதையும் குன்ற சூழ்ச்சி செய்யும் பார்ப்பன மதாச்சாரத்தின் தன்மையின் கொடுமையை விவரிப்பதென்ருல்சாத்தியமில்லை.(தொடரும்

வெள்ளை வெட்டைக்கு

சந்தனுதி மாத்திரை, பிரமேக நெய்

சாப்பிட்ட 12 மணி நேரத்திற்குள் குணம் தெரியும்.

வெள்ளை வெட்டை வியாதிகள் எவ்வளவு நாள் சென்றதாயிருந்தாலும் சரி, பொருக்க முடியாத நீர்குத்தல், நீர்க்கடுப்பு, பிரமேகம், கல்லடைப்பு, சதை அடைப்பு, தாது நீரில் கலந்து வெளியாகுதல், நீர்விடுவதற்கு முன்னும் பின்னும் இந்திரியம் சொட்டு சொட்டாய் வெளிவருதல், ரெத்தவெட்டை, மஞ்சள் வெட்டை, அஸ்திகாங்கை, எலும்புருக்கி, சொறபன ஸ்கலிதம், அரிதஸ்கலிதம், அஸ்திமேகம், இந்திரிய பையில் ஏற்படும் ரணம், கொதிப்பு முதலிய நீர்த்தாரையிலுண்டாகும் சகல வியாதிகளையும் ஆச்சரியமாய் குணம் செய்யும்.

சந்தனுதி மாத்திரை பிரமேக நெய் இரண்டும் சேர்ந்து விலை ரூ. 5—0—0.

சாலாமிசிரி லேகியம்.

சிறந்த தாதுபுஷ்டி மருந்து.

மிகுந்த பலத்தையும் வீரிய விருத்தியையும் உண்டாக்கும்.

ஒரு சேர் டப்பி விலை ரூ. 2—8—0.

பாக்கிங் தபால் செலவு பிரத்தியேகம், மலாய் நாட்டு வாசிகள் ஆர்டருடன் முன்பணம் அனுப்பவும். விலாசம் தெரிவித்தால் முழு விவரமடங்கிய கேட்லாக் அனுப்பப்படும். கமிஷன் ஏஜண்டுகள் தேவை.

டி. சி. சிங்காரம் அண்டு கோ.,

சித்த ஆயுர்வேத வைத்தியசாலை, தெப்பக்குளம் போஸ்டு, திருச்சினுபள்ளி

Read the
"SUPERSTITION OF KHADI"
A Discussion
By
S. Ramanathan
Pattabhi Sitharamyya
& N. S. Varadachari
in English.
Published by Kudi Arasu Publishing House,
Erode.

Price per copy two annas. Send 0-3-0 annas postage stamps for a single copy.

Apply to:—
Manager "Kudi Arasu" Erode.

சென்னை லோக்கல் போர்டு ஆக்டு.
(1330௵ வரையிலுமுள்ள சீர்திருத்தங்களுடன்கூடியது)
M. S. பார்த்தசாரதி அய்யங்கார், B. A., B. L,
அவர்களால் மொழிபெயர்க்கப்பட்டது.
விலை ரூபா 2—0—0. வி பி செலவு ரூ. 0—5—0.
மானேஜர்,
குடி அரசு புத்தகசாலை, ஈரோடு.

ஆனந்தரின்
இந்திய பற்பசை (டூத்பேஸ்ட்)
பற்களைப்பளிங்கு போலாக்கும். எல்லா ஷாப்புகளிலும் கிடைக்கும்.
தமிழ் வைத்தியசாலை,
221, தங்கசாலை வீதி,
சென்னை.

காந்தியின் உண்மைத் தோற்றம்.

திரு. காந்தி பரோடா சமஸ்தானத்திற்கு விஜயம் செய்தபோது, பொதுமக்கள் அளித்த வறவேற்புக்கு பதிலளிக்குமுகத்தான் தனது சுயராஜிய திட்டத்தைப்பற்றியும், கட்குடி, கதர், மறியல் முதலியன பற்றிதான் கொண்டிருக்கும் அபிப்பிராயத்தைப்பற்றியும் செய்த உபந்யாசத்தின் ஆராய்ச்சியாகும்.

21—6—31ந் தேதி வெளியான குடி அரசு தலையங்கத்தை புத்தகமாக்கி வெளியிட்டிருக்கிறோம். இதைப்படிக்கும் அன்பர்கள் காங்கிரசின்யோக்கியதையையும், காந்தியார் கோரும் ராமராஜிய வண்டவாளமும், தொண்டர்கள் செய்யும் போலி மறியல் வேஷத்தின் வெளிப்பகட்டும் கண்டு தெளியலாம்.

100 புஸ்தகங்கள் விலை ரூ. 1—0—0
தபால் செலவு 0—6—0

கிடைக்குமிடம்:—
மானேஜர்,
குடி அரசு, ஈரோடு.

"செவிடு"

மற்றெல்லாவித காது நோய்களையும் குணப்படுத்துவது "காமத்எண்ணையே" ஒரு பாட்டில் வாங்கி உபயோகித்துப் பாருங்கள். பலனுக்கு உத்திரவாதம்.

1 பாட்டல் எண்ணெய் விலை ரூபாய் 1—4—0.
1 பாட்டில் டிராப்பர் உள்பட விலை ரூபாய் 1—8—0.
3 பாட்டல் வாங்குபவர்களுக்கு தபால் செலவு இனம். இங்கிலீஷில் விண்ணப்பிக்கவும்.

Ballabha & Sons
Pilibhit R. K. Ry., U. P.

உங்கள்
கண்ணையும்
காதையும்
கவனித்துக் கொள்ளுங்கள்

பூவிழல் !!

கண்ணில் பூவிழுந்து பார்வையைத் தடுப்பதை ஆபரேஷன் இல்லாமல் சுகப்படுத்தப்படும். நிலைமை எவ்வாறு இருப்பினும் நான்கு வாரங்களில் நிச்சயமாக குணப்படுத்தி விடுவோம்.

செவிடு !!

பாதி அல்லது முழுவதும் செவிடாயிருந்தால் கூடப் பரவாயில்லை. காதிரைச்சல், தலைவலி இருந்தாலும் அக்கரையில்லை. சுத்தமாக நிவர்த்திக்கப்படும். குணத்திற்கு உத்திரவாதம்.

விபரங்களுக்கு இங்கிலீஷில விண்ணப்பித்துக் கொள்ளவும்.

"Sri" Works
Beadon St. Calcutta.

ANANGARANGA
BATIKA.

Safe and sure remedy against SEXUAL DISABILITY & IMPOTENCY. Restore youthful retaintive & erective capacity & insure PLEASURE FOR ONE HOUR. Even an OLD ONE CAN FULLY ENJOY THE HEAVENLY BLISS derived from sexual inter course. COMPLETE SATISFACTION guaranteed. Money will be refunded in case of failure Price for 40 Pills Rs. 5 only. Sample Phial of 20 Pills Rs 3 only. Please write in English To:

SAILASRAM (K)
Chandanpur (Khulna)
E. B. R.

மதனகாமேஸ்வர
லேகியம் (*Regd*)

பெயர்பெற்ற தாதுபுஷ்டி மருந்து இதுவே. ராத்தல் 1க்கு ரூ. 8. தபாற்செலவு 8 அணா. காலண்டரும் கியாட்லாக் இனாம். (ரிஜிஸ்டர்)

சித்தஔஷதசாலை
கம்பெனி K. A.
போஸ்டு மூல்லசேரி,
தென்மலையாளம்.

"சாமிகளின் அடிமை"

"இந்திய மாதா" என்னும் நூலை இயற்றிய மிஸ். மேயோவால் எழுதப்பட்ட ஆங்கில நூலின் மொழிபெயர்ப்பு. இதில் ஹிந்துக்கள் என்போரின் கடவுள், மதம் என்பவற்றன்பேரால் அநுஷ்டித்துவரும் கொடிய, அநாசாரபழக்க வழக்கங்களைக்கண்டுணரலாம். இனிய தமிழ், எளியநடை, ருசிகர கதைகள்.

அசல் விலை ரூ. 1—8—0.
இப்போதைய விலை ரூ. 0—12—0.

கிடைக்குமிடம்:—
குடி அரசு புத்தகசாலை, ஈரோடு.

குடி அரசுப் பதிப்பக வெளியீடுகள்.

கைவல்யம் அல்லது கலைக்கியானம்.

இது கைவல்ய சாமியாரவர்களால் எழுதப்பட்ட கட்டுரைகளைத் தொகுத்து வெளியிடப்பட்டது. இக்கட்டுரைகளைப் படிப்பதால் அனேக சாஸ்திர புராண, இதிகாசங்களையும் அவற்றில் உள்ள ஜாதிப்புரட்டு சமயப்புரட்டு, முதலியவைகளையும் உணர்ந்து நிகரற்ற பண்டித ராகலாம். இதன் விலை அணா. 0—8—0

இராமாயண ஆராய்ச்சி.

இதில் இராமாயணத்தின் ஆபாசங்களை அறியலாம். கம்பஇராமாயணம், வால்மீக இராமாயணம் இரண்டிலும் உள்ள ஊழல்களையும், ஒன்றற்கொன்று உள்ள வேறுபாடுகளையும் ஆராய்ந்து அவற்றில் உள்ள தெய்வீகப் புரட்டுகளை வெளியாக்குவது.

இதன் விலை முதற்பாகம் பாலகாண்டம் அணா. 0—4—0

இரண்டாம் பாகம் அயோதத்யா காண்டம் அணா. 0—8—0

ஞானசூரியன்.

இதில் வேதம், புராணம், ஸ்மிருதி முதலியவைகளின் ஆபாசங்களைக்காணலாம். மதங்களின் ஆபாசங்களையும், மதச்சடங்குகளின் ஆபாசங்களையும் அறியலாம். இதை ஒரு முறை படித்தால் ஆரியர்களின் புராதன நாகரீகத்தின் வண்டவாளம் முழுதும் தெரியும். பெரிய புத்தகம் 150 பக்கம். இதன் விலை அணா. 0—4—0

மநுநீதி மருமம்.

இது மநு தரும சாஸ்திரத்தில் உள்ள அநீதிகளையும், பார்ப்பனர், பார்ப்பனரல்லாதாரை அடிமைப்படுத்துவதற்கு ஏற்படுத்தியுள்ள சூழ்ச்சிகளையும் விளக்குவது. இதன் விலை அணா. 0—2—0

இராமலிங்க சுவாமிகள் பாடல் திரட்டு.

இது இராமலிங்க சுவாமியால் பாடிய அருட்பாவில், ஆறும் திருமுறையில் உள்ள பாடல்களிலிருந்து தொகுக்கப் பட்டது. இதில் உள்ள பாடல்களால், வேதம், புராணம், மதம் முதலியவைகளின் சூள்ச்சிகளையும், அவைகள் பொய் என்பதையும் உணரலாம். இதன் விலை அணா. 0—2—0

சுயமரியாதைத் தாலாட்டு.

இதில் தீண்டாமைக் கொடுமை, சாதி சமயக் கொடுமை, ஏழை பணக்காரக் கொடுமை முதலியவற்றைக் கண்டித்துக் கூறப்பட்டிருக்கிறது. இனிய பாடல் எளிதில் பொருள் விளங்கும். இதன் விலை அணா. 0—2—0

சோதிடப் புரட்டு.

இதில், சோதிடம் என்பது பொய் என்பதையும், பார்ப்பனர்களும், புரோகிதர்களும் ஜனசமூகத்தை ஏமாற்றுவது தான்சோதிடமென்பதையும் இனிமையான சுலபமான-பாடல்களால் விளக்கிக் கூறப்பட்டிருக்கிறது. இதன் விலை அணா. 0—2—0

ஈ. வெ. இராமசாமியின் சீர்திருத்த மகாநாட்டுச் சொற்பொழிவு.

இதில் ஜன சமூகம், சீர்திருத்தம் பெற்றுச் சுகமாக வாழ வேண்டியதற்கான வழிகளைக் காணலாம். மக்கள் அடிமைப்பட்டும் பகுத்தறிவின்றி வாழ்வதற்குக் காரணங்களை உணரலாம், ஈ. வெ. ராமசாமியின் சொற்பொழிவுகளில் இது தலை சிறந்ததாகும். இதன் விலை அணா. 0—2—0.

சுயமரியாதைப்பாடல்.

இதில் சுயமரியாதைக் கொள்கைகளை விளக்கி, இனிமையான புதிய வர்ணமெட்டுகளில் பாடிய பாடல்கள் அடங்கியுள்ளன. இதன் விலை அணா 0—2—0.

தர்மபரீக்ஷை அல்லது புராண ஆபாசம்.

இது ஒரு பழைய நூல். இதில் புராணங்களின் பொருத்தமற்ற கதைகளையும், முன்னுக்குப்பின் முரணான கொள்கைகளையும் தெள்ளத்தெளிய உணரலாம். இரண்டு இளைஞர்கள் மாறுவேடம் பூண்டு பொதுஜனங்களுக்குப் புராணப் புரட்டுகளை வெளிப்படுத்தும் முறையில் எழுதப்பட்டிருக்கிறது.

இதன் விலை அணா 0—3—0

பங்கஜம் அல்லது பார்ப்பனக்கொடுமை.

இது ஒருநாடகம், பார்ப்பனர்களின் புரட்டுக்களையும், ஜாதி வேற்றுமை, மதக்கொடுமை, சாஸ்திரக்கொடுமை முதலியவற்றையும் விளக்கிச் சமதர்மத்தைப் போதிப்பது. இதுவே தமிழில் உள்ள முதல் சுயமரியாதை நாடகம்.

இதன் விலை அணா 0—4—0

மேயோகூற்று மெய்யா? பொய்யா?

இது அமெரிக்க நாட்டு மாதாகிய "கன்னிமேயோ" எழுதியதிலுள்ள உண்மைகளையும், அதில் சொல்லப்படாமல் இருக்கும்—நமது நாட்டிலுள்ள வேறு பல ஆபாசங்களையும் எடுத்துக் காட்டிச் சீர்திருத்த வேண்டுமென்னும் உணர்ச்சியை உண்டாக்குவது.

இதன் விலை அணா 0—3—0

அகத்தியர் ஆராய்ச்சி.

இதில் முச்சங்கங்களின் புரட்டுக்களையும், அகத்தியர் சரத்திரப் புரட்டுக்களையும் தமிழ்நூல் ஆதாரங்களோடு விளக்கப்பட்டிருக்கிறது. சென்னை, பண்டிதர் கா. நமச்சிவாய முதலியாரால் எழுதப்பட்டது.

இதன் விலை அணா 0—2—0

கடவுளை நிந்திக்கும் கயவர்கள் யார்?

இதில், கடவுளை நிந்திப்பவர்கள் சுயமரியாதைக்காரர்கள் அல்லவென்றும், புராணமரியாதைக்காரர்கள் தான் கடவுளை நிந்திக்கும் கயவர்களென்றும், இதிகாசப் புராணங்களின் ஆதாரங்களைக்கொண்டே விளக்கிக் காட்டப்பட்டிருக்கிறது. பண்டிதர் அ. ராகவன் அவர்களால் எழுதப்பட்டது.

இதன் விலை அணா 0 2—0

கதர்-மூட நம்பிக்கை (இங்கிலீஷ்)

இதில், திரு. எஸ், ராமநாதன் அவர்கள் கதரைப்பற்றிச் செய்த உபந்யாசமும், அதற்குத் திருவாளர்கள், பட்டாபி சீத்தாராமையாவும், என் எஸ். வரதாச்சாரியும் எழுதிய மறுப்புரைகளும், அவைகளுக்கு எஸ். ராமநாதன் எழுதிய பதில்களும் ஆங்கிலத்தில் வெளியிடப்பட்டிருக்கின்றன. இதைப் படித்தால் கதர்ப் புரட்டை உணரலாம்.

இதன் விலை அணா 0—2—0

மானேஜர், குடி அரசு புத்தகாலயம், ஈரோடு.

உண்மை விளக்கம் பதிப்பகத்தில் அச்சிடப்பட்டு திருமதி நாகம்மாள் அவர்களால் வெளியிடப்பட்டது.